# தமிழரசு

செய்தி மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

ஏப்ரல் 2008

விலை ரூ.10/-





மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், தூத்துக்குடி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திருமதி.ராதிகா செல்வி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திருமதி.பெ.கீதா ஜீவன் மற்றும் முக்கிய பிரமுகர்கள் உள்ளனர்.(23-3-2008)



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், விருதுநகர் மாவட்டம் - இருக்கன்குடி அருகே சிறுகுளம் பகுதியில் 300 ஏக்கர் நெற்பயிர் தண்ணீரில் மூழ்கி பாதிக்கப்பட்டுள்ளதைப் பார்வையிட்டு அங்குள்ள பொதுமக்களிடம் குறைகளையும் கோரிக்கைகளையும் கேட்டறிந்தார். உடன் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு ஆகியோர் உள்ளனர். (23-3-2008)

# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2039
பங்குனி - சித்திரை / ஏப்ரல் 2008
மலர் : 39 இதழ் : 10

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு. ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**எஸ்.பி.எழிலழகன்**
**டி.ஆர். ஜெயஸ்ரீ**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**க. இராஜராஜேஸ்வரி**
**இரா. சுரேஷ்**
**வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிருபர்கள்

**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர்

**வி.இராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்,** ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

பிழை திருத்துபவர்

**வி.சந்தானம்**

சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in


**இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த**
**வகுத்தலும் வல்ல தரசு**



முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

## இந்த இதழில்...

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நிகழ்ச்சிகள்**


- மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கை 2008-2009 ........ 2
- சுமந்தவள் சுமந்த சோகம் - கலைஞரின் சங்கத்தமிழ் ........ 58
- தமிழகம் அமைதிப் பூங்காவாக இருப்பதற்கு மக்களுடைய ஒத்துழைப்பும் காவல்துறை நண்பர்களும்தான் காரணம் ........ 62
- உங்களுடைய வெற்றி; நீங்கள் கண்ட வெற்றி - நீங்கள் கண்ட பயன்... 70
- பெருமழையால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண நிதி வழங்கிட ரூ.175 கோடி ஒதுக்கீடு ........ 75


**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**
**திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் நிகழ்ச்சிகள்**


- மழைச் சேத விவர அறிக்கையை பேரவையில் தாக்கல் செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பல்வேறு நிவாரண உதவிகள் அறிவிப்பு ........ 67
- சென்னை மாநகரில் மூன்றாவது கட்டமாக 50,246 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படவுள்ளன ........ 79


முதலாம் பக்க அட்டை : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், சட்டப்பேரவையில் 2008-2009ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தார் (20-3-2008)



# நிதிநிலை அறிக்கை 2008 - 2009

**தமிழக அரசின் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், 2008–2009ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தை, 2008ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 20ஆம் நாள் சட்டமன்றப்பேரவை முன் வைத்து ஆற்றிய உரை.**

***மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,***

5.3.1997 அன்று இப்பேரவையில் 1997–1998 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை படித்தளித்த; நிதித் துறைக்கும் அன்று பொறுப்பேற்றிருந்த இன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தனது உரையைத் தொடங்கும்போது,

**"மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து"**

எனும் வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப, தடங்கல் நிறைந்த, கரடு முரடான பாதையில் பெரும் பாரத்தை எருது இழுத்துக் கொண்டு போவது போல, விடா முயற்சியுடன் செயல்பட்டால் துன்பங்களுக்கு முடிவு ஏற்பட்டு வெற்றி கிட்டும் என்கிற திட சித்தமுடன் அரசு செயல்படுவதாகக் குறிப்பிட்டு, அந்த நிதி நிலை அறிக்கையில் முடிவுரையாக,

"இந்தியத் திருநாட்டின் தென்கோடி முனையில் சோழ சாம்ராஜ்யத்தின்

புலிக்கொடி பட்டொளி வீசிப் பறந்த தஞ்சைத் தரணியில் திருக்குவளை என்ற கிராமத்தில் வேளாண் தொழில் ஈடுபாடும், இசைத் திறனும் கொண்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட ஒரு குடும்பத்தில் பிறந்து; இளம் வயதிலேயே தன்மான உணர்வும், தமிழ் மொழிப் பற்றும் மிகக் கொண்டு, தந்தை பெரியாருக்குத் தொண்டனாகவும், அறிஞர் அண்ணாவுக்குத் தம்பியாகவும், தமிழ்ப் பெருங்குடி மக்களுக்காக உழைக்கும் உடன்பிறப்பாகவும் என்னை ஆக்கிக் கொண்டு; பொதுவாழ்வில் ‘வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்’ என்ற சூளுரையுடனும், ‘கடலில் தூக்கி எறிந்தாலும் தமிழ் மக்கள் ஏறிச் சவாரி செய்யும் கட்டுமரமாக மிதப்பேன்’ என்ற கடமை உறுதியுடனும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, அடக்கப்பட்ட மக்களின் உரிமை வாழ்வு ஒன்றையே அல்லும் பகலும் நினைவிற் கொண்டு – அவர்களின் அணி வகுப்பில் ஒரு சிப்பாயாகப் பணியாற்றும் பேறு பெற்று; அவர்களின் உயர்வுக்கும், உரிமைக்கும் வழி வகுக்கும் ஆற்றலும் அக்கறையும் உள்ளவர்கள் முன்னேறிய பிரிவினரில் இருப்பின் அவர்களையும் அடையாளம் கண்டு, அரவணைத்து அவர்தம் துணையுடன் ஒடுக்கப்பட்டோர் உன்னத வாழ்வுக்காகவும், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் எனும் சபதம் என்றைக்கு நிறைவேறும் என்ற என் ஏக்கத்தை தூக்கத்திலும் கனவாகக் கண்டு, அக்கனவை நனவாக்க வேண்டும் என்பதற்காகவும், என் காலத்தில் அமைதி யானதும், அரிய வளம் கொழிப்பதும், அறிவாற்றல் சிறந்தோங்குவதுமான தமிழ்ச் சமுதாயத்தைக் காண வேண்டு மென்பதில் தணியாத ஆர்வத்தின் காரணமாகத் தயாரிக்கப்பட்டதே இந்த நிதிநிலை அறிக்கை” என்ற வார்த்தைகளுடன் அந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையினை எழுதி முடித்தவர்தான், இந்த 2008–2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினைக் கடந்த ஒரு திங்களாக மிகுந்த நேரத்தைச் செலவிட்டு இதனைத் தயாரித்திடும் பணியிலே என்னுடன் இணைந்து பெரும் பகுதியினைப் படைத்தளிக்கக் காரணமாக இருந்ததுடன்; அறிவித்துள்ளவற்றை ஆக்கபூர்வமாக ஆற்றலுடன் நிறைவேற்றுவதற்கு அருந்துணையாகத் தலைமையேற்று வழிநடத்துவதற்காக முதற்கண் நன்றி பாராட்டி விட்டு இந்த நிதிநிலை அறிக்கையை உங்கள் முன் உவகையுடன் வைக்கின்றேன்.

### வேளாண்மை மற்றும் கூட்டுறவு

2. “ஏர்ப்பின்னது உலகம்” என்று எம்மான் வைத்துள்ள முத்தாய்ப்புக்கு ஏற்ப வையத்து மக்களில் பெரும் பகுதியினர் ஈடுபாடு கொண்டுள்ளதும், குறிப்பாக நமது மண்ணின் மாந்தர்களை வாழவைப்பதுமான வேளாண் தொழிலில் இந்த அரசு கொண்டுள்ள நாட்டத்தையும் அதற்கென வழங்கும் ஊட்டத்தையும் பட்டியலிட்டால்; வேளாண் துறைக்குப் புத்துயிரூட்டும் வகையில், இந்த அரசு பொறுப்பேற்ற அன்றே விவசாயக் கூட்டுறவுக் கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்தது. அதற்கு அடுத்து, இந்த ஆண்டு நமது நாடெங்கிலும் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளின் வேளாண் கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்துள்ள மத்திய அரசை இந்த அரசு மனமாரப் பாராட்டுகிறது. இந்தப் போற்றத்தக்க முடிவிற்கு முன்னதாகவே; தமிழ்நாடு அரசு செய்த கூட்டுறவுக் கடன் தள்ளுபடிக்கான நிதியுதவியை மத்திய அரசு நமது மாநிலத்திற்கு நல்கும் என நம்புகிறோம். நமது மாநிலத்தில் சுமார் ரூபாய் 7,000 கோடி கூட்டுறவுக் கடன்கள் ரத்து செய்யப் பட்டதற்காக, கூட்டுறவு நிறுவனங்களுக்கு கடந்த இரண்டாண்டுகளில் மாநில அரசால் இதுவரை ரூபாய் 3,304 கோடி இழப்பீடு வழங்கி

ஈடுகட்டப்பட்டுள்ளது. வரும் 2008–2009 ஆம் நிதியாண்டிலும், கூட்டுறவு நிறுவனங்களுக்கு இந்த வகையில் மேலும் ரூபாய் 1,150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளினால், 2006–2007 ஆம் ஆண்டில் ரூபாய் 1,250 கோடியும், 2007–2008 ஆம் ஆண்டில் இதுவரை மேலும் ரூபாய் 1,177 கோடியும் புதிய பயிர்க் கடன்களாக வழங்கப்பட்டுள்ளன. **வரும் 2008–2009 ஆம் ஆண்டிற்கு மேலும் ரூபாய் 1,500 கோடி அளவில் புதிய பயிர்க் கடன்கள் வழங்க ஆவன செய்யப்படும்.**

3. வேளாண் கடன்களுக்கான வட்டி வீதத்தை 2006–2007 ஆம் ஆண்டில் 9 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாகக் குறைத்து, அதனைக் கடந்த நிதிநிலை அறிக்கையில் 5 சதவீதமாக மேலும் குறைத்து இந்த அரசு வழங்கி வருகிறது. **விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிர்க் கடனுக்கான வட்டி வீதம் 4 சதவீதமாக குறைக்கப்பட வேண்டும் என்ற பல வேளாண் பொருளாதார வல்லுநர்களின் கருத்தை ஏற்று, விவசாயத் தொழிலுக்கு மேலும் ஊக்கம் அளிக்க, வரும் நிதியாண்டிலிருந்து தற்போதுள்ள வட்டி வீதம் 5 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக குறைக்கப்படும்.**

4. இந்த அரசு பதவியேற்றது முதல் வேளாண் துறையை வளர்ச்சியடையச் செய்யவும் விவசாயிகளின் நலன் காக்கவும் எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக, 2005–2006 ஆம் ஆண்டில் 61.46 இலட்சம் டன்னாக இருந்த தமிழ்நாட்டின் உணவு தானிய உற்பத்தியானது, கடந்த 2006–2007 ஆம் ஆண்டில் 82.63 இலட்சம் டன்னாக உயர்ந்தது. தற்போதைய 2007–2008 ஆம் ஆண்டில், மாநிலத்தின் பல பகுதிகளில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள போதிலும், உணவு தானிய உற்பத்தி 100 இலட்சம் டன்னுக்கும் மேலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

5. விவசாய உற்பத்தியைப் பெருக்குவதோடு மட்டுமல்லாமல், விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கு உகந்த விலை கிடைக்கச் செய்யவும் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இந்த வகையில், விவசாயிகள் சாகுபடி செய்யும் நெல்லுக்கு உரிய விலை கிடைக்கச் செய்யும் நோக்கோடு; குவிண்டால் ஒன்றுக்கு, மத்திய அரசின் 100 ரூபாய் ஊக்கத் தொகையோடு சேர்த்து மாநில அரசின் ஊக்கத் தொகையாக கூடுதலாக 50 ரூபாய் வழங்கி, சன்ன ரக நெல்லுக்கான கொள்முதல் விலையை ரூபாய் 825 ஆக இந்த அரசு உயர்த்தி வழங்கி வருகிறது. கோதுமைக்கு இணையாக நெல்லுக்கும் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையின் அடிப்படையிலும், அண்மையில் விவசாய உற்பத்திச் செலவு மற்றும் விலை ஆணையம் பரிந்துரைத்ததன்படியும், நெல்லுக்கான கொள்முதல் விலையை ஆயிரம் ரூபாயாக நிர்ணயிக்க வேண்டும் என மத்திய அரசை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

6. கடந்த வடகிழக்குப் பருவமழைக் காலத்தின்போது ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் நமது மாநிலத்தில் ஒன்றரை இலட்சம் எக்டேர் அளவில் பயிரிடப்பட்ட நெல் மற்றும் பிற பயிர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டது. இந்த வெள்ள பாதிப்புக் குறித்து மத்திய அரசின் குழு பார்வையிட்டுச் சென்று, மத்திய அரசின் நிதியுதவி எதிர்பார்க்கப்படும் நிலையில், இதுவரை பாதிக்கப்பட்ட 3,60,954 விவசாயிகளுக்கு ரூபாய் 56.5 கோடி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

7. வறட்சி வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களால் விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்டும் வகையில், அவர்களுக்கு பயிர்க் காப்பீடு செய்துகொள்ள உதவும் நோக்கோடு, காப்பீட்டுத் தொகையில் 50 சதவீதத்தை அரசே வழங்கிடும் திட்டத்தை கடந்த ஆண்டு முதலே நாம் செயல்படுத்தி வருகிறோம். **பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இந்த திட்டத்தின் கீழ், வரும் நிதியாண்டில் 25 இலட்சம் விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீடு செய்துகொள்ள நிதியுதவி அளிக்கப்படும். இதற்காக ரூபாய் 40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

8. விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் நலன் காக்க, கடந்த 2000 ஆம் ஆண்டில் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியம் அன்றைய தி.மு.க. அரசால் அமைக்கப்பட்டது. பின்னர் கலைக்கப்பட்ட இந்த வாரியத்தை தற்போது மீண்டும் அமைத்து விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்குப் பல்வேறு உதவிகளை வழங்கும் விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு நலத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை ஒரு கோடியே 66 இலட்சம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு கல்வி உதவி, திருமண உதவி, ஓய்வூதியம், ஈமச் சடங்கு உதவி மற்றும் இழப்பீடு போன்ற பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. வரும் 2008–2009 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் இதற்காக ரூபாய் 152 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு, தரிசு நிலங்களைப் பண்படுத்தி இலவசமாக அளிக்கும் திட்டத்தின் கீழ், இதுவரை ஒரு இலட்சத்து 51 ஆயிரம் ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு ஒரு இலட்சத்து 78 ஆயிரம் ஏக்கர் நிலத்தை இந்த அரசு இலவசமாக வழங்கியுள்ளது. இந்த நிலங்களைத் தொடர்ந்து சாகுபடி செய்யும் வண்ணம், நீராதாரங்கள் ஏற்படுத்தப்பட்டு, மற்ற உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டுகளிலும் இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

10. குறைந்த அளவு நீரைப் பயன்படுத்தி உற்பத்திச் செலவைக் குறைத்து, அதிக விளைச்சலைத் தருவதற்குப் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முறை செம்மை நெல் சாகுபடி முறை (SRI). இம்முறையை விவசாயிகள் பின்பற்றினால், குறைந்த செலவில் அதிக நெல் உற்பத்தி செய்து, கூடுதல் வருவாய் பெற இயலும். இந்த அரசின் சீரிய முயற்சிகளால், நமது மாநிலத்தில் சுமார் 10 இலட்சம் ஏக்கருக்கும் மேலான நெற்சாகுபடி பரப்பில் இம்முறை தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. **வரும் நிதியாண்டில் 18.75 இலட்சம் ஏக்கர் பரப்பில் செம்மை நெல் சாகுபடி முறை கடைப்பிடிக்கப்படத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.**

11. மத்திய அரசின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் நமது மாநிலத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **இந்தத் திட்டத்தின் கீழ், நீரின் பயன்பாட்டு அளவைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல் உற்பத்தியைப் பெருக்கவும் உதவக் கூடிய துல்லியப் பண்ணை முறை (Precision farming) ரூபாய் 64 கோடி மதிப்பீட்டில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். 22 முக்கிய உழவர் சந்தைகளில், விற்பனைக்கான காய்கறிகள் மற்றும் பழங்கள் போன்றவற்றைப் பாதுகாத்திடத் தேவையான குளிர்பதன வசதிகள், தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம் மூலமாக அமைக்கப்படும்.**

12. வேளாண் உற்பத்தியைப் பெருக்க, விவசாயப் பணிகளில் தேவைப்படும் இடங்களில் இயந்திரங்களின் அவசியத்தை உணர்ந்து, நெல் நடவு, கரும்பு அறுவடை போன்ற பணிகளில் அவற்றைப் பயன்படுத்த விவசாயிகளுக்கு இந்த அரசு உதவும். **இத்தகைய இயந்திரங்களை வாங்கிப் பயன்படுத்த முன்வரும் விவசாயிகளுக்கு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 25 சதவீத மானியம் இனி வழங்கப்படும். மேலும், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை உற்பத்தி செய்யும் தொழில் முனைவோருக்கு இந்த**



**அரசின் தொழிற் கொள்கையில் அறிவிக்கப் பட்டுள்ள சலுகைகளோடு கூடுதலாகத் தேவைப்படும் சலுகைகள் வழங்கப்படும்.**

13. நெல் மற்றும் பயறு வகைகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை ஆகிய 5 மாவட்டங்களில் நெல் உற்பத்திக்காகவும்; கோயம்புத்தூர், கடலூர், ஈரோடு, நாகப்பட்டினம், நாமக்கல், திருவள்ளூர், திருவாரூர், தூத்துக்குடி, திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 12 மாவட்டங்களில் பயறு வகைப் பயிர்களுக் காகவும் தொடங்கப்பட்டுள்ளது. தரமான விதைகள், வீரிய ஒட்டு ரகங்கள், ஒருங்கிணைந்த உரம் மற்றும் பூச்சி நிர்வாகம் மற்றும் செம்மை நெல் சாகுபடி ஆகியவற்றின் மூலமாக இம்மாவட்டங் களில் நெல் மற்றும் பயறு வகைகளின் உற்பத்தியைப் பெருக்க ஆவன செய்யப்படும். **பயறு வகைகளைப் பயிரிட நமது விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், வரும் ஆண்டிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ஆகியன, மத்திய அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலையில் பயறு வகைகளைக் கொள்முதல் செய்யும்.**

14. அதிக வருவாயை ஈட்டித் தரும் தோட்டப் பயிர்களைச் சாகுபடி செய்ய, விவசாயிகளை ஊக்குவிக்கும் தேசியத் தோட்டக்கலை இயக்கத் திட்டம், 2007–2008 ஆம் ஆண்டில் மேலும் 6 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு, தற்போது மொத்தம் 20 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கரும்பு மற்றும் தோட்டக்கலைப் பயிர் சாகுபடியின்போது நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் வகையில், சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் வசதிகளை அமைக்க 50 சதவீத மானிய உதவி வழங்கும் நுண்ணீர்ப் பாசனத் திட்டம் தமிழகத்தின் அனைத்து மாவட்டங் களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2007–2008 ஆம் ஆண்டில் ரூபாய் 169 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் இத்திட்டம், வரும் ஆண்டிலும் தொடரும்.

15. எண்ணெய்ப் பனையைப் (Oil Palm) பயிரிட்டு, எண்ணெய் உற்பத்தியைப் பெருக்கத் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. விழுப்புரம், திருநெல்வேலி, தேனி, தூத்துக்குடி மற்றும் வேலூர் மாவட்டங்களில் எண்ணெய் பிழியும் ஆலைகளை அமைக்கும் நிறுவனங்களோடு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இதனால், மாநிலத்தின் எண்ணெய்த் தேவை நிறைவு செய்யப் படுவதோடு, விவசாயிகளுக்கு அதிக வருவாய் கிடைக்கவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

**16. தமிழகத்தில் சிறப்பாகச் செயல்பட்டுவரும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் போலவே, நமது விவசாயிகளும் செயல்படின் பல்வேறு பயன்களைப் பெற இயலும் எனக் கருதி, வரும் நிதியாண்டில் விவசாயிகள் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும். முதற்கட்டமாக, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் பயிர்க் கடன் பெறும் ஒரு இலட்சம் விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்ட பத்தாயிரம் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படும்.** இக்குழுக்கள் கூட்டுப் பொறுப்புடைய அமைப்புகளாக (Joint Liability



Groups) செயல்பட்டு கூட்டுறவு வங்கிகள் மற்றும் பொதுத் துறை வங்கிகளிடமிருந்து எளிதில் கடன் பெற இயலும். **இந்தக் குழுக்களுக்குச் சுழல் நிதியாக அரசின் சார்பில் ரூபாய் 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படும்.** இதன் மூலம், இந்த குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள், தங்களின் அவசரத் தேவைகளுக்கான கடனையும் குழுவிடமிருந்தே பெறலாம். இதுமட்டுமன்றி, உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து வேளாண் இடுபொருட்களைக் குறைந்த விலையில் வாங்கவும், விளைபொருட்களை நல்ல விலைக்கு விற்கவும் வாய்ப்பு உருவாகும்.

17. 1990 ஆம் ஆண்டில் தி.மு.க. அரசால் கொண்டுவரப்பட்ட, அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காகத் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு அரசின் மானிய உதவியாக ரூபாய் 268 கோடி இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கால்நடை வளர்ப்பு

18. விவசாயிகளின் செல்வமாக விளங்குகின்ற கால்நடைகளின் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 2007–2008 ஆம் ஆண்டில், இதுவரை 5,192 கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 63 இலட்சம் கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. 2008–2009 ஆம் ஆண்டில் 65 இலட்சம் கால்நடைகள் பயன்பெறும் வகையில் 5,500 கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்தப்படும். வரும் ஆண்டில், 261 கால்நடை மருத்துவர்களும், 1,317 கால்நடைப் பராமரிப்பு உதவியாளர்களும் பணியமர்த்தப்படுவர். நமது நாட்டின் சில மாநிலங்களில் பறவைக் காய்ச்சல் நோய் பரவியுள்ள நிலையில், கோழி மற்றும் முட்டை உற்பத்தியில் முன்னணி மாநிலமான தமிழகத்தில், அந்த நோய் பரவாமல் தடுக்க இந்த அரசு விழிப்பாகக் கண்காணித்து, தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

19. பால் உற்பத்தியில் தமிழகம் முன்னணி மாநிலமாக விளங்கி வருகிறது. **பால் உற்பத்தியை மேலும் பெருக்கவும், பால் உற்பத்தி செய்யும் விவசாயக் குடும்பங்கள் கூடுதல் வருவாய் பெறும் வகையிலும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 10,000 உயர் கலப்பினக் கறவை மாடுகள் வழங்கும் புதிய திட்டம் ஒன்றை, இந்த அரசு செயல்படுத்தும். நமது மாநிலத்தில் பால் உற்பத்தி செய்யத் தகுந்த 200 கிராமங்களில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் மூலமாக, வரும் இரண்டாண்டுகளில் ரூபாய் 22 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதனால் 5,000 மகளிர் பயனடைவர்.**

## பாசனம் மற்றும் வெள்ளத் தடுப்பு

20. தமிழகத்தின் உயிர்நாடியாகிய காவிரி நதியின் நீர் பங்கீட்டுப் பிரச்சினை குறித்த நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு கிடைத்தும், அதைச் செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள தடைகளைக் களையத் தகுந்த சட்டபூர்வ நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. இதுமட்டுமன்றி, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்துவது மற்றும் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்கான முயற்சி போன்ற, நமது மாநிலத்தின் விவசாயிகளைப் பாதிக்கக்கூடிய நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினைகளில், அவர்களது உரிமைகளை முழுமையாகப் பாதுகாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

21. தமிழ்நாட்டில் உள்ள பாசன வேளாண்மை மற்றும் நீர் ஆதாரங்களை மேம்படுத்தி, 15.4 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பயன்பெறச் செய்யும் நோக்கோடு, உலக வங்கி உதவியுடன் ரூபாய் 2,547 கோடி மதிப்பீட்டில் நீர்வள நிலவளத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2007–2008 ஆம் ஆண்டில்,

இத்திட்டப்பணிகள் 9 துணை வடிநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2008–2009 ஆம் ஆண்டில் மேலும் 16 துணை வடிநிலங்களில் பணிகள் மேற்கொள்ளப்படும். இவ்விரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும் பணிகளால் 9.4 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். வேளாண் வளர்ச்சிக்குத் துணைபுரியும் பல்வேறு துறைகளின் பணிகளை ஒருங்கிணைத்துச் செயல்படுத்தப்படுகிற இத்திட்டத்தின் வாயிலாக, பாசனப் பரப்பு அதிகரிப்பதோடு, விளைபொருள் உற்பத்தித் திறனும் விவசாயிகளின் வருவாயும் உயரும். இத்திட்டத்திற்காக 2008–2009 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 585 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

22. காவிரி பாசனப் பகுதி மற்றும் பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டப் பகுதி ஆகியவற்றில் உள்ள முக்கியக் கால்வாய்களைச் சீரமைப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, **அப்பகுதிகளில் உள்ள முக்கியக் கால்வாய்களான கல்லணைக் கால்வாய் ரூபாய் 150 கோடி மதிப்பீட்டிலும், காளிங்கராயன் கால்வாய் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டிலும் மேம்படுத்தப்படும்.**

23. தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் நீர் பற்றாக்குறை பிரச்சினைகளுக்கும், நதி நீர் பங்கீட்டுப் பிரச்சினைகளுக்கும், தேசிய நதிகள் இணைப்புத் திட்டமே ஒரே தீர்வாகும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஒருமித்த கருத்து எட்டப்படாத நிலையில்; இதன் முதற்கட்டமாக, மாநிலங்களுக்குள் பாயும் ஆறுகளை இணைக்கும் திட்டங்களையாவது செயல்படுத்த மத்திய அரசு நிதியுதவி வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். இதனை ஏற்று, மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட பாசன உதவித் திட்டத்தின் கீழ் இத்தகைய பணிகளுக்கு நிதியுதவி வழங்க தேசிய வளர்ச்சிக் குழு ஒப்புதல் அளித்துள்ள நிலையில்; அந்த நிதியுதவியை எதிர்நோக்கி, **மாநில அரசின் நிதியிலிருந்து, தமிழ்நாட்டில் பாயும் பின்வரும் நதி இணைப்புகளுக்கான பணிகள் வரும் 2008–2009 ஆம் நிதியாண்டில் தொடங்கப்படும்.**

**(1) வெள்ளக் காலங்களில் காவிரி ஆற்றில் பெருகும் உபரி நீரை, வறண்ட மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதற்கான காவிரி – அக்னியாறு – கோரையாறு – பாம்பாறு – வைகை – குண்டாறு இணைப்புத் திட்டத்தின் முதற்கட்டமாக; காவிரியாற்றின் குறுக்கே கட்டளைப் பகுதியில் கதவணை அமைக்கும் திட்டம் ரூபாய் 165 கோடி மதிப்பீட்டில் செயல் படுத்தப்படும். இத்திட்டத்தின் அடுத்த கட்டமாக, இந்நதிகளை இணைப்பதற்கான 255 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய்கள் அமைப்பது குறித்து தயாரிக்கப் பட்டு வரும் விரிவான திட்ட அறிக்கையின் அடிப்படையில் கால்வாய் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

**(2) தாமிரபரணி ஆற்றின் உபரி நீரை தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் வறண்ட பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கான தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு இணைப்புத் திட்டம் ரூபாய் 369 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

24. நிலத்தடி நீர் அளவுக்கு அதிகமாக உறிஞ்சப்படுவதால், தமிழ்நாட்டின் 385 வட்டாரங்களுள் 232 வட்டாரங்களில் நிலத்தடி நீர்வளம் பெருமளவிற்குக் குறைந்துள்ளது. இந்நிலையை மாற்றும் நோக்கத்தோடு, இப்பகுதிகளில் பருவ காலங்களின் போது வீணாகும் நீரை தடுப்பணைகள் மூலமாகச் சேமித்து, ஆண்டு முழுவதும் பயன்படுத்துவதற்கான திட்டத்தை

ஆளுநர் உரையில் அண்மையில் இந்த அரசு அறிவித்தது.

25. இத்திட்டத்தின் கீழ் மாநிலமெங்கும் உள்ள ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் ஓடைகளின் குறுக்கே, 48,500 தடுப்பணைகள், ஊருணிகள் ஆகியவற்றை அமைத்து நீரைச் சேமிப்பதற்கான பெரும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. **சுமார் ரூபாய் 550 கோடி மதிப்பீட்டிலான இத்திட்டம், நீர்வள ஆதாரத்துறை, வேளாண் பொறியியல் துறை, வனத்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக, பொதுநல அமைப்புகள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்புடன் வரும் நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்படும்.** முதற்கட்டமாக, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் இதற்காக ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

26. கடந்த 2006–2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டவாறு, மதுரை மாநகரப் பகுதிகளில் ஏற்படும் வெள்ளப் பெருக்கை தடுப்பதற்கான திட்டத்திற்கு நபார்டு வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. **வரும் நிதியாண்டில் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் இத்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், கரூர், திருச்சி, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில், காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளில் நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள் ரூபாய் 211 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

27. வேளாண்மைத் துறை, கால்நடை, பால்வளம் மற்றும் மீனளத் துறை, கூட்டுறவுத் துறை, பொதுப்பணித் துறை, வருவாய்த் துறை போன்ற துறைகள் உள்ளிட்ட பல துறைகளில் வேளாண் வளர்ச்சியையும் விவசாயிகள் நலனையும் உறுதி செய்வதற்கான பல திட்டங்களுக்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. உழுவோருக்கு இந்த அரசு அளித்துவரும் முக்கியத்துவத்தையும், ஒதுக்கீடு செய்துள்ள மொத்த நிதியையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தெரிந்துகொள்ளும் வகையில், முதன்முறையாக இந்த வரவு–செலவுத் திட்ட இணைப்புகளில், வேளாண் துறைக்கான ஒதுக்கீடுகளைக் காட்டும் தனி விவர அறிக்கை (எண். 22 ) தரப்பட்டுள்ளது. இதிலிருந்து, வேளாண் துறைக்கு இந்த அரசு ரூபாய் 4,792 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை தெரிந்துகொள்ளலாம்.

## பொது விநியோகத் திட்டம்

28. நமது நாட்டிலேயே மிகக் குறைவான விலையில் இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசியை இந்த அரசு வழங்கி வருகிறது. ஏழை எளியோரின் பசிப்பிணி போக்கவும், வெளிச்சந்தையில் அரிசியின் விலை உயராமல் கட்டுப்படுத்தவும் வழிவகுத்துள்ள இந்த முன்னோடித் திட்டத்தை, நமது நாட்டில் உள்ள மற்ற சில மாநிலங்களும் தற்போது செயல்படுத்த முனைந்துள்ளன. இது மட்டுமன்றி, பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசிய உணவுப் பொருட்களாகிய துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் மற்றும் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு போன்றவற்றை அரசே கொள்முதல் செய்து, நியாயவிலைக் கடைகள் மூலமாக குறைந்த விலையில் வழங்குவதற்கான சிறப்புத் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. இவற்றைத் தொடர்ந்து செயல்படுத்திட, இந்த அத்தியாவசிய உணவுப் பொருள்களின் மானியத்திற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 1,950 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

29. ஏழை – எளிய மக்களுக்குப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரசு வழங்கும் அரிசியைக் கடத்தி, கள்ளச் சந்தையில் விற்கும் கயமைச் செயலை ஒழிப்பதற்காக இந்த அரசு கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தகுதியுள்ளோர் அனைவருக்கும் புதிய குடும்ப அட்டைகளை காலதாமதமின்றி வழங்குவதற்காக மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலேயே குடும்ப அட்டைகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு முழுவதும் பொது விநியோகத் திட்டப்பணிகளைக் கணினிமயமாக்க,

ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் மின்னணு சேவைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## சட்டம் ஒழுங்கு

30. தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலையாமல் இந்த அரசு விழிப்புணர்வுடன் செயலாற்றி வருகிறது. அண்டை மாநிலங்களிலிருந்தும் நமது மாநிலத்தின் கடலோரங்களிலிருந்தும் தீவிரவாதம் மாநிலத்திற்குள் ஊடுருவாமல் இருக்க, மிகுந்த எச்சரிக்கையுடன் காவல்துறை கண்காணித்து வருகிறது. சட்ட விரோதமான இயக்கங்கள் எதுவாயினும் அவை தமிழ்நாட்டில் தலையெடுத்திடாமல் தடுத்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு இன்று போல் என்றும் தொடர்ந்து எடுக்கும்.

31. காவல் துறையைச் சீரமைக்கவும், காவலர்களின் நலன் பேணவும் இந்த அரசால் ஏற்கெனவே அமைக்கப்பட்ட இரண்டு போலீஸ் கமிஷன்களைத் தொடர்ந்து, தற்போது அமைக்கப்பட்ட மூன்றாவது போலீஸ் கமிஷன் தனது அறிக்கையை அரசிடம் அளித்துள்ளது. இந்த அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் அனைத்தும் ஆய்வு செய்யப்பட்டு காவல் துறை மேலும் செம்மையாகச் செயல்பட ஆவன செய்யப்படும். காவல் துறையை நவீனமாக்கும் திட்டத்தின் கீழ், தற்போது ரூபாய் 68 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. **குற்றங்கள் மற்றும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் குறித்த அவசரத் தகவல்களை உடனுக்குடன் தெரியப்படுத்த ஏதுவாக, வரும் நிதியாண்டில் மாநிலத்தில் உள்ள அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் அகண்ட அலைவரிசை இணைய இணைப்பு** (Broad Band Internet) **வழங்கப்படும்.** மொத்தமாக 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 1,346 கோடியாக இருந்த காவல்துறைக்கான நிதி ஒதுக்கீடு, 2008–2009 ஆம் நிதியாண்டில் ரூபாய் 2,427 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

## போக்குவரத்துப் பாதுகாப்பு

32. தொடர்ந்து நடைபெறும் சாலை விபத்துகளும் அவற்றில் பல உயிர்கள் பலியாவதும் மிகுந்த வேதனையை ஏற்படுத்துகிறது. இத்தகைய விபத்துக்களைத் தடுப்பதற்கும் உயிரிழப்புகளை குறைப்பதற்கும் பின்வரும் நடவடிக்கைகள் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்:

- **மாநிலத்தில் தேசிய நெடுஞ் சாலைகளில் உள்ள சாலை சந்திப்புகளில் அதிக அளவில் விபத்துகள் நடைபெறுவதைக் கருத்தில் கொண்டு, அத்தகைய சாலைச் சந்திப்புகளைக் கண்டறிந்து; அவற்றில் வேகத்தடைகள், அறிவிப்புப் பலகைகள் மற்றும் விளக்கு வசதிகளை அமைக்க, இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். இப்பணிகள் நெடுஞ்சாலைத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் வாயிலாக மேற்கொள்ளப்படும்.**
- **சாலை விதிகளைச் சரியாகப் பின்பற்றாமல் வாகனங்களை ஓட்டுவது சாலை விபத்துகளுக்கு ஒரு முக்கிய காரணம் என்பதால், ஓட்டுநர்களுக்கு இது குறித்து பயிற்சிகள் அளிக்கப்படும்.**
- **எந்தவித விபத்துமின்றி வாகனங்களை ஓட்டும் அரசுப் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களுக்கு பதக்கங்களும் ரொக்கப்பரிசும் வழங்கப்படும். இது குறித்த விவரங்கள் மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்படும்.**

- **சாலைப் பாதுகாப்பு நிதிக்கான மாநில அரசின் நிதி ஒதுக்கீடு ரூபாய் 6 கோடியிலிருந்து இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 10 கோடியாக உயர்த்தப் பட்டு, விபத்துத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

- **மத்திய அரசின் நிதியுதவியோடு, சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் ரூபாய் 8 கோடி செலவிலும், வேலூர் மருத்துவக் கல்லூரியில் ரூபாய் 7 கோடி செலவிலும், கிருஷ்ணகிரி மாவட்ட தலைமை மருத்துவமனையில் ரூபாய் 3 கோடி செலவிலும், அவசர விபத்து சிகிச்சை மையங்கள் அமைக்கப்படும்.**

## நீதிமன்றங்கள்

33. நீதிமன்றங்களுக்குத் தேவையான கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகளை அமைப்பதற்கு இந்த அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. இந்த அரசு பதவியேற்றது முதல் இதுவரை ரூபாய் 102 கோடி மதிப்பீட்டிலான நீதித்துறைக் கட்டடப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. **இவற்றைத் தவிர, வரும் நிதியாண்டிலும் ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் மேலும் புதிய பணிகள் மேற்கொள்ளப்படும்.** மொத்தமாக, நீதித் துறைக்கு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 316 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## புதிய சட்டமன்ற வளாகம்

34. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 50 ஆண்டு கால சட்டமன்றப் பணியைப் பாராட்டி நிகழ்ந்த பொன்விழாவின் போது, சென்னை அரசினர் தோட்டத்தில் புதிய சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலக வளாகம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. ரூபாய் 200 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள இந்த வளாகத்தை, நமது பாரம்பரிய திராவிட கட்டடக் கலை முறையில் வடிவமைத்திடுவதற்கான கட்டட வடிவமைப்பு நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும். இப்பணிகளுக்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சேது சமுத்திரத் திட்டம்

35. தமிழக மக்களின் நீண்டகாலக் கனவாக விளங்குவதும், பல ஆய்வுகளின் மூலமாகச் சாத்தியக் கூறுகள் கண்டறியப்பட்டு, வல்லுநர்களால் வரவேற்கப்பட்டதுமான சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றும் பணியில்; உள்நோக்கத்துடன் அரசியல் அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ள தடைகளை விலக்கி; தமிழ்நாடும் இந்தியத் திருநாடும் மேலும் வளமும் வலிவும் பெறுவதற்குப் பயன்படக்கூடிய இத்திட்டத்தை விரைந்து நிறைவேற்றிட வேண்டும் என்று மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

## பள்ளிக் கல்வி

36. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, தொகுப்பூதியம் பெற்று வந்த 45,987 ஆசிரியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கப்பட்டுள்ளதோடு, காலியாக இருந்த 21,574 ஆசிரியர் பணியிடங்களும் நிரப்பப் பட்டுள்ளன. இது மட்டுமன்றி, 7,979 புதிய ஆசிரியர்கள் பணியிடங்களும் தோற்றுவிக்கப் பட்டு நிரப்பப்பட்டு வருகின்றன. மாணவர்கள் பாடங்களை எளிதில் புரிந்து கற்க உதவும் செயல்வழிக் கல்வி முறை மாநிலத்தில் உள்ள அனைத்துத் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. **வரும் கல்வியாண்டில் 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும்.**

37. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் உள்ள கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான பணிகளை இந்த அரசு நிறைவேற்றி வருகிறது. தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவையான வகுப்பறைகள் பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்டு வருகின்றன. 343 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான கட்டடங்கள் நபார்டு வங்கியின் உதவியுடன் கட்டப்பட்டு வருகின்றன. இதுமட்டுமன்றி மாநிலமெங்கும் உள்ள பள்ளிகளுக்கு மேசைகள், இருக்கைகள் மற்றும் நாற்காலிகள் ரூபாய் 69 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டு வருகின்றன. **வரும் நிதியாண்டில் மேலும் 450 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான கட்டடங்கள் ரூபாய் 312 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் நிதியுதவி பெற்றுக் கட்டப்படும்.** இத்தகைய பள்ளிக் கட்டடப் பணிகளுக்காக வரும் நிதியாண்டில் ரூபாய் 150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

38. அனைவருக்கும் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்துவதில் முன்னணி மாநிலமாகத் தமிழகம் விளங்கி வருகிறது. இத்திட்டம் வரும் நிதியாண்டில், ரூபாய் 800 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இதற்காக, மாநில அரசின் பங்காக வரும் நிதியாண்டிற்கு ரூபாய் 280 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **தமிழ்நாட்டில் அனைவருக்கும் தொடக்கக் கல்வி உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வி கிடைக்கச் செய்யும் இலக்கை எய்தும் நோக்கத்தோடு, மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய (Scheme of Access to and Improvement of Quality of Education at Secondary Stage - SUCCESS) திட்டத்தை வரும் ஆண்டிலிருந்து இந்த அரசு சிறப்பாகச் செயல்படுத்தும். இத்திட்டத்திற்கான மாநில அரசின் பங்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

39. வரும் நிதியாண்டில் மாணவர்களுக்கு இலவசப் பாடநூல் வழங்கும் திட்டத்திற்காக ரூபாய் 54 கோடியும், இலவசச் சீருடை வழங்கும் திட்டத்திற்காக ரூபாய் 58 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பதினொன்றாம் வகுப்பில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்திற்காக ரூபாய் 112 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது மட்டுமன்றி, மாணவர்களுக்கான இலவச மற்றும் சலுகைக் கட்டணத்தில் பேருந்துப் பயணச்சீட்டு வழங்க அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு மானியமாக ரூபாய் 300 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தமாக, 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 4,110 கோடியாக இருந்த பள்ளிக் கல்வித் துறைக்கான ஒதுக்கீடு, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 7,852 கோடியாக உயர்ந்துள்ளது.

**40. அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் கணிதத் திறனை மேம்படுத்தும் வண்ணம், வரும் கல்வியாண்டில் மாநிலத்தில் உள்ள 100 பள்ளிகளில் கணித ஆய்வகங்கள் அமைக்கப்படும். 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வக சாதனங்களும், 100 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் சாதனங்களும் வழங்கப்படும். 500 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி உதவியுடனான மொழி ஆய்வகங்கள் அமைக்கப்படும். இதுமட்டுமன்றி, 100 உயர்நிலைப் பள்ளிகளிலும் 100 மேல்நிலைப் பள்ளிகளிலும் நூலக வசதிகள் மேம்படுத்தப் படும்.**

41. ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் இயங்கும் பள்ளிகளை மேம்படுத்த இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சென்ற ஆண்டு ரூபாய் 103 கோடி செலவில் மாநிலத்தில் உள்ள 11,076 பள்ளிகளில் பழுதுபார்ப்புப் பணிகள், கழிவறைகள் அமைத்தல் போன்ற பணிகள் ஊரக வளர்ச்சித் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டன. 2008–2009 ஆம் நிதியாண்டிலும் ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் 11,000 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**42. 1999–2000** ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சி காலத்தில்தான் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப் பாடம் அறிமுகப்படுத்தப் பட்டது. இந்த அரசு 2006 ஆம் ஆண்டில் மீண்டும் பொறுப்பேற்ற பிறகு, கடந்த இரண்டு ஆண்டுகளில் மாநிலத்தில் உள்ள 1,880 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 1,525 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. **வரும் நிதியாண்டில் எஞ்சியுள்ள 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 606 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்கவும், அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் 6,650 நடுநிலைப் பள்ளிகளில் முதற்கட்டமாக 2,200 பள்ளிகளுக்குக் கணினிகள் அளிக்கவும், இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 71 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்வழிக் கல்வியில் பயின்று பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் 1,000 மாணவ மாணவியர்களுக்கு ஊக்கப் பரிசாக கணினிகள் அளிப்பதற்கான இந்த அரசின் புதிய திட்டத்திற்காக வரும் நிதியாண்டில் ரூபாய் 2 கோடியே 37 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**43.** தமிழக அரசின் மேலாண்மையின் கீழ் இயங்கும், அனைத்து வகைப் பள்ளிகளிலும் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் தலைசிறந்த தரமான கல்வியை உறுதி செய்திட, பள்ளிக் கல்விக்கான ஒரே மாதிரியான கல்வி முறை, ஒரே மாதிரியான பாடத் திட்டம் (Syllabus), ஒரே மாதிரியான பாடப் புத்தகங்கள், கல்விக் கோட்பாட்டிற்கு உகந்த தேர்வு முறை, சிறந்த ஆசிரியர்கள் மூலம் மாணவர்களை மையமாக வைத்துச் செயல்படும் கற்றல், கற்பித்தல் நிகழ்வுகளை உள்ளடக்கிய வகுப்பறை ஆகியவற்றை ஒரே மாதிரியாக வடிவமைத்து, அதன் மூலம் ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்கும் சமச்சீர் கல்வி முறையை இந்த அரசு செயல்படுத்த உறுதி பூண்டுள்ளது. இதற்கான திட்டங்கள், கல்வி முறை, பாடத் திட்டம், பாடப் புத்தகங்கள் தயாரித்தல் உள்ளடங்கிய பணிகள் வரும் கல்வி ஆண்டிலேயே (2008–2009) மேற்கொள்ளப்படும். இந்தியத் துணைக் கண்டத்திலேயே முன்னோடியாகத் தமிழகத்தில் சமச்சீர் கல்வி முறை மூலம் மிகச் சிறந்த மாணவ சமுதாயத்தையும், அதன் மூலம் தன்னிகரில்லாத தமிழ்ச் சமுதாயத்தையும் இந்த அரசு உருவாக்கும்.

**44.** தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் பயிலும் மாணவர்களுக்கு, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கு ரூபாய் 115 ஆகவும், பன்னிரெண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வுக்கு




ரூபாய் 225 வரையும் இருந்த தேர்வுக் கட்டணத்தை கடந்த ஆண்டு இந்த அரசு ரத்து செய்தது. இப்பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாவது வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர் தற்போது ரூபாய் 33–லிருந்து ரூபாய் 103 வரை ஆண்டுதோறும் சிறப்புக் கட்டணமாக (Special Fees) செலுத்த வேண்டியுள்ளது. **அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் முற்றிலும் இலவசக் கல்வி அளிக்கும் நோக்குடன், இச்சிறப்புக் கட்டணமும் வரும் கல்வி ஆண்டிலிருந்து ரத்து செய்யப்படும். இதனால், இப்பள்ளிகளில் பயிலும் சுமார் 50 இலட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைவர். அத்துடன் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் 21 ஆயிரம் மாணவர்கள் ஆண்டுதோறும் செலுத்திவரும் ரூபாய் 1,200 சிறப்புக் கட்டணமும் ரத்து செய்யப்படும்.**

## நூலகங்கள்

45. ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களும், சாதாரண பொது மக்களும்கூட கிடைத்தற்கரிய நூல்களைப் படித்துப் பயனடைந்திடும் வகையில், சென்னையில் சர்வதேசத் தரத்திலான நவீன மாநில நூலகம் ஒன்று ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என இந்த அரசு கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருந்தது. இந்த நூலகத்திற்கான இடமும், வடிவமைப்பும் முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இதற்கான பணிகள் வரும் நிதியாண்டில் தொடங்கப்படும். **புத்தகப் பதிப்பாளர்கள், புத்தக விற்பனையாளர்கள் மற்றும் அத்துறையில் பணிபுரிவோர் நலன் காத்திட, அவர்களுக்கென தனி நலவாரியம் ஒன்றை இந்த அரசு அமைக்கும்.**

## உயர்கல்வி

46. இந்த அரசு பொறுப்பேற்றபின், மாணவர்களுக்குத் தேவையற்ற சுமையாக இருந்த பொது நுழைவுத் தேர்வை அகற்றி, கிராமப்புர மற்றும் ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் தொழிற்கல்வி பயில வழிவகுத்துள்ளது. மாநிலத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலைப் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கட்டணம் ரத்து செய்யப்பட்டுள்ளதோடு, முந்தைய ஆண்டுகளில், அரசுக் கல்லூரிகளில் துவக்கப்பட்ட சுயநிதிப் பாடப்பிரிவுகள் அனைத்தும் பொதுப் பாடப்பிரிவுகளாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

47. கடந்த இரண்டு ஆண்டுகளில் மாநிலத்தின் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாற்று முறை (shift system) தொடங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் 500 கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. **இக்கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அவர்களது இடத் தேவை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மேலும் 500 கூடுதல் வகுப்பறைகள் ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் வரும் நிதியாண்டில் கட்டப்படும். மேலும், அனைத்து அரசு மகளிர் கல்லூரிகளுக்கும் சுற்றுச் சுவர்கள் மற்றும் அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் போதிய கழிப்பறை வசதிகள், ரூபாய் 8.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

48. படிப்பைத் தொடர இயலாமல் இடையில் நிறுத்திய ஏழை மாணவர்கள், வேலைவாய்ப்புகளைப் பெறத் தேவையான தொழிற்பயிற்சிகளை அளிப்பதில், சமுதாயக் கல்லூரிகள் சிறந்த பணியாற்றி வருகின்றன. **வரும் கல்வி ஆண்டிலிருந்து, இக்கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபாய் என்ற அடிப்படையில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் மூலமாக அரசு இக்கல்லூரிகளுக்கு மாணவருக்கான உதவித் தொகை வழங்கும்.** இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் ஆண்டுதோறும் 10,000 ஏழை மாணவர்கள் பயன்பெறுவர்.

49. தொழில்நுட்பக் கல்வியை விரிவாக அளித்திட திருச்சி, கோவை மற்றும் திருநெல்வேலி மாநகரங்களில் மூன்று புதிய



தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் அமைக்கப் பட்டுள்ளன. **அதிக எண்ணிக்கையில் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவ மாணவியர் குறைந்த செலவில் பொறியியல் கல்வி பயில உதவும் நோக்கத்தோடு, திண்டிவனம், விழுப்புரம், பண்ணுருட்டி, நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் புதிய பொறியியல் கல்லூரிகள் அண்ணா பல்கலைக்கழகங்கள் மூலமாக அமைக்கப்படும். இது மட்டுமன்றி, தற்போதுள்ள அரசு பொறியியல் கல்லூரிகளின் கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு அவற்றின் மாணவர் சேர்க்கை அதிகரிக்கப்படும்.**

## மக்கள் நலவாழ்வு

50. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டும் என்ற இந்த அரசின் குறிக்கோளை நிறைவேற்றும் நோக்கத்தோடு, கடந்த இரண்டு ஆண்டுகளில் விழுப்புரம், திருவாரூர், தருமபுரி ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்க ஆணையிடப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **இதேபோன்று, சிவகங்கை மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டத் தலைநகரங்களில், வரும் நிதியாண்டில் இரு புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படும்.**





51. தமிழகத்தில் அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவ தற்காகவும், மாணவர் இல்லங்கள், செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றை அமைப்ப தற்காகவும் ரூபாய் 222 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **வரும் நிதியாண்டில், 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் டிஜிட்டல் எக்ஸ்ரே கருவிகள் வழங்கப்படும். வேலூர் மற்றும் தேனி அரசு மருத்துவக் கல்லூரிகளில் செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்படும்.**

52. நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் நமது நாட்டிற்கே முன்னோடித் திட்டமாக விளங்கும் 'வருமுன் காப்போம்' திட்டம் இந்த அரசால் மீண்டும் செயல்படுத்தப்பட்டு, மருத்துவ வல்லுநர் குழுக்கள் மூலம் மாநிலமெங்கும் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இத்திட்டத்தின் கீழ், இதுவரை நடத்தப்பட்டுள்ள 5,204 மருத்துவ முகாம்களில் சுமார் 54.5 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.

53. ஊரகப் பகுதிகளில் உள்ள மகளிருக்கு 24 மணி நேரமும் மகப்பேறு சிகிச்சைக்கான வசதிகள் கிடைக்கச் செய்யும் வகையில் 1,000 ஆரம்ப சுகாதார நிலையங்களில் அந்த வசதிகளை ஏற்படுத்தி, தாய்–சேய் நலன் காப்பதில் தமிழகம் நமது நாட்டிற்கே எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறது. இதுமட்டுமன்றி 83 மாவட்ட மற்றும் வட்ட அரசு மருத்துவமனைகளில் சிறப்பு மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டு, அவை அவசரகால மகப்பேறு சிகிச்சை மையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இந்த அரசின் இத்தகைய சிறப்பான முயற்சிகளால் தமிழகத்தில் மருத்துவமனைகளில் நடைபெறும் மகப்பேறுகளின் எண்ணிக்கை 98.9 சதவீதமாக

உயர்ந்துள்ளதோடு, இவற்றில் 64.25 சதவீதம் அரசு மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன.

54. **அவசர மருத்துவ சிகிச்சை தேவைப்படும் தருணங்களில், பொதுமக்கள் உடனடியாக மருத்துவமனைகளுக்குச் செல்லும் வகையில், மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளில் உள்ளோரும் ஒரே தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொண்டு அவசரகால மருத்துவ ஊர்தி சேவையை இலவசமாகப் பெறுவதற்கான ஒரு புதிய திட்டத்தை வரும் நிதியாண்டில் இந்த அரசு தொடங்கும்.** கணினிமயமாக்கப்பட்ட மத்தியக் கட்டுப்பாட்டு அறை மற்றும் இடம் அறியும்




கருவிகள் (GPS) பொருத்தப்பட்ட மருத்துவ ஊர்திகளோடு இந்தச் சேவை தொடங்கப்படும். இதனோடு காவல்துறை மற்றும் தீயணைப்புப் படையினரின் பணிகளும் ஒருங்கிணைக்கப் பட்டு, அவசரகாலங்களில் மக்களுக்கு உடனடியாக இச்சேவை கிடைக்குமாறு செய்யப்படும். **இயற்கைச் சீற்றங்கள் மற்றும் பெரும் விபத்துக்களில், அதிக எண்ணிக்கையிலானோர் ஒரே நேரத்தில் பாதிக்கப்படும்போது அவர்களுக்கு உடனடி சிகிச்சை அளிக்கத் தேவையான வசதிகள் கொண்ட சிறப்பு மையம் ஒன்று, மைய அரசின் நிதி உதவியுடன் சென்னையில் அமைக்கப்படும்.**

55. **உலக வங்கி உதவியுடன் ரூபாய் 597 கோடி மதிப்பீட்டிலான தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டத்தின் கீழ், வரும் நிதியாண்டில் மேம்பாட்டுப் பணிகள், புதிய மருத்துவ உபகரணங்கள் மற்றும் சிறப்பு மருத்துவர்கள் நியமனம் ஆகியவற்றின் மூலம் 227 அரசு மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்படும்.** அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் மருந்துகள் வாங்குவதற்காக, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 221 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தமாக, 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 1,487 கோடியாக இருந்த மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான ஒதுக்கீடு, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 2,741 கோடியாக உயர்ந்துள்ளது.

56. **எய்ட்ஸ் நோயினால் பெற்றோரை இழந்த குழந்தைகள் எவ்வித ஆதரவுமின்றி அல்லலுறும் நிலையைப் போக்கிட, அவர்களுக்காக அரசு சார்ந்த அறக்கட்டளை ஒன்றை நிறுவ இந்த அரசு முடிவு செய்துள்ளது. இந்த நோயினால் தந்தை அல்லது தாய் அல்லது பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு பராமரிப்பு, படிப்பு மற்றும் மருத்துவ உதவித் தொகையாக இவ்வறக்கட்டளை மூலம், இக்குழந்தைகளை வளர்க்கும் தொண்டு நிறுவனங்கள் அல்லது இக்குழந்தைகளின்**

**எய்ட்ஸ் நோயால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு உதவித் தொகை**




**உறவினர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை அளிக்கப்படும். இந்த அறக்கட்டளைக்கு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் ஐந்து கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## தொழில் துறை

57. இந்த அரசு பொறுப்பேற்று முதல் இரண்டாண்டு காலத்திற்குள்ளேயே, ரூபாய் 17,583 கோடி அளவிலான முதலீட்டுடன் 1,41,640 பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தக்கூடிய பெரும் தொழிற்சாலைகளை நிறுவுவதற்காக, 13 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. ஆண்டுக்கு சுமார் 6 இலட்சம் கார்களை உற்பத்தி செய்யும் அளவிலான ஹூண்டாய் கார் தொழிற்சாலை விரிவாக்கம்; ரெனோ–நிசான் கூட்டு முயற்சியான 4 இலட்சம் கார்களை உற்பத்திச் செய்யக்கூடிய புதிய தொழிற்சாலை; 3 இலட்சம் வணிக வாகனங்களை உற்பத்திச் செய்யும் நிசான்–அசோக் லேலண்ட் புதிய தொழிற்சாலை யென, பல வாகன உற்பத்தித் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் நிறுவப்பெற்று வருகின்றன. இதுபோலவே, கணினி மற்றும் மின்னணு சாதனங்கள் உற்பத்தியிலும், டெல் கம்ப்யூட்டர்ஸ், மோட்டரோலா, சாம்சங், மோசர் பேயர், சிக்னெட் சோலார் என முன்னணி நிறுவனங்கள் தமிழகத்தில் தமது தொழிற்சாலைகளை நிறுவ முன்வந்துள்ளன. இவற்றின் மூலம் வாகன உற்பத்தியிலும், மின்னணு சாதனங்கள் உற்பத்தியிலும் நமது நாட்டிலேயே முன்னணி மாநிலமாகத் தமிழகம் மாறியுள்ளது.

58. தமிழ்நாட்டில் இதுவரை 32 சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, இவற்றில் 29 மண்டலங்களுக்கு மத்திய அரசின் அறிவிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியிலும், கிருஷ்ணகிரி, பெரம்பலூர் மற்றும் எண்ணூரிலும் பலதொழில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் செயல்படத் தொடங்கும்போது, நமது மாநிலத்தில் பெருமளவில் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும். இவ்வாறு சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைப்பதில் தமிழகம் நமது நாட்டில் முன்னணி மாநிலங்களுள் ஒன்றாகத் திகழும் அதே வேளையில், இவற்றை அமைக்கும்போது விவசாயிகளுடைய வாழ்வாதாரப் பாதுகாப்பையும் இந்த அரசு கவனமாகக் கருத்தில் கொண்டு செயல்படும்.

59. சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மட்டுமன்றி, மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும், வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வித்திடக் கூடிய தொழிற்சாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு; இந்த அரசின் புதிய தொழிற்கொள்கை வகுக்கப்பட்டு, 5.11.2007 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ரூபாய் 350 கோடிக்கு மேலான முதலீட்டில் தொடங்கப்படும் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் யாவும், மாநிலத்தின் மற்ற பகுதிகளில் தொடங்கப்படும் தொழிற்சாலைகளில் ரூபாய் 250 கோடிக்கு மேலாக முதலீடு செய்தாலும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, சென்னையை மட்டுமே மையமாகக் கொள்ளாமல், தமிழகத்தில் அனைத்துப் பகுதிகளிலும் தொழிற்சாலைகள் உருவாக வழி ஏற்படும். **மேலும், இதே குறிக்கோளோடு, தொழிலில் பின்தங்கிய பகுதிகளில் பின்வரும் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் ஏற்படுத்தப்படும்.**




- **திருநெல்வேலி மாவட்டம் கங்கை கொண்டானில் 255 ஏக்கர் பரப்பளவில் போக்குவரத்து பொறியியல் சாதனங்கள் சிறப்புப் பொருளாதார மண்டலம்.**
- **திருவண்ணாமலை மாவட்டம் செய்யாரில் 255 ஏக்கர் பரப்பளவில் தானியங்கி / தானியங்கி உதிரி பாகங்களுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம்.**
- **ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் 263 ஏக்கர் பரப்பளவில் பொறியியல் பொருட்களுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம்.**
- **வேலூர் மாவட்டம் இராணிப் பேட்டையில் 260 ஏக்கர் பரப்பளவில் தோல் தொழில் சிறப்புப் பொருளாதார மண்டலம்.**

60. நாடெங்கிலும் சிமெண்ட் விலை உயர்ந்து வரும் நிலையில், அதனால் பொதுமக்களும், கட்டடத் துறையினரும் பாதிப்படையாதிருக்க தேவையான நடவடிக்கைகள் தமிழக அரசால் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த அரசின் முயற்சிகளினால் மாதந்தோறும் 20 இலட்சம் சிமெண்ட் மூட்டைகளை, ஒரு மூட்டை 200 ரூபாய் என்ற குறைந்த விலையில் விற்க சிமெண்ட் உற்பத்தியாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். இந்தத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிட்டங்கிகளில் அதிகபட்சம் 400 மூட்டைகள் வரை பொதுமக்கள் சிமெண்டை வாங்கிப் பயனடைந்து வருகின்றனர்.

61. பொதுத்துறையில் சிமெண்ட் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கில், 1970 **ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியில் ஆலங்குளத்தில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் சிமெண்ட் தொழிற்சாலை வரும் நிதியாண்டில் ரூபாய் 82 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்பட்டு, அதன் உற்பத்தித் திறன் இருமடங்காக உயர்த்தப்படும்.**

## தகவல் தொழில்நுட்பம்




62. தகவல் தொழில்நுட்பத் துறையில் நமது நாட்டின் முன்னணி நகரங்களுள் ஒன்றாக சென்னை மாநகரம் வளர்ந்துவரும் நிலையில், இரண்டாம் நிலை நகரங்களிலும் இத்தொழிலை வளர்ச்சியடையச் செய்வதற்காக இந்த அரசு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் சேலத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இப்பூங்காக்களுக்கு சிறப்புப் பொருளாதார மண்டல தகுதியும் பெறப்பட்டுள்ளது. இந்த நகரங்களில் தகவல் தொழில்நுட்பத் துறை வளர்ச்சியின் மூலம் அதிக அளவில் வேலைவாய்ப்புகள் உருவாவதோடு, அதன் பயன்களும் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளையும் சென்றடையும். மேலும், **வேலூர் நகரிலும் ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா தனியார் பங்கேற்புடன் எல்காட் நிறுவனம் மூலமாக வரும் நிதியாண்டில் அமைக்கப்படும்.**

63. 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 14,400 கோடியாக இருந்த நமது மாநிலத்தின் மென்பொருள் ஏற்றுமதி, இந்த அரசின் பல்வேறு முயற்சிகளின் காரணமாக, 46 சதவீத வளர்ச்சி அடைந்து கடந்த நிதியாண்டில் ரூபாய் 21,000

கோடியாக உயர்ந்துள்ளது. இந்த அரசு விரைவில் அறிவிக்கவுள்ள தகவல் தொழில்நுட்பக் கொள்கை, இந்த வளர்ச்சியை வரும் காலங்களிலும் நிலைபெறச் செய்து தகவல் தொழில்நுட்பத் துறையில் நமது நாட்டிலேயே முதல் மாநிலமாகத் தமிழகத்தை முன்னிறுத்த வழிவகுக்கும்.

64. **கோயம்புத்தூர், திருவாரூர், கிருஷ்ணகிரி, பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களை கணினிமயமாக்கிடும் மின்னணு மாவட்டத் திட்டம் (e-District) செயல்படுத்தப்படும். இது மட்டுமன்றி, அரசின் மூன்று முக்கியத் துறைகளான உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் துறை, வணிகவரித் துறை மற்றும் கருவூலத் துறைகளில் மைய அரசின் மின்னணு பாரதம் என்ற (e-Bharat) திட்டத்தின் கீழ் மின்னணு நிருவாகம் செயல்படுத்தப்படும்.**

65. **இணைய வசதியுடன் கூடிய கணினிகள் மூலமாக, கிராமங்களில் வசிக்கும் மக்களுக்குத் தேவைப்படும் தகவல்கள், அரசுத் துறைகள் அளிக்கும் பல்வேறு சான்றிதழ்கள், விண்ணப்பப் படிவங்கள், கட்டணங்கள் செலுத்தும் வசதி ஆகியவற்றை, அந்த மக்கள் வசிக்கும் கிராமங்களிலேயே கிடைக்கச் செய்யும் வகையில், தமிழகம் முழுவதும் 5,440 பொதுச் சேவை மையங்கள் வரும் நிதியாண்டில் அமைக்கப்படும்.**

66. இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் இந்த அரசின் திட்டத்தின் கீழ் ஒளிவு மறைவற்ற முறையில் 59 இலட்சத்து 55 ஆயிரம் பெட்டிகள் கொள்முதல் செய்ய ஆணையிடப்பட்டு, இதுவரை 27,86,255 பயனாளிகளுக்கு இவை வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத வீடே இல்லை என்ற நிலையை எட்டும் வகையில், இந்தத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த, 2008–2009 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் மேலும் ரூபாய் 750 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **பொழுதுபோக்குக்கு மட்டுமன்றி மக்களின் வாழ்க்கைத் திறனை மேம்படுத்தவும் இவை பயன்படும் வகையில், ஆங்கிலத்தில் பேசும் திறன், யோகா பயிற்சி, மாணவர் ஆலோசனை மற்றும் போட்டித் தேர்வுகளுக்கான பொது அறிவுப் பயிற்சி போன்றவற்றிற்கான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வரும் ஆண்டிலிருந்து தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம் மூலம் நடத்தப்படும். இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## சிறு தொழில் துறை

67. கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு முதல் முறையாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கெனத் தனிக் கொள்கை அறிக்கை வகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இத் தொழில்களின் போட்டியிடும் திறனை உயர்த்தவும், வேளாண் சார்ந்த சிறுதொழில்களை ஊக்கப்படுத்தவும், சிறப்புச் சலுகைகளோடு வெளியிடப்பட்டுள்ள இக்கொள்கை அறிக்கையினால், இத்துறை ஆண்டுதோறும் 10 சதவீத அளவில் வளரும். இதன் மூலம் பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 10 இலட்சம் பேருக்குக் கூடுதலாக நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு உருவாகும்.


68. இந்தக் கொள்கையின்படி, மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் அமைக்கப்படும் குறுந்தொழில்கள் மற்றும் வேளாண் சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கு சலுகைகள் அளிக்கப்படும். மாநிலத்தில் உள்ள 251 பின்தங்கிய வட்டாரங்களில் அமைக்கப்படும் அனைத்துச் சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கும் மூலதன மானியம், வேலைவாய்ப்பு மானியம் மற்றும் மின்கட்டண மானியம் ஆகிய பல்வேறு சலுகைகள் வழங்கப்படும். மேலும், மகளிர், அருந்ததியர் உள்ளிட்ட ஆதிதிராவிடர், உடல் ஊனமுற்றோர்

மற்றும் அரவாணிகள் ஆகியோர் தொழில் முனைவோராக இருப்பின் அவர்களுக்குக் கூடுதல் மூலதன மானியம் வழங்கப்படும். இத்தகைய பல்வேறு சலுகைகளால் வரும் ஆண்டுகளில் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் புதிய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பெருமளவில் உருவாகும்.

## சாலை மேம்பாடு

69. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத அடிப்படைக் கட்டமைப்பு வசதியான சாலைகளை மேம்படுத்துவது மிகவும் அவசியம் என்பதை உணர்ந்து, இந்த அரசு சாலைகளை மேம்படுத்தவும், நன்கு பராமரிக்கவும், போதிய நிதியை கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்துள்ளது. இதனால், முன் எப்போதும் இருந்திராத அளவில் 2006–2007 ஆம் ஆண்டில் ரூபாய் 2,509 கோடியும், தற்போதைய நிதி ஆண்டில் ரூபாய் 3,957 கோடியும் ஒதுக்கப்பட்டு, 31,698 கிலோ மீட்டர் நீளச் சாலைகளை அகலப்படுத்துதல், மேம்படுத்தல், புதுப்பித்தல் ஆகிய பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

70. இந்த அரசு பொறுப்பேற்ற போது நமது மாநிலத்தில் மொத்தம் 6,958 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மட்டுமே இருவழித்தடச் சாலைகளாக இருந்தன. கடந்த இரண்டு ஆண்டுகளில் 2,380 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் கூடுதலாக இருவழித் தடங்களாக மாற்றப்பட்டு, முக்கியத் தடங்களில் எளிதாகவும், விபத்துகள் இன்றியும் போக்குவரத்து அமைய வழிவகுக்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளில் 343 சிறு மற்றும் பெரிய பாலங்கள் ரூபாய் 214 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.




71. இந்த வரவு–செலவுத் திட்டத்தில், சாலை மேம்பாடு மற்றும் பாலப் பணிகளுக்கான மூலதனச் செலவிற்காக ரூபாய் 2,816 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில், மொத்தம் 16,476 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை மேம்படுத்துதல், அகலப்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. **இதன்மூலம் இவ்வாண்டில் மேலும் 1,350 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் இருவழித் தடமாக மாற்றப்படும். மேலும், வரும் நிதியாண்டில் 254 சிறு மற்றும் பெரிய பாலங்கள் கட்டும் பணிகள் முடிக்கப்படும்.** அத்துடன், சாலைகளைப் பராமரிக்கும் பணிகளுக்காக ரூபாய் 855 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த உயர் ஒதுக்கீட்டினால் இந்திய சாலைக் கழகத்தின் (Indian Road Congress) நெறிமுறைகளின்படி, தமிழ்நாட்டில் உள்ள சாலைகள் அனைத்தையும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிப்பதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது. இந்த வரவு–செலவுத் திட்டத்தில் நெடுஞ்சாலைத் துறைக்கு ரூபாய் 4,179 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மின்சாரம்

72. தமிழகத்தில் மின் தேவை ஆண்டுதோறும் வளர்ந்து வருவதையும், மாநிலத்தின் நீண்டகால மின் தேவையைக் கருத்தில் கொண்டும், போதிய மின் உற்பத்தி செய்வதற்கான பல திட்டங்களை வகுத்து இந்த அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. வடசென்னை அனல்மின் நிலையத்தில் 600 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட புதிய அலகு அமைப்பதற்கான பணிகள் ரூபாய் 2,475 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேட்டூர் அனல்மின் நிலையத்தில்

கூடுதலாக 600 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஓர் உற்பத்தி நிலையத்தை நிறுவுவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இதுபோல, தூத்துக்குடி அனல்மின் நிலையத்திலும் கூடுதலாக 1,000 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட நிலையத்தை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் அனைத்தும் தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் மேற்கொள்ளப்படும். இவை தவிர, தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் தேசிய அனல்மின் நிறுவனம் (NTPC) ஆகியவற்றின் கூட்டுமுயற்சியாக வடசென்னையில் 1,500 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட புதிய மின் திட்டத்திற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம் பாரத மிகுமின் கழகத்தோடு (BHEL) இணைந்து, தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் 1,600 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய புதிய மின் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைத்திடவும், புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டுள்ளது. **வரும் 2008–2009 ஆம் நிதியாண்டில் மாநிலத்தின் மின்சார விநியோகக் கட்டமைப்பு ரூபாய் 1,720 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். இதன் கீழ் 90 புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும்.**

## போக்குவரத்து

73. 2006-2007 மற்றும் 2007–2008 நிதி ஆண்டுகளில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு 6,025 புதிய பேருந்துகள் வாங்க ஆணையிடப்பட்டு, அரசின் நிதி உதவியாக ரூபாய் 477 கோடி அளிக்கப்பட்டு, இதுவரை 5,451 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றன. **பயணியர் நலன் கருதி, வரும் நிதி ஆண்டில் மேலும் 3,500 புதிய பேருந்துகள், ரூபாய் 482 கோடி மதிப்பீட்டில் வாங்கப்படும். இதற்காக அரசின் நிதி உதவியாக ரூபாய் 330 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**




## நகராட்சி நிருவாகம்

74. நகர்ப்புரங்களில் அதிக அளவில் மக்கள் வசிக்கும் மாநிலமாக தமிழகம் விளங்குகிறது. நகர்ப்புரங்களிலுள்ள அடிப்படை வசதிகளைப் பெருமளவில் மேம்படுத்த அரசு முனைந்து செயல்பட்டு வருகிறது. மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர சீரமைப்புத் திட்டத்தின் கீழ், இதுவரை 177 திட்டங்களுக்கு ரூபாய் 5,460 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் பெறப்பட்டு திட்டங்கள் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேலும், மூன்றாம் தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 108 திட்டங்கள், ரூபாய் 1,624 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வரும், அனைத்துப்



பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம், ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் 140 பேரூராட்சிகளில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. **வரும் நிதி ஆண்டிலும் இத்திட்டம் மேலும் 140 பேரூராட்சிகளில் ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**


75. அனைத்து நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களைச் செயல்படுத்துவதென்றும், முதற்கட்டமாக, அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களைச் செயல்படுத்தவும் இந்த அரசு கொள்கை முடிவு எடுத்து 4 மாவட்டத் தலைநகரங்களில் இப்பணி முடிக்கப்பட்டு, 24 மாவட்டத் தலைநகரங்களில் இத்திட்டப்பணிகள் ரூபாய் 1,362 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **எஞ்சியுள்ள நாகர்கோயில் மற்றும் அரியலூர் நகரங்களுக்கான திட்டங்கள் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.**

76. நகர்ப்புரப் பகுதிகளில் மேலும் அதிக அளவில் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த ஏதுவாக, கூடுதல் நிதியாதாரம் திரட்டப்பட்டுள்ளது. ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி (JBIC) மூலமாக சுமார் ரூபாய் 300 கோடி நிதியுதவியும், ஜெர்மனி நாட்டு நிதி நிறுவனம் KfW மூலமாக சுமார் ரூபாய் 490 கோடி நிதியுதவியும் பெறப்பட்டு, நகர்ப்புரங்களில் குடிநீர்த் திட்டம், பாதாளச் சாக்கடைத் திட்டம் போன்ற கட்டமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

77. **தமிழக நகர்ப்புரங்களிலுள்ள சாலைகளை உலகத் தரத்திற்கு உயர்த்தும் வகையில், 'தமிழ்நாடு நகர்ப்புரச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்' என்ற பெரும் திட்டம் வரும் நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்படி, மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள அனைத்துச் சாலைகளும் மேம்படுத்தப்படுவதோடு, நடைபாதைகள்; மழைநீர் வடிகால்கள் மற்றும் சாலைகளின் அடியில் குழாய்களைக் கொண்டு செல்வதற்கான வசதிகளும் அமைக்கப்படும். இத்திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக சென்னை மாநகராட்சி, பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் முடிவுபெற்ற திருச்சி, திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் மதுரை மாநகராட்சிகள் மற்றும் ஆலந்தூர், மயிலாடுதுறை, கரூர், இனாம் கரூர், கும்பகோணம், தஞ்சாவூர் மற்றும் வளசரவாக்கம் நகராட்சிகளில் உள்ள சாலைகள் மேம்படுத்தப்படும். நிதிப்பங்கீட்டில் (Devolution) கடந்த ஆண்டுகளில் வழங்கப்படாமல் நிலுவையிலிருக்கும் ரூபாய் 147 கோடி; மாநகராட்சி, நகராட்சிகளுக்கு உரிய முத்திரைத்தாள் மேல்வரியில் ஒரு பகுதி; மற்றும் தமிழ்நாடு நகர்ப்புரச் சாலைக் கட்டமைப்பு நிதியம் வெளியிடும் கடன் பத்திரங்கள் ஆகிய நிதி ஆதாரங்களைக் கொண்டு, ரூபாய் 1,000 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.**

78. திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய நகரங்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், அந்நகர மக்களின் கோரிக்கைகளின் அடிப்படையிலும், கடந்த ஆண்டு அவற்றை மாநகராட்சிகளாக இந்த அரசு நிலை உயர்த்தியது. இதே போன்று, **வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் பல முக்கியக் கல்வி நிலையங்கள் அமையப்பெற்றதுமாகிய வேலூர் நகராட்சியும் வரும் நிதியாண்டில் மாநகராட்சியாக நிலை உயர்த்தப்படும்.**

79. சென்னை மாநகரம் மற்றும் சுற்றியுள்ள இடங்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், தற்போது சென்னையில் உள்ள 30 இலட்சத்துக்கும் மேற்பட்ட வாகனங்களின் போக்குவரத்துக்கு ஏதுவாகவும், ஒரு தொலைநோக்குப் போக்குவரத்துத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. **இத்திட்டத்தின் கீழ், சென்னை மாநகரத்தில் உள்ள அடையாறு, பக்கிங்ஹாம் கால்வாய், கூவம் நதி மற்றும் மாம்பலம் கால்வாய் ஆகியவற்றின் கரைகளில் உள்ள உபரி இடங்களில் புதிய சாலைகளை அமைத்து, சென்னை புறவழிச் சாலையுடன் அவற்றை இணைக்குமாறு, அதிவேக வட்டச் சாலை (Circular High Speed Transporta-**




**tion Corridor) ஒன்று அமைக்கப்படும்.** 120 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்தச் சுற்றுச்சாலை, நான்கு முதல் ஆறு வழிப் பாதைகளைக் கொண்டதாக அமையும். இதில், தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் அமைக்கப் படவுள்ள 60 கிலோ மீட்டர் நீங்கலாக, எஞ்சியுள்ள 60 கிலோ மீட்டர் சாலை மாநில அரசால் அமைக்கப்படும். **இந்தத் திட்டத்தின் மூலமாக, சென்னையின் மையப் பகுதிகளிலிருந்து, தாம்பரம், ராஜீவ்காந்தி தகவல் தொழில்நுட்பச் சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை போன்ற முக்கியப் பகுதிகளுக்கும், சென்னையிலிருந்து திருப்பதி, பெங்களூரு, கொல்கத்தா போன்ற முக்கிய நகரங்களுக்கும் சென்று வரும் வாகனங்கள், தாமதமின்றி மிக விரைவாகச் செல்ல முடியும். ரூபாய் 2,300 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ள இத்திட்டத்தால், சென்னையில் உள்ள முக்கியச் சாலைகளில் காணப்படும் போக்குவரத்து நெரிசலை வெகுவாகக் குறைக்க இயலும்.**

## மெட்ரோ இரயில் திட்டம்

80. சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு மற்றுமொரு தீர்வாக, மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த இந்த அரசு முனைந்துள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, மத்திய அரசு மற்றும் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் ஒப்புதல் மற்றும் நிதியுதவி பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு, ‘சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்’ என்ற பொதுத்துறை நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மாநில அரசின் பங்காக, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 300 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## குடிநீர் வழங்கல்

81. 2007-2008 ஆம் ஆண்டில், 9,625 ஊரகக் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப் பட்ட குடிநீர் வசதி செய்துதரப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் ரூபாய் 506 கோடி ஒதுக்கீட்டில் மேலும் 10,000 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி வழங்கப்படும். 2007-2008 ஆம் ஆண்டில் 55 நகரங்களுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. 2008-2009 ஆம் நிதியாண்டில் மேலும் 60 நகரங்களுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். 30.1.2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட ரூபாய் 616 கோடி மதிப்பீட்டிலான இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் மிகவும் வேகமாக மேற்கொள்ளப் பட்டு, 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் முடிக்கப்படும்.


82. நிலத்தடி நீரில் ஃப்ளோரைடு அதிகம் உள்ள தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இந்த அரசின் இடைவிடாத முயற்சியால் ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதி உதவியோடு, ரூபாய் 1,330 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 26.2.2008 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இப்பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் நிறைவேற்றி முடிக்கப்படும்.

83. வளர்ந்து வரும் சென்னை மாநகரின் நீண்ட காலக் குடிநீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு, சென்னைக்கு அருகில் மீஞ்சூரில் கடல் நீரிலிருந்து நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் குடிநீரை உற்பத்தி செய்யும் திட்டத்தின் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் நிறைவுற்று வரும் ஜூன் திங்களிலிருந்து நாள் ஒன்றுக்கு 15 மில்லியன் லிட்டர் குடிநீரும், செப்டம்பர் திங்களிலிருந்து நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் குடிநீரும் சென்னை மாநகருக்குக் கிடைக்கும். பரந்து விரிந்து வளர்ந்து வருகின்ற சென்னை மாநகருக்குத் தேவையான குடிநீர் வசதியை மேலும் உறுதி செய்யும்பொருட்டு, சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலையில் நெம்மேலியில் கடல் நீரிலிருந்து நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் குடிநீர் தயாரிக்கும் மற்றுமொரு நிலையத்தை ரூபாய் 994 கோடி மதிப்பீட்டில், மைய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்த ஏதுவாக இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மைய அரசின் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இத்திட்டத்திற்கு முதற்கட்டமாக ரூபாய் 300 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான பணிகள் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

## வீட்டுவசதி

84. ஏழை ஆதிதிராவிடர்களுக்கு நிரந்தர வீடுகள் இலவசமாகக் கட்டித்தரும் திட்டம், தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 1974 ஆம் ஆண்டு முதன்முதலாகத் தொடங்கப்பட்டது. அன்றைய மத்திய உணவு அமைச்சராகத் திகழ்ந்த மாண்புமிகு பாபு ஜெகஜீவன்ராம் அவர்களால் பெரிதும் பாராட்டப்பட்ட இந்த முன்னோடித் திட்டம், மத்திய அரசால் பின்னர் 'இந்திரா வீட்டுவசதித் திட்டம்' என்னும் பெயரில் நாடெங்கும் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டுக்கு மத்திய அரசின் செலவு மதிப்பீடான ரூபாய் 25 ஆயிரத்துடன், கான்கிரீட் கூரை அமைப்பதற்காக நமது மாநில அரசு கூடுதலாக ரூபாய் 12,000 வழங்கி வருகிறது. கட்டுமானச் செலவுகள் அதிகரித்துள்ளதைக் கருத்தில் கொண்டு, இவ்வீடுகளுக்கான செலவு மதிப்பீடு உயர்த்தப்பட வேண்டுமென அண்மையில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். இதனை ஏற்று, இவ்வீடுகளுக்கான மதிப்பீட்டை, வீடு ஒன்றுக்கு ரூபாய் 25,000 லிருந்து ரூபாய் 35,000 ஆக மைய அரசு அண்மையில் அதன் நிதிநிலை அறிக்கையில் உயர்த்தியுள்ளது. **இந்த வகையில், கான்கிரீட் கூரை அமைப்பதற்கான செலவினங்களில் ஏற்பட்டுள்ள உயர்வையும் கருதி, இதற்காக மாநில அரசு வழங்கும் மானியத்தையும், ரூபாய் 12,000–லிருந்து ரூபாய் 20,000 ஆக வரும் ஆண்டிலிருந்து இந்த அரசு உயர்த்தி வழங்கும். இதனால் அரசுக்குக் கூடுதலாக ரூபாய் 56 கோடி செலவு ஏற்படும்.** இத்திட்டத்தின் கீழ், மாநில அரசின் பங்களிப்புத் தொகை மற்றும் கான்கிரீட் கூரை அமைப்பதற்கான உதவி ஆகியவற்றிற்கு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 210 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் வரும் ஆண்டில் தலா ரூபாய் 55,000 செலவில் சுமார் 70,000 வீடுகள் ஊரகப் பகுதிகளில் கட்டப்படும். இதில் மத்திய அரசின் பங்கு ரூபாய் 26,250 ஆகவும் மாநில அரசின் பங்கு ரூபாய் 28,750 ஆகவும் இருக்கும்.

85. **நகரங்களில் குடிசைப் பகுதிகளில் வாழ்பவர்களுக்கு ஒரு இலட்சத்து ஆறாயிரம் கான்க்ரீட் வீடுகளும் அடுக்குமாடி குடியிருப்புகளும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 2,787 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.** சென்னை மற்றும் இதர நகரங்களில் மிகவும் பழுதடைந்துள்ள 9,692 அடுக்குமாடி குடியிருப்புகள், ரூபாய் 263.25 கோடி செலவில் மீண்டும் கட்டப்படும். **குறைந்த வருவாய்ப் பிரிவினர், நடுத்தரக் குடும்பங்கள் மற்றும் அரசு**




**அலுவலர்களுக்கு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம், நகரங்களுக்கருகில் உள்ள பகுதிகளில் 22,000 வீடுகள் ரூ.2,000 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.** இத்திட்டங்களை, சுய நிதித் திட்டம் மற்றும் பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் கூட்டு முயற்சித் திட்டங்கள் வாயிலாக, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மேற்கொள்ளும்.

**86. நகர்ப்புர மற்றும் வட்டக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களிடமிருந்து, வீடு கட்டுவதற்காக ரூபாய் 25,000 வரை கடன்பெற்ற பொருளாதாரத்தில் பின்தங்கிய (Economically Weaker Sections) ஏழை எளியோர், திருப்பிச் செலுத்த இயலாமல் நிலுவையில் உள்ள கடன்தொகை முழுவதும் ரத்து செய்யப்படும். ரூபாய் 25,000–க்கு மேல், ரூபாய் ஒரு இலட்சம் வரை கடன் பெற்றவர்கள், நிலுவையில் உள்ள கடனைத் திருப்பிச் செலுத்தும்போது, அவர்களுக்கு அபராதவட்டி முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்படுவதோடு, வட்டியிலும் 50 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும். ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேல் ரூபாய் இரண்டு இலட்சம் வரை கடன் பெற்றோர், கடனைத் திருப்பிச் செலுத்துவராயின் அவர்களுக்கும் அபராதவட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டு, வட்டித்தொகையில் 25 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும். ரூபாய் இரண்டு இலட்சத்திலிருந்து ரூபாய் ஏழு இலட்சம் வரை கடன் பெற்ற உயர் வருவாய் பிரிவினர் கடனை செலுத்த முன்வந்தால், அவர்களுக்கும் அபராத வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டு, வட்டியில் 10 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும். இச்சிறப்புச் சலுகைகள் 1.4.2008 முதல் 30.9.2008 வரையில் மட்டுமே அளிக்கப்படும்.**

**ஊரக வளர்ச்சி**

87. மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் பொறுப்புகளையும், அதிகாரங்களையும் வழங்குவது குறித்து ஆய்ந்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையிலான உயர்நிலைக் குழு தனது அறிக்கையை அரசிடம் அளித்துள்ளது. **இப்பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு, இவை குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய செயல் அறிக்கை இந்த கூட்டத் தொடரின்போதே சட்டமன்றத்தில் வைக்கப்படும்.**

88. இந்த அரசால் தொடங்கப் பட்டுள்ள அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூபாய் 1,020 கோடி செலவில் 5,074 கிராமங்களில் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. **இந்தத் திட்டத்திற்காக 2008–2009 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்திலும் ரூபாய் 504 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேலும் 2,521 கிராம ஊராட்சிகளில் அடிப்படை வசதிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

89. நபார்டு வங்கியின் நிதி உதவி மற்றும் 12 ஆம் நிதிக் குழுவின் மானியம் ஆகியவற்றின் மூலமாகவும், பிரதமரின் கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழும், கிராமப்புரச் சாலைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த அரசு பொறுப்பேற்ற முதல் இரண்டு ஆண்டுகளிலேயே, 10,010 கிலோ மீட்டர் கிராமச் சாலைகள் ரூபாய் 942 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

90. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் பெரும் சாதனைத் திட்டமான

தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் தமிழகத்தில் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப் பட்டு வருகிறது. 82 சதவீதம் பெண்களும், 59 சதவீதம் ஆதிதிராவிடர்களும் பயனடைந்துள்ள இத்திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு இதுவரை தமிழகத்தில் ரூபாய் 603 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு குறைந்தபட்ச ஊதியம் உறுதிசெய்யப்பட்டு, ஒப்பந்தக்காரர்கள் எவரும் இன்றிப் பயனாளிகளுக்கு உடனடியாக ஊதியம் வழங்கப்பட்டு வரும் முறை நமது நாட்டிற்கே முன்னோடியாக விளங்குகிறது. **இத்திட்டத்தின் கீழ், வரும் நிதியாண்டில் ரூபாய் 2,000 கோடி மதிப்பீட்டில் அனைத்து மாவட்டங்களிலும் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

91. வளர்ச்சிப் பணிகளில் மக்களை ஈடுபடுத்தி, அவர்களது பங்களிப்போடு பணிகளை மேற்கொள்ளும் 'நமக்கு நாமே திட்டம்' இந்த அரசால் மீண்டும் செயல்படுத்தப் பட்டு, நடப்பு நிதியாண்டில் 1,625 பணிகள் நடைபெற்று வருகின்றன. 2008–2009 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் இதற்காக ரூபாய் 50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**ரூ.504 கோடியில் 2521 கிராம ஊராட்சிகளில் அடிப்படை வளர்ச்சிப் பணிகள்**




92. வெளிநாடுகளில் வாழும் தமிழ்நாட்டைச் சேர்ந்தோர் பலரும், தமது சொந்த ஊர் மற்றும் அங்குள்ள மக்களுக்குப் பயனளிக்கும் திட்டங்களுக்கு உதவிட விரும்புகின்றனர். **பொதுமக்கள் பங்களிப்போடு பணிகளைச் செயல்படுத்துவதற்கான நமக்கு நாமே திட்டம் போலவே, இவர்களின் நன்கொடை மூலமாக அவர்கள் மேற்கொள்ள விரும்பும் பணிகளைச் செயல்படுத்துவதற்கான பொது அறக்கட்டளை ஒன்றை இந்த அரசு அமைக்கும்.** வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் தம் ஊரில் தாம் செய்ய விரும்பும் பணிகளைக் குறிப்பிட்டு, அதற்கான கணிசமான நன்கொடையை இந்த அறக்கட்டளையிடம் அளிக்கலாம். இதன் மூலமாக, நன்கொடையாளர்களின் பெயர் பொறிக்கப்பட்டு அப்பணிகள் சிறப்பாகச் செயல்படுத்தப்படும். இப்பணிகளின் முன்னேற்றம் குறித்து அறிந்து கொள்வதற்கான இணைய வசதியும் செய்யப்படும்.

93. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு, தந்தை பெரியார் அவர்களின் சமத்துவக் கொள்கையை நிலைநாட்டும் வகையில், அவரது திருவுருவச் சிலையுடன் கூடிய 95 புதிய சமத்துவபுரங்களை அமைப்பதற்கு இந்த அரசு ஒப்புதல் வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்து சமூகத்தினரும் சகோதர பாசத்துடன் ஒருமித்து வாழ வழிவகுக்கும் இந்த சமத்துவ புரங்கள், வரும் மூன்று ஆண்டுகளில் அமைக்கப்படும். இப்பணிகள் நிறைவுற்ற பின், ஏற்கெனவே இந்த அரசால் அமைக்கப்பட்ட 145 சமத்துவபுரங்களையும் சேர்த்து, பெரியார் சிலையுடன் கூடிய 240 சமத்துவபுரங்கள் தமிழகத்தில் அமையப்பெறும். இப்பணிகளுக் காக வரும் நிதியாண்டில் ரூபாய் 75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

94. உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேவையான நிதிப் பங்கீடு அதிகாரப் பகிர்வு போன்ற பல்வேறு பொருள்கள் குறித்த மூன்றாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளும், அவற்றின் மீது இந்த அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்த செயல் அறிக்கையும் சட்டப்பேரவைக்கு அளிக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்புகளுக்கான நிதிப் பங்கீடு 8 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாக

உயர்த்தப்பட்டுள்ளது. நிதிப் பங்கீடு (Devolution), நேரடியாக மாற்றப்படும் வருவாய் (Assigned Revenue) மற்றும் திட்டங்களுக்கான நிதியுதவி (Assistance for Schemes) ஆகியவற்றின் கீழ், 2006–2007 ஆம் ஆண்டில் ரூபாய் 4,278 கோடியும், 2007–2008 ஆம் ஆண்டில் ரூபாய் 4,945 கோடியும் வழங்கப் பட்டுள்ளன. வரும் நிதியாண்டில் இது ரூபாய் 5,775 கோடியாக மேலும் உயர்த்தப்படும். இதுமட்டுமன்றி, தொடக்கக் கல்வி, பொதுச் சுகாதாரம், ஊரகக் குடிநீர் கட்டமைப்பு வசதிகள் போன்ற பணிகளை அரசே மேற்கொள்வதால் ஏற்படும் செலவினங்களையும் சேர்த்து, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் நேரடி நிதியுதவி மற்றும் அவை மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்காக மாநில அரசு செலவிடும் மொத்தத் தொகை ரூபாய் 10,165 கோடியாகும். இது மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 31 சதவீதமாகும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

## வருவாய் நிருவாகம்

95. குடியிருக்க இடமற்ற ஏழை எளியோருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தை முனைப்போடு செயல்படுத்தி, இந்த ஆண்டிற்குள் மூன்று இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதை இந்த அரசு இலக்காக நிர்ணயித்தது. இந்த இலக்கு விஞ்சப்பட்டு இதுவரை, 3 இலட்சத்து 98 ஆயிரம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், அரசுப் புறம்போக்கு நிலங்களில் பல ஆண்டுகளாக வீடுகள் கட்டிக் குடியிருந்தோருக்கு, பட்டா வழங்குவதற்கான குடியிருப்புக் கால அளவை பத்து ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாகக் குறைத்தும், வருமான வரம்பை நீக்கியும் அனைவருக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

96. **வரும் மூன்று ஆண்டுகளில், ஆண்டுதோறும் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்ட அலுவலர், வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிருவாக அலுவலர்களுக்கான அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டப்படும். அரியலூர் மாவட்டத்திற்கு புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகமும், திருச்சி மற்றும் தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்குக் கூடுதல் கட்டடமும் அமைக்கப்படும்.**

97. இந்த அரசு பொறுப்பேற்ற பின் தனி அரியலூர் மாவட்டம் அமைக்கப்பட ஆணையிடப்பட்டு, தற்போது செயல்படத் தொடங்கியுள்ளது. **ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களின் எல்லை மாற்றியமைக்கப்பட்டு, 29.12.2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்தவாறு திருப்பூரைத் தலைநகராகக் கொண்டு புதிய மாவட்டம் ஒன்று அமைக்கப்படும். புதுக்கோட்டை மாவட்ட மக்களின் நீண்டகால கோரிக்கையை ஏற்று, கறம்பக்குடியையும் பொன்னமராவதியையும் தலைமையிடங்களாகக் கொண்டு இரு புதிய வருவாய் வட்டங்கள் அமைக்கப்படும். மேலும், தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி நகரத்திற்கு அருகில் உள்ள, திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டத்தைச் சேர்ந்த 12 வருவாய் கிராமங்கள் கோவில்பட்டி வட்டத்துடன் இணைக்கப்படும்.**

## சுனாமி நிவாரணப் பணிகள்

98. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டத்தின் கீழ், இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்புவரை, 8,401 வீடுகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டிருந்த நிலையில், இப்பணிகள் முடுக்கி விடப்பட்டு தற்போதுள்ள நிலவரப்படி 35,268 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, மீதமுள்ள வீடுகளுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. தனியார் தொண்டு நிறுவனங்களால் கட்டப்படாமல் இருந்த 3,000 வீடுகளையும்; கடலிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் இருக்கும் 52,000 குடிசை வீடுகளில் வசிப்போருக்காக, ராஜீவ் காந்தி

சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் 22,000 புதிய நிரந்தர வீடுகளையும்; அமைத்துத் தர ஆணையிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருவதுடன், மீதமுள்ள 30,000 வீடுகளைக் கட்டுவதற்கான திட்டத்திற்கு உலக வங்கியின் ஒப்புதல் விரைவில் பெறப்பட்டு அதற்கான பணிகள் தொடங்கப்படும்.

## மகளிர் நலன்

99. சமையல் எரிவாயு இணைப்பு இல்லாத குடும்பங்களுக்கு, இலவச எரிவாயு அடுப்பும், சமையல் எரிவாயு இணைப்பும் வழங்கும் திட்டம் இந்த அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு பயனளிக்கும் இந்தத் திட்டத்தின் கீழ், இதுவரை ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம் குடும்பங்களுக்கு இலவச எரிவாயு அடுப்புகளும், இலவச எரிவாயு இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. **இந்தத் திட்டத்தை வரும் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தி, மேலும் 8 இலட்சம் இலவச எரிவாயு அடுப்புகள் மற்றும் இணைப்புகள் வழங்க ரூபாய் 160 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** இத்திட்டம் அடுத்து வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.







100. பெண்கள் கருவுற்றிருக்கும் காலத்தில் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுசெய்யவும், அவர்களுக்குச் சத்தான உணவு கிடைக்கச் செய்யவும், ஆறு மாதங்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 1,000 வீதம், மகப்பேறு உதவியாக ரூபாய் 6,000 வழங்கும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை, 7 இலட்சம் தாய்மார்கள் பயன்பெற்றுள்ளனர். இத்திட்டத்தின் விதிமுறைகளின்படி இப்பயன்களைப் பெற கர்ப்பிணிப் பெண்கள் குடும்ப வருமானச் சான்றிதழ் பெற வேண்டியுள்ளது. கருவுற்றிருக்கும் காலத்தில், இதற்காக அவர்கள் சிரமப்பட வேண்டியுள்ளதைக் கருத்தில் கொண்டு, வருமானச் சான்றிதழ் பெற வேண்டிய தேவையைத் தளர்த்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. **ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு கர்ப்பகாலப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் கிராம மருத்துவ செவிலியர்களின் பரிந்துரையின் அடிப்படையிலேயே, இவர்களுக்கு வரும் நிதியாண்டிலிருந்து, இத்திட்டத்தின் கீழ் எவ்வித வருமானச் சான்றிதழும் இன்றி நிதியுதவி வழங்கப்படும்.**


101. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தை மீண்டும் செயல்படுத்தி, வழங்கப்படும் உதவித் தொகையை 2006–2007 ஆம் ஆண்டிலிருந்து 10,000 ரூபாயிலிருந்து, 15,000 ரூபாயாக இந்த அரசு உயர்த்தி வழங்கி வருகிறது.




ஏழைக் குடும்பங்களின் திருமணச் செலவுகளுக்குப் பெரும் உதவியாக விளங்கி வரும் இத்திட்டத்தின் கீழ், இதுவரை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ஏழைப் பெண்கள் பயனடைந்துள்ளனர். **அதிகரித்துவரும் திருமணச் செலவுகளைக் கருத்தில் கொண்டு, வரும் நிதியாண்டிலிருந்து இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவி ரூபாய் 15,000–லிருந்து ரூபாய் 20,000 ஆக உயர்த்தப்படும். சுமார் 65,000 ஏழைப் பெண்கள் பயனடையும் வகையில் இத்திட்டத்திற்காக ரூபாய் 130 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

102. 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் தி.மு.கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்தை மேலும் ஊக்குவித்து வலுப்படுத்தும் வகையில் பல்வேறு சலுகைகளை இந்த அரசு வழங்கி வருகிறது. அவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி உதவித் தொகை ரூபாய் 7.50 லிருந்து ரூபாய் 45 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த அரசு பதவியேற்றது முதல் இதுவரை 48,514 புதிய சுய உதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளன. **வரும் 2008–2009 ஆம் ஆண்டில் 4 இலட்சம் மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட 25,000 புதிய சுய உதவிக் குழுக்கள் தொடங்கப்படும்.**

103. சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்பட்டால் மட்டுமே, அவை வங்கிக் கடன் பெற்று, வருவாய் ஈட்டும் தொழில்களைத் தொடங்கிச் சிறப்பாகச் செயல்பட முடியும். தமிழ்நாட்டில் தற்போதுள்ள 3,63,000 சுய உதவிக் குழுக்களில், 1,50,000 சுய உதவிக் குழுக்கள் சுழல் நிதி பெறுவதற்கான தகுதி பெற்றிருந்தும், அவற்றிற்குச் சுழல் நிதி வழங்கப்படாமல் உள்ளது. **இக்குழுக்கள் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு மேம்படும் வகையில், வரும் நிதியாண்டில் இந்த 1,50,000 சுய உதவிக் குழுக்கள் அனைத்திற்கும் ரூபாய் 150 கோடியைச் சுழல் நிதியாக இந்த அரசு வழங்கும். இதனால் இக்குழுக்களில் உறுப்பினர்களாக உள்ள சுமார் 30 இலட்சம் மகளிர் பயனடைவர்.**




104. வறியோரிலும் மிகவும் வறியோர், ஆதரவற்றோர், ஊனமுற்றோர், ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் போன்றோரின் முன்னேற்றத்திற்காக, இந்த அரசு உலக வங்கியின் உதவியுடன் 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. ரூபாய் 717 கோடி மதிப்பீட்டிலான இத்திட்டம், 70 பின்தங்கிய வட்டாரங்களிலுள்ள 2,469 ஊராட்சிகளில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 1,117 ஊராட்சிகளில் உள்ள ஏழை எளியோர் பயனாளிகளாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேலும், 2,116 புதிய சுய உதவிக் குழுக்களும் 1,163 ஊனமுற்றோர் சுய உதவிக் குழுக்களும்

இதுவரை தொடங்கப்பட்டுள்ளன. ஏழை எளியோரின் மேம்பாட்டிற்காக செயல்படுத்தப் பட்டுவரும் இத்திட்டத்திற்காக வரும் நிதியாண்டில் ரூபாய் 114 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

105. பெண்களுக்குச் சமச் சொத்துரிமையையும், உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவீத இட ஒதுக்கீட்டையும் வழங்கி தி.மு. கழக அரசுதான் பெண்ணுரிமையை நிலைநாட்டியது. **இந்த வகையில், தமிழ்நாட்டில் மகளிர் நலன் பேணிடும் வண்ணம் செயல்பட்டுவரும் மகளிர் ஆணையத்திற்கு இந்த அரசு சட்டபூர்வமான அதிகாரம் (Statutory Status) அளிக்கும். இதற்கான சட்டமுன்வடிவு இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிமுகப் படுத்தப்படும்.**

## முதியோர், ஆதரவற்றோர் நலன்

106. முதியோர், ஆதரவற்ற விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர் போன்றவர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையை ரூபாய் 200 லிருந்து ரூபாய் 400 ஆக இரண்டு மடங்காக உயர்த்தி இந்த அரசு வழங்கி வருகிறது. மத்திய அரசால் தொடங்கப்பட்டுள்ள இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம் தற்போது தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டுள்ள நிலையில், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள அனைத்து முதியோருக்கும் மாதாந்திர ஓய்வூதியத் தொகையாக ரூபாய் 400 வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் 9 இலட்சத்து 77 ஆயிரம் முதியோர் பயனடைவர். இதுமட்டுமன்றி 6.2 இலட்சம் ஆதரவற்ற விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோரும் ரூபாய் 400 உதவித் தொகை பெற்று பயனடைந்து வருகின்றனர். இத்தகைய சலுகைகளினால், 2005-2006 ஆம் ஆண்டு ரூபாய் 299 கோடியாக இருந்த முதியோர்/ விதவைகள் ஓய்வூதியச் செலவினம் வரும் 2008-2009 ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 830 கோடியாக உயர்ந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஊனமுற்றோர் நலன்

107. ஊனமுற்றோருக்கு வழங்கும் உதவித்தொகையை இந்த அரசு ரூபாய் 200-லிருந்து ரூபாய் 400-ஆகவும், கடும் ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் உதவித் தொகையை ரூபாய் 200-லிருந்து ரூபாய் 500 ஆகவும் இந்த அரசு உயர்த்தியுள்ளதால், 86,000 ஊனமுற்றோர் பயனடைந்துள்ளனர். சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் 34,632 ஊனமுற்றோருக்குத் தலா ரூபாய் 10,000 மானியமாக ரூபாய் 34 கோடியே 63 இலட்சம் வழங்கப்பட்டு, இவர்கள் வருவாய் ஈட்டும் தொழில்களை மேற்கொள்ள வகைசெய்யப் பட்டுள்ளது. இவை தவிர, ஊனமுற்றோருக்காக இந்த அரசு தனி நல வாரியம் ஒன்றை அமைத்து அதற்காகத் தனிச் சட்டம் இயற்றி அனைத்து உதவிகளையும் வழங்க ஆவன செய்துள்ளது. **உடல் ஊனமுற்றோர் படும் துன்பங்கள் போலவே தசைச் சிதைவு (Muscular Dystrophy) நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோரும் கடும் துயரங்களைச் சந்தித்து வருகின்றனர். அவர்களுக்கு உதவும் வகையில் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோருக்கும் வரும் நிதியாண்டிலிருந்து, கடும் ஊனமுற்றோருக்கு அளிக்கப்படுவது போலவே மாதாந்திர உதவித்தொகையாக ரூபாய் 500 அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**


108. பார்வையற்ற மாணவர்கள் பயன்பெறும் வகையில், அவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை இரு மடங்காக இந்த அரசால் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. 200 ஆசிரியர் பணியிடங்கள் பார்வையற்ற பட்டதாரி இளைஞர்களுக்காக சிறப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **காதுகேளாத குழந்தை களுக்குப் பயிற்சியளிப்பதற்காக, 2006-2007 ஆம் ஆண்டில் 10 மாவட்டங்களில் தொடக்க நிலையிலேயே பயிற்சி அளிக்கும் மையங்கள் (Early Intervention Centres) தொடங்கப் பட்டுள்ளன. வரும் நிதியாண்டில், எஞ்சிய 21 மாவட்டங்களிலும் இம்மையங்கள் தொண்டு நிறுவனங்கள் மூலமாக அமைக்கப்படும்.**

## மனவளர்ச்சி குன்றியோர் நலன்

109. தங்களைத் தாங்களே பராமரித்துக்கொள்ளக் கூட இயலாத மனவளர்ச்சி குன்றியோருக்கு எண்ணிக்கை வரம்பின்றி மாதாந்திர உதவித்தொகை வழங்கிட, இந்த அரசு கடந்த ஆண்டு ஆணையிட்டதை யொட்டி, இதுவரை கூடுதலாக 20,000 பேர் பயனடைந்து, நமது மாநிலத்தில் உள்ள 30,000 மனவளர்ச்சி குன்றியோர் மாதந்தோறும் ரூபாய் 500 பராமரிப்பு உதவித்தொகையாகப் பெற்று வருகின்றனர். மேலும், இவர்களுக்கு ஆரம்ப நிலையிலேயே பயிற்சி அளிக்கும் மையங்கள் மாவட்டந்தோறும் தொண்டு நிறுவனங்கள் மூலமாக அமைக்கப் பட்டுள்ளதோடு, வயதான மனவளர்ச்சி குன்றியோருக்காக 7 இல்லங்களும் தொடங்கப் பட்டுள்ளன. மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளை நடத்தும், அரசு சாராத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவியும் அளிக்கப்பட்டு வருகிறது.

## அரவாணிகள் நலன்

110. பிறப்பிலேயே தனி இயல்புடையவர்களான அரவாணிகளையும், உடல் ஊனமுற்றோரைப் போன்றே மனிதநேய உணர்வோடு நோக்கி, அவர்களுக்கென தனி நல வாரியம் அமைத்தும், அவர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கியும் இந்த அரசு உதவி வருகிறது. **மேலும், அரவாணிகளுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி அளித்து, அவர்கள் தனியாகவோ அல்லது சுய உதவிக் குழுக்களாகவோ தொழில் புரியவும் ஆவன செய்யப்படும்.** அரவாணிகள் தொடங்கும் தொழில்களுக்கு இந்த அரசின் புதிய சிறுதொழில் கொள்கையில் சிறப்புச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. **இளம் வயதில் அரவாணிகளாகத் தங்களை உணர்வோருக்கு இடைக்காலத் தங்கும் விடுதி ஒன்று தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்பட இந்த அரசு நிதியுதவி அளிக்கும்.**





## நரிக்குறவர்கள் நலன்

111. நரிக்குறவர்களை, நல்ல நெறிக்குறவர்கள் என்று அழைத்து, அவர்கள் பல்வேறு இடங்களுக்கும் அலைந்து திரியாமல், ஓரிடத்தில் இருந்து வாழ வேண்டும் என்பதற்காக அவர்களுக்கென தி.மு.க. ஆட்சியில் திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் ஒன்றியம், தேவராயநேரி என்னும் இடத்தில் கட்டப்பட்ட 140 குடியிருப்புகளை 13.3.1975 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார். இருப்பினும், நரிக்குறவர்கள் இன்றும் நாடோடிகளாகவே வாழ்ந்து வருகின்றனர். மேலும், அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் இவர்களை இன்னும் சென்றடைய இயலாத நிலை உள்ளது. **இவர்களுக்குக் கல்வி, மாற்றுத் தொழில் புரிவதற்கான உதவி ஆகியவற்றை அளிக்கவும், அவர்களுக்கு பல்வேறு நல உதவிகளை வழங்குவதற்கும் தனி நல வாரியம் ஒன்று அமைக்கப்படும்.**

## நெசவாளர் நலன்

112. கைத்தறி நெசவாளர் களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், பொங்கல் திருநாளையொட்டி ஏழை எளியோருக்கு இலவச வேட்டி மற்றும் சேலைகள் வழங்கும் திட்டம், வரும் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்காக ரூபாய் 256 கோடி இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு





செய்யப்பட்டுள்ளது. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்பட்டு வந்த வட்டி மானியம் 2003 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளது. **வரும் நிதியாண்டிலிருந்து இக்கடன்களுக்கு 4 சதவீத வட்டி மானியம் மீண்டும் அளிக்கப்பட்டு, வட்டிவிகிதம் 12 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்படும். இதற்காக அரசுக்கு ஆண்டுதோறும் ரூபாய் 12 கோடி செலவாகும். மேலும், ஹட்கோ நிறுவனத்தின் மூலம், தொழிற்கூடங்களுடன் கூடிய குடியிருப்புகள் அமைப்பதற்காக கைத்தறி நெசவாளர்கள் கடன் பெற்று, திருப்பிச் செலுத்த இயலாமல் நிலுவையில் உள்ள ரூபாய் 15 கோடி கடன் தொகை இரத்து செய்யப்படும்.**

113. கைத்தறி நெசவாளர்களுக்கு மத்திய அரசு உதவியுடன் கைத்தறி நெசவாளர்கள் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் புதிய விதிமுறைகளின்படி, மத்திய அரசு மற்றும் மாநில அரசு அளிக்கும் மானிய உதவி தவிர, நெசவாளர்களும் காப்பீட்டுக் கட்டணத்திற்கு தங்களின் பங்குத் தொகையாக ரூபாய் 50 செலுத்த வேண்டியுள்ளது. **ஏழை நெசவாளர்களுக்கு உதவும் பொருட்டு, இந்தத் திட்டத்தின் கீழ் நெசவாளர்களால் அளிக்கப்பட வேண்டிய பங்குத் தொகையையும் அரசே ஏற்க முடிவு செய்துள்ளது. இதனால் இத்திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ள 3 இலட்சம் நெசவாளர்கள் பயன்பெறுவார்கள்.**

114. வயது முதிர்ந்த நெசவாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையை ரூபாய் 200–லிருந்து ரூபாய் 400–ஆக இந்த அரசு உயர்த்தியுள்ளது. கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தை இந்த அரசு அறிவித்துச் செயல்படுத்தி வருகிறது. இதற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மானியமாக ரூபாய் 67 கோடி இந்த வரவு–செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன், **தமிழ்நாட்டில் உள்ள மூன்று இலட்சம் விசைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில், கைத்தறி நெசவாளர்களுக்கு அமைக்கப்பட்டுள்ளது போன்றே அவர்களுக்கும் ஒரு தனி நலவாரியம் அமைத்து நலத் திட்ட உதவிகளை இந்த அரசு வழங்கும்.**

## மீனவர் நலன்

115. ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் சந்திக்க நேரிடும் கொடுமைகளையும் இன்னல்களையும் அகற்றிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இவ்வாறு செல்லும்போது காணாமல் போகும் மீனவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி அளிக்கும்



திட்டத்தையும் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 33,700 கனரக மிதிவண்டிகளும், 60,000 உயிர் காக்கும் கவசங்களும், 4,000 மறு மின்னூட்ட விளக்குகளும் (Rechargeable lamps) வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், சுனாமி நிவாரணத் திட்டங்களின் கீழ் மாநிலத்தில் உள்ள பல்வேறு மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களை மேம்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **குளச்சலில் ரூபாய் 27 கோடி மதிப்பீட்டில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகள் வரும் நிதியாண்டில் தொடங்கும்.**

116. நமது மாநில மீனவர்கள் மீன் பிடிப்பதிலும், மீன்களைச் சேதமின்றிப் பதப்படுத்தி விற்பதிலும், நவீன உத்திகளைக் கடைபிடித்தால் மட்டுமே அதிக வருவாயைப் பெற இயலும். இந்த நோக்கத்தோடு, **வெளிநாடுகளில் உள்ளது போல, கடலில் கூண்டுகளில் மீன் வளர்த்தல், நண்டு வளர்ப்பு ஆகியவற்றில் தமிழக மீனவர்கள் ஈடுபடவும்; கடல் பாசி வளர்த்தல் மற்றும் மீன் பொருட்களை நல்ல முறையில் பதப்படுத்துதல் ஆகியவற்றை மீனவப் பெண்கள் மேற்கொள்ளவும், தேவையான நவீன தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சிகளை அளிப்பதற்கான நவீன மீன்பிடி தொழில்நுட்பப் பயிற்சி மையம் ஒன்றை இந்த அரசு அமைக்கக் கருதியுள்ளது. சுனாமி நிவாரணப் பணிகளைச் சிறப்பாக மேற்கொண்ட டாடா போன்ற பெரும் தொழில் நிறுவனங்கள், எந்தவித ஆதாயமும் எதிர்பாராமல் தங்களின் சமூகப் பொறுப்பின் மற்றுமொரு அடையாளமாக இதற்கு உதவ முன்வந்துள்ளன. அத்தகைய உதவிகளைப் பெற்று, இந்தச் சிறப்பு பயிற்சி மையத்தை அரசு அமைக்கும். இதற்கான அரசின் முதற்கட்ட உதவியாக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## வேலைவாய்ப்பற்ற இளைஞர் நலன்

117. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை அளிக்கும் திட்டத்தின் கீழ், இதுவரை 3,53,488 இளைஞர்கள் பயன்பெற்றுள்ளனர். **இத்திட்டத்திற்காக வரும் ஆண்டில் ரூபாய் 95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** நமது மாநிலத்தில் பெருகிவரும் வேலைவாய்ப்புகளைப் பெற்றுப் பயனடைய, நமது இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது. இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்திட ரூபாய் 8 கோடி ஒதுக்கீட்டில் கடந்த ஆண்டிலிருந்து திறன்மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் வரும் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## அமைப்புசாராத் தொழிலாளர் நலன்

118. அமைப்புசாராத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், இடையில் கலைக்கப்பட்ட தொழிலாளர் நல வாரியங்களை மீண்டும் அமைத்து, அவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த வாரியங்களின் மூலமாக இதுவரை ரூபாய் 62 கோடி அளவிற்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு 2,47,000 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

119. ஏழை அமைப்புசாராத் தொழிலாளர்களையும், அவர்தம் குடும்பத்தினரையும் காப்பீடு செய்து, ரூபாய் 30,000 வரையில் அவர்களின் எதிர்பாராத மருத்துவச் செலவுகளுக்கு உதவும் தேசிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை (RSBY) மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. **இதன் முதற்கட்டமாக, காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் இத்திட்டம் வரும் ஆண்டில் செயல்படுத்தப்படும்.** இதற்கான

தமிழக அரசின் பங்களிப்பாக ரூபாய் 5.24 கோடி இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன், தமிழ்நாட்டில் உள்ள சுமார் 50,000 சிறுசேமிப்பு முகவர்கள் பயன்பெறும் வகையில், அவர்தம் பங்களிப்போடு அரசு மானியம் அளித்து அவர்களுக்கு ஒரு குழுக் காப்பீட்டுத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும்.

## பனைத் தொழிலாளர் நலன்

120. பனைத் தொழிலாளர்களின் நலன் காக்க அவர்களுக்கென தனி நல வாரியம் ஒன்றை அமைத்து, இந்த அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கி வருகிறது. **இவர்கள் தங்களுடைய தொழிலை மேலும் திறம்படச் செய்வதற்கு ஏதுவாக, தலா 4,000 ரூபாய் மதிப்பீட்டில், தொழிற்கருவிகள் வாங்க பனைத் தொழிலாளர்களுக்கு நிதியுதவி வழங்கப்படும்.** இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பாளையங் கோட்டையில் பதநீர் விற்பனை நிலையத்திற்கு பதநீர் குளிர்பதன இயந்திரம் மற்றும் கருவிகள் வழங்கப்படும்.




## கைவினைஞர் நலன்

121. கைவினைஞர்களுக்காக ஒரு தனி நலவாரியம் அமைக்கப்பட்டு அவர்களுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. **மத்திய அரசு அறிவித்துள்ள ராஜீவ் காந்தி கைவினைஞர்கள் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், நமது மாநிலத்தில் உள்ள 10,000 கைவினைஞர்களுக்கு ஆயுள் மற்றும் மருத்துவக் காப்பீடு செய்து தரப்படும்.**

## முன்னாள் படைவீரர்கள் நலன்

122. நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்கும் பெரும் பணிபுரிந்து ஓய்வுபெற்ற முன்னாள் படைவீரர்களின் நலனில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. தமிழ்நாடு




முன்னாள் படைவீரர் கழகத்தின் (TEXCO) மூலம் 9,871 முன்னாள் படைவீரர்கள் அரசுத்துறைகள் மற்றும் பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களின் பணியமர்த்தப்பட்டுள்ளனர். **உள்நாட்டுப் பாதுகாப்புப் பணிகளின்போது உயிரிழந்த படைவீரர்கள் மற்றும் எல்லைப் பாதுகாப்புப் படையினரின் குடும்பங்களுக்கு, தற்போது வழங்கப்படும் கருணைத் தொகையான ரூபாய் 1 இலட்சம் வரும் நிதியாண்டிலிருந்து ரூபாய் 5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். மேலும், இப்பணிகளின்போது ஊனமுறும் படைவீரர் களுக்கு ஊனத்தின் கடுமையைப் பொறுத்து, ரூபாய் 10,000 முதல் ரூபாய் 40,000 வரை தற்போது வழங்கப்படும் கருணைத் தொகை**

**உயர்த்தப்பட்டு, வரும் நிதியாண்டிலிருந்து ரூபாய் 50,000 முதல் ரூபாய் இரண்டு இலட்சம்வரை வழங்கப்படும்.**

## சிறு வணிகர் நலன்

123. சிறு வணிகம் செய்வதற்கு ரூபாய் 5,000 வரை கடன் பெறும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறு வணிகர் கடன் திட்டத்தை இந்த அரசு திருத்தி அமைத்துள்ளது. **ஏழை எளிய நடைபாதை வியாபாரிகள் மற்றும் சிறு வணிகம் செய்யும் பெண்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இத்திட்டத்தின் கீழ், வரும் ஆண்டில் கடன் அட்டைகள் (Credit Cards) வழங்கப்படும். இத்துடன், மேலும் அதிக பயனாளிகள் பயனடையும் வகையில் அவர்களைச் சுய உதவிக் குழுக்களாக ஒருங்கிணைத்து, கூட்டுறவு வங்கிகள் மூலமாக இரண்டு இலட்சம் சிறு வணிகர்களுக்கு ரூபாய் 50 கோடி கடன் வழங்கப்படும்.**

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

124. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பினரின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்தவும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் பல்வேறு திட்டங்களை வகுத்து இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த அரசு பதவியேற்ற பின்னர், கடந்த இரண்டாண்டுகளாகச் சிறப்பு மாநில ஒதுக்கீடாக ஆண்டுதோறும் ரூபாய் 25 கோடி அளித்து; இந்நிதி முழுவதையும் படித்த ஆதிதிராவிட இளைஞர்களுக்கான பயிற்சித் திட்டங் களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட ஆவன செய்துள்ளது. இத்திட்டத்திற்கு வரும் ஆண்டிலும் ரூபாய் 25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், பட்டப்படிப்பு பயின்ற ஆதிதிராவிட இளைஞர்கள், தேசிய அளவில் நடத்தப்படும் பல்வேறு பட்ட மேற்படிப்புத் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்கு உதவக்கூடிய சிறப்புப் பயிற்சித் திட்டம் ஒன்று வரும் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும். **கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட விவசாயக் கடன்கள் இரத்து செய்யப்பட்டதைப் போன்றே, ஆதிதிராவிட விவசாயிகள் தாட்கோ நிறுவனத்திடமிருந்து பெற்று நிலுவையில் உள்ள 5 கோடியே 50 இலட்சம் ரூபாய் விவசாயக் கடன்களும் தள்ளுபடி செய்யப்படும்.**




125. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு கல்வி உதவித் தொகை வழங்குவதற்காக ரூபாய் 154 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது, 1,241 ஆதிதிராவிடர் மாணவர் இல்லங்கள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. **ஆதிதிராவிட மாணவர்கள் அதிக அளவில் தங்கிப் பயில உதவும் வகையில் வரும் ஆண்டில் மேலும் 25 புதிய மாணவர் இல்லங்கள் திறக்கப்படும். இது மட்டுமன்றி, ஏற்கெனவே தனியார் கட்டடங்களில் நடத்தப்பட்டு வருகின்ற 25 மாணவர் இல்லங்களுக்கு, ரூபாய் 12.5 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும். 8 ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளிகளும், 3 உறைவிடத்துடன் கூடிய பழங்குடியினர் நடுநிலைப் பள்ளிகளும் ரூபாய் 3.68 கோடி செலவில் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும்.**

126. ஆதிதிராவிடர் குடியிருப்புகள் அனைத்திற்கும் தகுந்த தனி மயான வசதிகளையும், மயானங்களுக்குச் செல்வதற்கான பாதைகளையும் ஏற்படுத்திட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இதற்கான திட்டம் முனைப்போடு செயல்படுத்தப்பட்டு, மயானங்களுக்கும் அவற்றிற்கான பாதைகளுக்கும் தேவையான நிலங்களை நில எடுப்பு மற்றும் பேச்சுவார்த்தைகள் மூலமாக பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

## தூய்மைப் பணிபுரிவோர் நலன்

127. மனிதக்கழிவை மனிதனே அள்ளும் அவலம் அகற்றப்பட்டுள்ள நிலையில், அத்தகைய பணிகளில் ஈடுபட்டிருந்தோருக்கு மாற்றுத் தொழில்களில் ஈடுபட உதவும் பொருட்டு, ரூபாய் 56 கோடி மதிப்பீட்டிலான மறுவாழ்வுத் திட்டப்பணிகளை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. தூய்மைப் பணியில் ஈடுபட்டுவருவோர் சமூகப் பொருளாதார நிலையில் அடித்தளத்தில் இருப்பதைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கெனத் தனி நல வாரியம் ஒன்றை அமைத்து, நலத் திட்ட உதவிகளை இந்த அரசு வழங்கி வருகிறது. இவர்களின் நலனில் அக்கறை கொண்டு, **கழிவுநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை அகற்றும் பணியில் ஈடுபடுவோருக்குப் பாதுகாப்பு உடைகள் அளிக்கப்படும். மேலும், இவர்கள் கழிவுநீர் குழாய்களில் இறங்கிப் பணிபுரிவதைத் தவிர்க்கும் பொருட்டு சிறப்பு இயந்திரங்கள் பயன்படுத்தப்படும். தூய்மைப் பணி புரிவோருக்கு மருத்துவக் காப்பீடும் ஒவ்வொரு ஆண்டும் உடல்நலப் பரிசோதனையும் இலவசமாகச் செய்யப்படும்.**

128. அருந்ததியர் வகுப்பினர் சமூக, கல்வி, பொருளாதார நிலைகளில் அடித்தளத்தில் இருப்பதால், அவர்தம் முன்னேற்றத்திற்கு சிறப்புச் சலுகைகள் அளிப்பது அவசியம் எனக் கருதி; தற்போது ஆதிதிராவிடருக்கு வழங்கப்பட்டுவரும் இட ஒதுக்கீட்டில், அருந்ததியர்களுக்குத் தனி உள் ஒதுக்கீடு வழங்குவது பற்றி கலந்தாலோசிப்பதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை 12.3.2008 அன்று இந்த அரசு கூட்டியது. இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி, அருந்ததியருக்குத் தனி உள் ஒதுக்கீடு வழங்கிடவும், அருந்ததியர் என்ற வகுப்பினரில் எந்தெந்தப் பிரிவினரை உள்ளடக்குவது என்பதைத் தீர்மானிக்கவும், அப்பிரிவு மக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இட ஒதுக்கீட்டின் அளவைக் கணக்கிடவும்; அண்மையில் மத்திய அமைச்சரவையில் எடுத்த முடிவின்படி அமைக்கப் பட்டுள்ள ஆணையத்தின் ஆலோசனையையும் பெற்று ஆராய்ந்து, அரசுக்குப் பரிந்துரை செய்திட ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. M.S. ஜனார்தனம் அவர்களை கொண்ட ஒரு நபர் குழுவாக அமைப்பதென அரசு முடிவு செய்துள்ளது. இக்குழுவின் அறிக்கையைப் பெற்று அதை நடைமுறைப்படுத்திட இந்த அரசு ஆவன செய்யும்.

129. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக அரசின் திட்டப் பணிகளில் பிரித்தளிக்கக் கூடியவற்றில், சிறப்புக் கூறு திட்டத்திற்கான தனி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 567 கோடியாக இருந்த இந்த சிறப்புக் கூறு திட்ட ஒதுக்கீடு, இந்த அரசு பதவியேற்ற பின்னர் 2006–2007 ஆம் ஆண்டில் ரூபாய் 1,085 கோடியாகவும், 2007–2008 ஆம் ஆண்டில் ரூபாய் 1,544 கோடியாகவும் உயர்த்தப்பட்டது. இது வரும் நிதியாண்டில் மேலும் உயர்த்தப்பட்டு, இந்த சிறப்புக் கூறு திட்டத்திற்காக 2008–2009 ஆம் ஆண்டில் ரூபாய் 2,312 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.


## பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்

130. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபின, ஆதிதிராவிட மற்றும்

தொடர்ச்சி 45ஆம் பக்கம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் மகன் மறைந்த டாக்டர் சி.என்.ஏ.பரிமளம் அவர்களின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி அன்னாரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் மற்றும் பேரறிஞர் அண்ணா அவர்களின் குடும்பத்தினர் உள்ளனர். (25.3.2008)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களை ஓதுவார் ஆறுமுகசாமி அவர்கள் சந்தித்து சிதம்பரம் நடராசர் கோயில் சிற்றம்பல மேடையில் தேவார திருவாசகப் பாடல்களைப் பாட ஆணை பிறப்பித்தமைக்காகவும், மாதம் 3 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கியமைக்காகவும் நன்றி தெரிவித்தார். உடன் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா.வீராசாமி, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் ஆகியோர் உள்ளனர். (19-3-2008)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் தலைமைச் செயலகத்தில் பேரிடர் மருத்துவ மேலாண்மை மையத்தின் உறுப்பினர் டாக்டர். மயில்வாகனன் நடராஜன் அவர்கள், சென்னை அரசுப் பொது மருத்துவமனையில் பேரிடர் மருத்துவ மேலாண்மை மையம் அமைப்பதற்கான திட்ட வரைவினை அளித்தார். உடன் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் திரு. எல். கே. திரிபாதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர். (17-3-2008)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில், காவல் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் திரு. எல். கே. திரிபாதி, உள்துறைச் செயலாளர் திருமதி. எஸ். மாலதி, பொதுத்துறைச் செயலாளர் திரு. தேவ. ஜோதி ஜெகராஜன், காவல்துறை தலைமை இயக்குநர் திரு. பி. ராஜேந்திரன் மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர். (19-3-2008)



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், நகராட்சி நிருவாகத் துறையில் துப்புரவு ஆய்வாளர் பணி நியமன ஆணையினை வழங்கினார். தமிழ்நாடு நகர்மன்றத் தலைவர்களின் பேரவைத் தலைவரும் ஆலந்தூர் நகர் மன்றத் தலைவருமான திரு.ஆர்.எஸ்.பாரதி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை செயலாளர் திரு.தீனபந்து, நகராட்சி நிருவாக ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி ஆகியோர் உடன் உள்ளனர். (15-3-2008)




மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை கோ-ஆப்டெக்ஸ் வளாகத்தில், 'தேசிய கைத்தறிக் கண்காட்சி-2008' என்ற நிகழ்ச்சியினைத் தொடங்கிவைத்தும்,பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 'இழை' விற்பனை நிலையத்தைத் திறந்துவைத்தும், நெசவாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும், புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்தியும் விழாப் பேருரையாற்றினார். இவ்விழாவில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி, மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு.என்கேகே.பி.ராஜா மற்றும் வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்பிரமணியன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.(19-3-2008)





காஞ்சிபுரம் மாவட்டம் திருமுக்கூடலில் பாலாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள புதிய மேம்பாலத்தை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. வெள்ளக்கோயில் மு.பெ. சாமிநாதன், திரு. தா.மோ. அன்பரசன், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தோஷ் மிஸ்ரா ஆகியோர் உடன் உள்ளனர். (29.3.2008)




தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் நடைபெற்ற "ஒப்பற்ற ஒன்பது நாள் கலை இலக்கியத் திருவிழா"வை நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திருமதி.கனிமொழி அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கிவைத்தார் (29-3-2008)

சென்னை மற்றும் புதுச்சேரியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும் மாமல்லபுரத்தைக் காணவும் அதிகாரப்பூர்வமாக இந்தியாவிற்கு வருகைபுரிந்த தாய்லாந்து நாட்டின் இளவரசி மஹா சக்ரி ஸ்ரீனிதாம் அவர்களை பூங்கொத்து அளித்து அரசு கூடுதல் செயலாளர் திரு. எம். வீரசண்முக மணி, செய்தித்துறை இயக்குநர் முனைவர் ஆ.சி. மோகன்தாஸ் ஆகியோர் சென்னை விமான நிலையத்தில் உற்சாகமாக வரவேற்றனர். (20.3.2008)



# மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பார்வையிட்டு வெள்ள நிவாரண உதவிகளை வழங்கினர்



கடலூர்



இராமநாதபுரம்



தஞ்சாவூர்



திருச்சிராப்பள்ளி



திண்டுக்கல்



கன்னியாகுமரி



சிவகங்கை



நீலகிரி



திருவாரூர்

36ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

பழங்குடியின மாணவர்கள் அரசு நடத்தும் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயின்று வருகின்றனர். 2001 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்படாமலிருந்த பள்ளி மாணவர் களுக்கான மாதாந்திர உணவுப் படியை ரூபாய் 400 ஆகவும், 1998 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்படாமலிருந்த கல்லூரி மாணவர் களுக்கான மாதாந்திர உணவுப் படியை ரூபாய் 500 ஆகவும், இந்த அரசுதான் கடந்த ஆண்டு உயர்த்தி வழங்கியது. **இந்தப்படிகளை மேலும் உயர்த்தி வழங்க வேண்டும் என வந்துள்ள பல்வேறு கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு, இவை மேலும் 50 ரூபாய் அளவில் உயர்த்தப்பட்டு பள்ளி விடுதிகளுக்கு மாதம் ரூபாய் 450 ஆகவும், கல்லூரி விடுதிகளுக்கு மாதம் ரூபாய் 550 ஆகவும் வரும் கல்வி ஆண்டிலிருந்து வழங்கப்படும்.**

131. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவர்கள் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரின் ஆண்டு வருமான உச்சவரம்பை, கடந்த தி.மு.க. அரசு 2000 ஆம் ஆண்டில் ரூபாய் 25,000–லிருந்து ரூபாய் 50,000 ஆக உயர்த்தியது. **மக்களின் வருமானம் உயர்ந்துள்ளதை கருத்தில் கொண்டும், அதிக மாணவர்கள் பயனடையும் வகையிலும், இந்த வருமான உச்சவரம்பு ரூபாய் 50,000–லிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தப்படும். இதைப்போன்றே, ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவர்கள், மாநில அரசின் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பும் ரூபாய் 50,000–லிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தப்படும்.**

132. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திட ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, 10,000 இளைஞர்களுக்கு, திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் வரும் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். அத்துடன், இந்த அரசால் தொடங்கப்பட்டவாறு பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவர்கள் தாங்கள் விரும்பும் சிறந்த பள்ளிகளில் சேர்ந்து படிக்க உதவும் திட்டமும் தொடர்ந்து செயல்படுத்தப் படும்.

133. ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவ மாணவியர்களுக்கான பள்ளி மற்றும் கல்லூரி உதவித் தொகைக்காக ரூபாய் 112 கோடி இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது இப்பிரிவுகளைச் சேர்ந்த 65,402 மாணவ மாணவியர்கள் 1,181 விடுதிகளில் தங்கிப் பயின்று வருகின்றனர். **இவர்களது தேவையைக் கருத்தில் கொண்டு வரும் நிதியாண்டில் தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் 25 இல்லங்களுக்கு ரூபாய் 12.5 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும். இத்துடன், அதிக மாணவர்கள் தங்கிப் பயில உதவும் வகையில் வரும் ஆண்டில் மேலும் 25 புதிய மாணவர் இல்லங்கள் திறக்கப்படும்.**

## சிறுபான்மையினர் நலன்

134. சமூகப் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள சிறுபான்மையினரின் முன்னேற்றத்திற்குத் தனிக் கவனம் தேவை எனக் கருதி, சிறுபான்மையினருக்கான தனி இயக்குநரகம் ஒன்றை இந்த அரசு அமைத்துள்ளது. பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலுள்ள இஸ்லாமியர்கள் மற்றும் கிறித்தவர்களுக்குக் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் தலா 3.5 சதவீத இட ஒதுக்கீடு வழங்கவும் ஆணையிடப்பட்டு, சட்டம் இயற்றப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியர்களுக்கான இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவதில் எழுந்துள்ள சில சிக்கல்களை விரைவில் களைய இந்த அரசு ஆவன செய்யும்.

135. அரசு மற்றும் தனியார் துறைகளில் அதிக வேலை வாய்ப்புகளையும் சுய வேலைவாய்ப்புகளையும் பெற, சிறுபான்மையின இளைஞர்கள் மற்றும் பெண்களைத் தகுதிபெறச் செய்யும் நோக்குடன் அவர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தைக் கடந்த ஆண்டு இந்த அரசு தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 2.5 கோடி மதிப்பீட்டில் 5,000 சிறுபான்மையினர் பயன் அடைந்துள்ளனர். இத்திட்டம் வரும் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். **இதுமட்டுமன்றி, வரும் நிதியாண்டில் 25 ஆயிரம் சிறுபான்மையினர் பயன் பெறும் வகையில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ரூபாய் 40 கோடி கடன் உதவி வழங்கப்படும்.** சிறுபான்மையின மாணவர்கள் தொழில் பட்டப்படிப்பு பயில்வதற்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் ரூபாய் 2 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

## இலங்கைத் தமிழர்

136. இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை இரு மடங்காக உயர்த்தி இந்த அரசு வழங்கி வருகிறது. அவர்கள் தங்கியுள்ள அகதிகள் முகாம்களில் உள்ள வசதிகளை மேம்படுத்த ஆவன செய்யப்படும். பிறந்த மண்ணில் வாழ வழியின்றி, பல ஆண்டுகளாக இலங்கைத் தமிழர்கள் சந்தித்துவரும் துயரங்களைத் துடைத்திட, பேச்சுவார்த்தைகள் மூலம் இப்பிரச்சினைக்கு அமைதியான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என இந்த அரசு விரும்புகிறது. இந்த விருப்பத்தை நிறைவேற்றக்கூடிய பொறுப்பும் அதிகாரமும் மத்திய அரசிடம் தான் உள்ளது என்பதையும் சுட்டிக் காட்டுகிறோம்.

## குழந்தைகள் நலன்

137. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்களிலும் பள்ளிகளிலும் உணவு உண்ணும், 2 வயதிலிருந்து 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வாரத்திற்கு மூன்று முட்டைகள் வழங்கப்படுகின்றன. மேலும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயன்பெறும் 1 வயது முதல் 2 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு வாரம் ஒரு முட்டை வழங்கப்படுகின்றது. இதன் மூலம், 70 இலட்சம் குழந்தைகள் பயன்பெறுகின்றனர். குழந்தைகளுக்கு முட்டைகள் வழங்கும் திட்டத்திற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 176 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

138. குழந்தைகளிடையே உள்ள ஊட்டச்சத்து குறைபாடுகளைக் களையவும், கர்ப்பிணிப் பெண்கள், வளர் இளம் பெண்கள் ஆகியோரின் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கிய நிலையை உயர்த்தவும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் தமிழகத்தில் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை அனைத்துக் குடியிருப்புப் பகுதிகளுக்கும், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையினர் அதிகமாக உள்ள பகுதிகளுக்கும் விரிவுபடுத்த, புதிதாக 1,539 குழந்தைகள் மையங்களும் 3,168 குழந்தைகள் குறு மையங்களும் இந்த அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மொத்தமாக, இத்திட்டத்திற்கு வரும் நிதியாண்டில் ரூபாய் 782 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

139. நமது மாநிலத்தில் ஆண்டுதோறும் சத்துணவுத் திட்டத்தின் வாயிலாக 59 இலட்சம் குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர். இக்குழந்தைகளுக்கான காய்கறி மற்றும் இதர செலவினத்தை இந்த அரசு உயர்த்தி வழங்கியுள்ளது. குழந்தைகளும் உணவு சமைக்கும் பணியாளர்களும் சமையல் புகையினால் பாதிப்படையாமல் தடுக்க, சத்துணவுத் திட்ட மையங்கள் மற்றும் குழந்தைகள் மையங்களின் சமையல் அறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தை 2006–2007ஆம் ஆண்டு முதல் இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 1,500 சத்துணவு மையங்கள் மற்றும் 3940 குழந்தைகள் மையங்களுக்கு ரூபாய் 582 இலட்சம் செலவில்

எரிவாயு அடுப்பு, எரிவாயு இணைப்பு மற்றும் பிரஷர் குக்கர் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. **வரும் நிதியாண்டில் ரூபாய் 224 இலட்சம் செலவில் மேலும் 350 சத்துணவு மையங்களும் 2,000 குழந்தைகள் மையங்களும் நவீனப்படுத்தப்படும்.** மொத்தமாக, சத்துணவுத் திட்டத்திற்கு ரூபாய் 820 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

140. ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு இதய நோய் அறுவைச் சிகிச்சை காலதாமதமின்றி மேற்கொள்ளப்பட, தனியார் மருத்துவமனைகள் மூலம் செயற்படுத்தும் கூட்டு முயற்சியாக, இளம் சிறார்கள் இருதய அறுவை சிகிச்சைத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு அறுவைச் சிகிச்சைக்கும் அரசின் உதவியாக ரூபாய் 70,000 வரை தனியார் மருத்துவமனைகளுக்கு வழங்கப்படுகிறது. இதுவரை, 17 புகழ்பெற்ற தனியார் மருத்துவமனைகள் தேர்வு செய்யப்பட்டு, 110 குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சைக்கான அரசு உதவி வழங்கப்பட்டுள்ளது.

## தமிழ் வளர்ச்சி

141. தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளில் தமிழைக் கட்டாயப் பாடமாக்குவதற்காக இந்த அரசால் இயற்றப்பட்ட வரலாற்றுச்சிறப்பு மிக்க சட்டம் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பால் உறுதி செய்யப்பட்டுள்ளது, நம் அனைவருக்கும் மனநிறைவை அளிக்கிறது. தமிழ் மொழியை மத்திய அரசின் ஆட்சிமொழிகளில் ஒன்றாக அறிவிக்கச் செய்யவும், சென்னை உயர்நீதி மன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழை வழக்குமொழியாக்கவும் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அண்மையில் 25.2.2008 தேதியிட்ட கடிதத்தில், மத்திய அரசு இப்பொருள் குறித்து விரைவான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று, மத்திய அரசின் சட்ட அமைச்சர் அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தி உள்ளார்.

142. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இடையறாத முயற்சிகளால் மைய அரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்து பெருமைப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், தமிழ் செம்மொழி ஆய்வுக்கான மத்திய நிறுவனத்தைச் சென்னையில் ரூபாய் 76 கோடி மதிப்பீட்டில் அமைக்கவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் இந்நிறுவனம் செயல்படவும் ஆணையிட்டுள்ளதை நன்றியோடு குறிப்பிட விரும்புகின்றேன். தை முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டு நாளாக நடைமுறைப்படுத்திட சட்டமியற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அருஞ்சாதனையைத் தமிழ் கூறும் நல்லுலகத்தார் அனைவரும் அகமகிழ்ந்து வரவேற்றுள்ளனர்.

143. தொண்டால் பொழுதளந்த தூய தமிழ்ச் சான்றோர்களின் கருத்துகளும் சிந்தனைகளும், வளரும் தலைமுறைக்கு மட்டுமன்றி வரும் தலைமுறைகளுக்கும் பயனளிக்கத்தக்க வகையில், தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கும் திட்டம் தமிழக அரசால் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வகையில் இதுவரை 67 தமிழறிஞர்களின் நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. இவர்களில் 59 தமிழறிஞர்களின் நூல்கள் தி.மு.க. அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, இந்த முறை ஆட்சிப் பொறுப்பேற்றபின், பரிதிமாற் கலைஞர், புலவர் குழந்தை, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. முதலாக 37 தமிழறிஞர்களின் நூல்கள் இதுவரை நாட்டுடைமையாக்கப்பட்டுப் பரிவுத் தொகையாக 3 கோடியே 9 இலட்சம் ரூபாய் அவர்களின் மரபுரிமையர்க்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. **இந்த ஆண்டு, கவிஞர் பெரியசாமித் தூரன், பேராசிரியர் க.வெள்ளை வாரணனார், பண்டிதர் க.அயோத்திதாசர், ஆபிரகாம் பண்டிதர், சதாவதானிசெய்குத்தம்பிப் பாவலர், டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை, மகாவித்வான் ரா.ராகவையங்கார், உடுமலை நாராயணகவி, கு.மு.அண்ணல் தங்கோ, அவ்வை தி.க.சண்முகம், விந்தன், லா.ச.ராமாமிர்தம், வல்லிக்கண்ணன், நா.வானமாமலை, கவிஞர்**

**புதுவைச் சிவம், அ.இராகவன், தொ.மு.சி. ரகுநாதன், சக்திதாசன் சுப்பிரமணியன், டாக்டர் ந.சஞ்சீவி, முல்லை முத்தையா, கவிஞர் எஸ்.டி.சுந்தரம், கவிஞர் மீரா, பேராசிரியர் ஆ.கார்மேகக் கோனார், புலவர் முகமது நயினார் மரைக்காயர், சு.சமுத்திரம், கோவை இளஞ்சேரன், பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் ஆகிய தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்கள் உருவாக்கிய நூல்களின் எண்ணிக்கை, அவை சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கம், அவற்றின் பெருமை ஆகியவற்றின் அடிப்படையில் அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கப்படும்.**

### சுற்றுலா


144. **தமிழ்நாட்டின் தனிச் சிறப்புகள் மற்றும் சுற்றுலாத் தலங்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் சித்திரித்துக் காட்டும் வகையில், 'கையளவில் தமிழகம்' (Miniature Tamil Nadu) ஒன்று அமைக்கப்படும்.** இதில், தமிழகத்தின் அனைத்துப் பாரம்பரியக் கலைகள், இயற்கை வளம் மற்றும் உயர் தனிப் பெருமைகள் குறித்த விவரங்கள் இடம் பெறும். பார்வையாளர்கள் விவரங்களைக் கேட்டு தெரிந்துக் கொள்ளும் வகையில், ஒலி–ஒளிக் காட்சி அமைப்புடன் இந்தத் திட்டம் அமையும். இந்தத் திட்டத்தின் மூலமாக, நமது சிறப்புமிக்கப் பாரம்பரியத்தை அனைவரும் அறியச் செய்து, தமிழகத்திற்கு அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க இயலும். **தமிழகத்தில் ஈகைப்பண்புக்கு இலக்கணமாய்த் திகழ்ந்த கடையெழு வள்ளல்களின் அறச்செயல்களை கல்வெட்டாய்ப் பதிக்கும் முயற்சியாக, வல்வில் ஓரி வாழ்ந்த கொல்லிமலையில், கடையெழு வள்ளல்களின் சிலைகள் செதுக்கிய கலைக்கோட்டம் ஒன்று நிறுவப்படும். இத்துடன், சென்னைக்கு அருகில் உள்ள முட்டுக்காடு பகுதியில், கடலின் அடியில் உலகத்தரம் வாய்ந்த மீன் அருங்காட்சியகம் (Under water Aquarium) ஒன்றும் அமைக்கப்படும்.**




145. தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வருவதைக் கருத்தில் கொண்டு, சுற்றுலாத் தலங்களின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதிலும், இத்தலங்களுக்குச் செல்லக் கூடிய சாலைகளை மேம்படுத்துவதிலும் இந்த அரசு கவனம் செலுத்தும். **முதல் முறையாக முக்கியச் சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லும் சாலைகளை மேம்படுத்துவதற்கென தனி நிதி ஒதுக்கீடு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக, ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் முக்கியச் சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லக்கூடிய சாலைகள் மேம்படுத்தப்படும்.**

## கேபிள் டி.வி.

146. தொலைக்காட்சி நிறுவனங்களை நடத்துபவர்களிடமிருந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பெற்று தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள உள்ளூர் கேபிள் டி.வி. நிறுவனங்களுக்கு விநியோகிக்கும் பணியைச் செய்வதற்காக 'அரசு கேபிள் டி.வி. கார்பரேஷன்' என்ற பொதுத்துறை நிறுவனத்தை தமிழக அரசும் அமைத்துள்ளது. இப்பணிக்குத் தேவையான கருவிகளை வாங்குவதற்கு சர்வதேச ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. விரைவில்




இக்கருவிகள் வரப்பெற்று, இந்நிறுவனம் தன் பணியைத் தொடங்கும்.

147. 12.9.2007 அன்று சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டுவிழா மண்டபத்தில் நடைபெற்ற கேபிள் டி.வி. நடத்துவோர் மாநாட்டில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த உறுதிமொழியின் அடிப்படையில் இவர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. **இம்மாநாட்டில் வைக்கப்பட்ட மற்றுமொரு கோரிக்கையை ஏற்று, 1.4.2008 முதல் கேபிள் டி.வி. மீதான கேளிக்கை வரி அறவே ரத்து செய்யப்படுவதோடு, 31.3.2008 வரையிலான ரூபாய் 16 கோடி நிலுவைத் தொகையும் முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்படும். மேலும், கேபிள் டி.வி. தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இவர்களுக்கென ஒரு தனி நலவாரியம் அமைக்கப்படும்.**

## சின்னத்திரை கலைஞர்கள் நலன்

148. **அண்மைக் காலங்களில், பொதுமக்களின் மனதில் பெரிய இடத்தைப் பெற்று வளர்ந்துவரும் சின்னத்திரைத் துறையில் பணிபுரிவோருக்கு, மருத்துவ சிகிச்சைக்கான நிதியுதவி கிடைக்கச்செய்ய, சின்னத்திரைக் கலைஞர்கள் நல நிதியம் ஒன்று ஏற்படுத்தப்படும். இந்நிதியத்தின் மூலம் அவர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கு ஏதுவாக, இந்நிதியத்திற்கு அரசு ரூபாய் ஒரு கோடி வழங்கும்.**

## வனம்

149. வரும் நிதியாண்டில் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதி உதவியுடன் ரூபாய் 567 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், ரூபாய் 113 கோடி செலவில் 51,500 எக்டேர் பரப்பளவில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும் மாநிலமெங்கும் வரும் நிதியாண்டில் 1,000 தடுப்பணைகள் மற்றும் 300 கசிவுநீர் குட்டைகள் அமைக்கப்படும். அத்துடன் வனப்பகுதிகளில் உள்ள கிராமங்களில் வசிப்போருக்கு உதவும் வகையில், வனச்சாலைகளை மேம்படுத்து வதற்கென முதன்முறையாக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 3 கோடி தனி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

150. தமிழ்நாட்டில் வனப் பரப்பை அதிகரிக்கும் நோக்கத்தோடு கடந்த ஆண்டு இந்த அரசு அறிவித்து துவக்கிவைத்த, தனியார் நிலங்களில் மரம் வளர்க்கும் திட்டம் நமது விவசாயிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. **இத்திட்டத்திற்கு வரும் ஆண்டிலும் ரூபாய் 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுமார் 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் ஒரு கோடி மரக்கன்றுகள் நடப்படும். தமிழகத்தின் சுற்றுப்புறச் சூழலைப் பேணிப் பாதுகாக்கும் பொருட்டு மரங்கள் நடும் பணிகளை மக்கள் இயக்கமாக மேற்கொண்டு வரும் ஈசா அறக்கட்டளை (Isha Foundation) போன்ற தொண்டு நிறுவனங்களுக்கு இந்த அரசு தொடர்ந்து நல்லாதரவையும் ஒத்துழைப்பையும் நல்கும்.**

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு

151. சுற்றுச்சூழல் மாசுபடுதலானது இன்று உலகையே அச்சுறுத்தும் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. **இதுகுறித்து வருங்காலத் தலைமுறையினரான**

**பள்ளிக் குழந்தைகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நமது மாநிலத்தில் உள்ள சுமார் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு சங்கங்கள் அமைக்கப்படும்.** அத்துடன், சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்காக இது குறித்த குறும்படங்கள் மற்றும் விளம்பரங்களைத் தொலைக்காட்சிகளிலும், நாளேடுகளிலும் அரசு வெளியிடும். **மேலும், இன்று மிக முக்கிய பிரச்சினையாக விளங்கக்கூடிய தட்பவெப்ப நிலை மாற்றம் குறித்து தமிழகத்தில் விழிப்புணர்வையும், ஆராய்ச்சியையும் வளர்ப்பதற்காக அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள தட்பவெப்ப நிலை மாற்ற ஆராய்ச்சி மையத்திற்கு ஒரு தடவை மானிய உதவியாக ரூபாய் ஒரு கோடி வழங்கப்படும்.**

## பத்திரிகையாளர் நலன்

152. பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்ற நலிந்த பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஓய்வூதியம் ரூபாய் 3,000 லிருந்து ரூபாய் 4,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பத்திரிகையாளர்கள் குடும்ப ஓய்வூதியம் ரூபாய் 1,500 லிருந்து ரூபாய் 2,000 ஆக உயர்த்தப்பட்டும், பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி விதிகள் தளர்த்தப்பட்டும் அவர்களது குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. கடந்த நிதி நிலை அறிக்கையில் அறிவித்தவாறே, பத்திரிகையாளர் நல நிதியம் ஒன்று அமைக்கப்பட்டு ரூபாய் ஒரு கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையை வைப்பீடு செய்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து, கடுமையான நோயினால் பாதிக்கப்பட்ட பத்திரிகையாளர்களின் மருத்துவ சிகிச்சைக்கு நிதி உதவி அளிக்கப்படும்.

## இந்து சமய அறநிலையத் துறை

153. தந்தை பெரியார் அவர்களின் நெஞ்சில் தைத்திருந்த முள்ளை அகற்றி அவரது கனவினை நனவாக்கும் வகையில், இந்துக்களில் தகுதி பெற்ற அனைத்து சாதியினரும் கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம் என்ற சமத்துவக் கொள்கையை உறுதிசெய்யும் வரலாற்று சிறப்புமிக்க ஆணை இந்த அரசால் வெளியிடப்பட்டது. இதனை நடைமுறைப் படுத்தும் வகையில் நான்கு இடங்களில் சைவ அர்ச்சகப் பயிற்சி நிலையங்களும், இரண்டு இடங்களில் வைணவ அர்ச்சகப் பயிற்சி நிலையங்களும் தொடங்கப்பட்டு 207 மாணவர்கள் அர்ச்சகர் பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்களில் 76 பிற்படுத்தப்பட்ட மாணவர்களும், 55 மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களும், 34 ஆதிதிராவிட மாணவர்களும், 42 பிற வகுப்பின மாணவர்களும் இடம் பெற்றுள்ளனர்.

154. இவ்வரசு பொறுப்பேற்றது முதல் இன்று வரை தமிழகத்தில் 1685 திருக்கோயில்களில் ரூபாய் 37 கோடி செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு விழா நடத்தப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் மட்டும் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு 308 திருக்கோயில்களில், ரூபாய் 45 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, வரலாற்றுச் சிறப்புமிக்க பழமை வாய்ந்த திருக்கோயில்களை அவற்றின் பழமை மாறாமல் சீரமைக்கும் திட்டத்தின் கீழ், 48 திருக்கோயில்கள் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டு வருகின்றன. மேலும் நாயன்மார்களின் தேவாரத் திருவாசகங்களாலும், ஆழ்வார்களின் திவ்யப்ரபந்தங்களாலும் பாடப்பட்ட புராதன திருக்கோயில்களைப் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் ரூபாய் 3.29 கோடி மதிப்பீட்டில் 30 திருக்கோயில்களைப் புதுப்பித்திட அரசு ஆணையிட்டுள்ளது. இத்திருப்பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

## விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்

155. **தமிழ்நாட்டு இளைஞர்களின் உடல் நலம் பேணும் வகையில் மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒரு உடற்பயிற்சி நிலையம் (Gymnasium) அமைக்கப்படும்.** இதற்கான கட்டடங்கள் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டு, உடற்பயிற்சிக் கருவிகள் அரசால் வழங்கப்படும். இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 2.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் தங்கிப் பயிற்சிபெறும் வகையில், புதிய விளையாட்டு வீரர்கள் பயிற்சி விடுதி ஒன்று அமைக்கப்படும்.

## அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர் நலன்

156. அரசின் நலத் திட்டங்களை மக்களிடம் கொண்டுசேர்த்து அரசுக்கும் மக்களுக்கும் இடையே பாலமாக, பொறுப்பாகக் கடமையாற்றும் அரசு அலுவலர்களுக்கு, கடந்த ஆட்சியில் பறிக்கப்பட்ட உரிமைகள் பலவற்றை இந்த அரசு மீட்டெடுத்துத் தந்துள்ளது. காலியாக இருந்த அரசுப் பணியிடங்கள் அனைத்தும், காலமுறை ஊதியத்தில் நிரப்பப்பட்டு வருகின்றன. அரசு ஊழியர்கள் 30 ஆண்டுகள் பணிபுரிந்தாலே முழு ஓய்வூதியம் பெறவும், கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 சதவீதம் அல்லது கடைசி பத்து மாதங்களின் சராசரி ஊதியத்தில் 50 சதவீதம் ஆகியவற்றில் எது அதிகமோ, அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படவும் ஆணையிடப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி அவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த மிகை ஊதியம் (Bonus) மற்றும் சிறப்பு மிகை ஊதியம் (Special Ad-hoc bonus) ஆகியனவும் ரூபாய் 250 கோடி செலவில் மீண்டும் வழங்கப்பட்டு வருகின்றன.




157. அரசு அலுவலர்கள் மட்டுமன்றி அரசுப் பொதுத்துறை நிறுவனங்கள், சட்டப்படியான வாரியங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில் பணிபுரிவோரும் பயனடையும் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு நான்காண்டு காலத்திலும், தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் ஏற்படும் நோய்களுக்கு, மருத்துவ சிகிச்சைக் கட்டணத் தொகை ரூபாய் இரண்டு இலட்சம் வரை மருத்துவ சிகிச்சை பெறலாம். இதன் மூலமாக, அதிக எண்ணிக்கையிலான நோய்களுக்கு சிகிச்சை பெற இயல்வதோடு, மருத்துவமனையில் பணம் செலுத்த வேண்டிய அவசியமின்றி, இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அடையாள அட்டைகள் மூலமாக இலவசமாக சிகிச்சை பெறலாம். இத்திட்டத்தினால் அரசுக்குக் கூடுதலாக ரூபாய் 26 கோடி செலவு ஏற்படும். **இந்தச் சேவையை அளிப்பதற்கான நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இத்திட்டம் வரும் நிதியாண்டிலிருந்து சிறப்பாகச் செயல்படுத்தப்படும்.**

158. இவை தவிர அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களிடமிருந்து வரப்பெற்றுள்ள கோரிக்கைகளைப் பரிசீலித்து, அவர்களை

மேலும் ஊக்குவிக்கும் வகையில், பின்வரும் சலுகைகள் வழங்கப்படும்.

- அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஒய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஒய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும் அகவிலைப்படியை 41 சதவீதத்திலிருந்து 47 சதவீதமாக 1.1.2008 முதல் உயர்த்தி வழங்க மத்திய அரசு ஆணையிட்டுள்ளது. **இதனைத் தொடர்ந்து, மாநில அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் ஆகியோர் பெற்றுவரும் அகவிலைப்படியையும் 6 சதவீதம் உயர்த்தி, 1.1.2008 முதல் 47 சதவீதமாக இந்த அரசு வழங்கும். இந்த உயர்வினால் ஏற்படும் நிலுவைத் தொகையும் ரொக்கமாக வழங்கப் படும்.** இதனால் நடப்பாண்டில், ரூபாய் 136 கோடியும், வரும் நிதி ஆண்டில் ரூபாய் 817 கோடியும் அரசுக்குக் கூடுதல் செலவு ஏற்படும்.

- ஒய்வூதியதாரர்களின் மருத்துவ சிகிச்சை உதவித் திட்டத்தின் கீழ், அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சையை எந்த மருத்து வமனையில் மேற்கொண்டாலும் மருத்துவச் செலவினை மீளப் பெறலாம் என இந்த அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் மருத்துவச் செலவினை ஈடுகட்டக் கோரி விண்ணப்பங்கள் அதிக அளவில் பெறப்பட்டுள்ளதால், தற்போது அவர்களிடமிருந்து ஒவ்வொரு மாதமும் பிடித்தம் செய்து திரட்டப்படும் நிதி போதியதாக இல்லை. **இவ்வாறு ஓய்வூதியர்களுக்கு மருத்துவச் செலவு ஈட்டுத் தொகை கிடைப்பதில் ஏற்படும் காலதாமதத்தை நீக்கும் வகையில், ரூபாய் 10 கோடியை இந்த அரசு மானியமாக அளிக்கும். இதனால் பிப்ரவரி 2008 வரை ஒய்வூதியர்களிடமிருந்து பெறப்பட்ட மருத்துவச் செலவின விண்ணப்பங்கள் அனைத்திற்கும் ஈட்டுத் தொகை வழங்க ஏதுவாகும்.**

- மருத்துவச் செலவுகள் உயர்ந்துள்ள இன்றைய சூழலில், மருத்துவச் செலவினத்தை மீளப்பெறுவதற்கான உச்ச வரம்பான ரூபாய் ஐம்பதாயிரம் மிகக் குறைவாக உள்ளது என பல்வேறு ஒய்வூதியதாரர்கள் சங்கங்களும் சுட்டிக் காட்டியுள்ளன. **வயதான காலத்தில் ஓய்வூதியர்கள் பெறும் மருத்துவச் சிகிச்சைகளுக்கு உரிய தொகையை மீளப்பெறும் வகையில், மாதந்தோறும் ரூபாய் 50 பிடித்தம் செய்து, மேற்கொண்ட மருத்துவச் செலவினத்தில் தற்போது உள்ள 75 சதவிகிதம் அல்லது ரூபாய் ஐம்பதாயிரம் என்ற உச்சவரம்பு, 75 சதவிகிதம் அல்லது ரூபாய் ஒரு இலட்சம் என உயர்த்தி வழங்கப்படும்.**

**159.** மத்திய அரசு அமைத்துள்ள 6–வது ஊதியக் குழு தனது அறிக்கையை இந்த மாத இறுதிக்குள் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசு இந்த ஊதியக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று ஆணை வெளியிட்டபின், அவ்வாணையை ஆராய்ந்து அதன் அடிப்படையில் நமது மாநில அரசு அலுவலர்களுக்கும் அவற்றை நடைமுறைப் படுத்திட விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு


**160.** பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூபாய் 85,344 கோடி அளவில் திட்டப் பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட காலத்தில் வேளாண்மைத் துறைக்கு மீண்டும்

புத்துயிரூட்டுவதோடு, சமூக நீதியை உறுதிசெய்யும் வகையில் அரசின் திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்தப்படும். வரும் நிதியாண்டில், ரூபாய் 16,000 கோடி ஒதுக்கீட்டில் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும். இப்பணிகளுக்கு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் போதிய நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

## வரிகள்

161. கழக ஆட்சியில் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டுவரும் முறைப்படி, 26.2.2008 அன்று அரசு சார்பில் நடத்தப்பட்ட வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகளுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், நுகர்வோர், வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் அனைவரின் நலனையும் கருத்தில் கொண்டு மதிப்புக்கூட்டு வரி விதிப்பில் பின்வரும் சலுகைகள் அறிவிக்கப் படுகின்றன.

மங்கள நாணாக பயன்படுத்த தங்கத்திலான தாலி, கருகமணி, சிலுவை போன்றவற்றிற்கு எடை வரம்பின்றி வரி விலக்கு



- பெண்கள் திருமணத்தின் போது அணியும் தங்கத்திலான தாலிக்கு 8 கிராம் எடை வரை வரிவிலக்கு தற்போது உள்ளது. இதற்கும், இசுலாமிய மற்றும் கிறித்தவ மதத்தினர் மங்கல நாணாக பயன்படுத்துகின்ற கருகமணி, சிலுவை போன்றவற்றிற்கும், தற்பொழுது நடைமுறையிலுள்ள 8 கிராம் எடை வரை என்ற நிபந்தனையை நீக்கி இவற்றிற்கு எடை வரம்பின்றி வரி விலக்கு அளிக்கப்படும்.

- ரொட்டிக்கு (Bread) தற்போதுள்ள வரிவிலக்கு போன்றே, ஏழைகள் உணவாகக் கொள்ளும் பன் மற்றும் ரஸ்க் ரொட்டிகளுக்கும் வரிவிலக்கு அளிக்கப்படும்.

- காகித உறைக்கு உள்ளது போல துணி உள்ளொட்டிய (Cloth lined) காகித உறைக்கும் வரிவிலக்கு அளிக்கப்படும்.

- தமிழ்நாட்டின் பாரம்பரிய மருத்துவமான சித்த மருத்துவத்தை ஊக்குவிப்பதற்காக, சித்த மருந்துகள் தயாரிப்பதற்கான பெரும்பாலான மூலப் பொருட்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது போன்று, அனைத்து சித்த மருந்துகளுக்கும் வரிவிலக்கு அளிக்கப்படும்.

- பெரும்பாலான தாவர எண்ணெய்களுக்கும், அனைத்து வகையான சுத்திகரிக்கப்பட்ட தாவர எண்ணெய்களுக்கும் விற்றுமுதல் நிபந்தனையுடன் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், விடுபட்டுள்ள சோயா எண்ணெய்க்கும் அதே நிபந்தனையுடன் வரிவிலக்கு அளிக்கப்படும்.

- குறிப்பிட்ட விற்றுமுதல் வரை மஞ்சள், மிளகாய், தனியா வகைகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதே விற்றுமுதல் நிபந்தனையுடன் மஞ்சள்பொடி, மிளகாய்ப் பொடி மற்றும் தனியாப்பொடி ஆகியவற்றுக்கும் வரிவிலக்கு அளிக்கப்படும்.

- தேங்காய்க்கு வரிவிலக்குள்ளது போல, அதிலிருந்து தயாரிக்கப்படும்

தேங்காய்த் துருவல், தேங்காய்ப் பால் மற்றும் தேங்காய்ப் பால் பொடி ஆகிய பொருட்களுக்கும் வரிவிலக்கு அளிக்கப்படும்.

- இளநீர் தேங்காய்க்கு ஏற்கெனவே வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தென்னை விவசாயிகள் நலன் கருதியும், செயற்கை குளிர்பானங் களுடன் போட்டியிடும் வகையிலும், அடைக்கப்பட்ட (packaged) இளநீருக்கும் வரிவிலக்கு அளிக்கப்படும்.

- கரும்பு விவசாயிகள் நலன் கருதி வெளிமாநிலத்திற்கு விற்கப்படும் வெல்லத்திற்கும் வரிவிலக்கு அளிக்கும் வகையில், வெல்லத்திற்கு நிபந்தனையற்ற பொது வரிவிலக்கு அளிக்கப்படும்.

- தமிழக அரசின் தொழில் கொள்கையில் குறிப்பிட்டவாறு உயிரி எரிபொருள் உற்பத்தியை ஊக்கு விக்கும் வகையில் காட்டாமணக்கு விதை மற்றும் எண்ணெய்க்கு வரிவிலக்கு அளிக்கப்படும்.

- இரப்பர் பூச்சுள்ள நெசவுத் துணிகளுக்கு (Rubberised textile fabrics) வரிவிலக்கு அளிக்கப்படும்.

- பாக்கு மற்றும் வறுத்த சீவலுக்கு 4 விழுக்காடு வரி நடைமுறையில் உள்ளதால், வறுக்காத சீவலுக்கும் 12.5 விழுக்காட்டிலிருந்து, 4 விழுக்காடாக வரி குறைக்கப்படும்.

- தாதுப்பொருட்களுக்கும், கற்க ளுக்கும் 4 விழுக்காடு வரி உள்ளதால், அவற்றில் இருந்து தயாரித்து விற்பனை செய்யப்படும் மொசைக் சில்லுகளுக்கும் (Mosaic chips) 4 விழுக்காடாக வரி குறைக்கப்படும்.

- காகித அட்டையினால் தயாரிக்கப் பட்ட கோப்பு அட்டைகளுக்கு, 12.5 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்படும்.

- பிளாஸ்டிக்கிலான படச் சட்டங்களுக்கு வரியைக் குறைத்து 4 விழுக்காடு வரிக்குட்படும் பிளாஸ்டிக் பொருட்களுடன் சேர்க்கப்படும்.

- ஏற்கனவே பொது விற்பனைவரி அல்லது மதிப்புக்கூட்டு வரி செலுத்தி வாங்கி, தமிழ்நாட்டில் மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்ட வாகனங்களை மீண்டும் விற்பனை செய்யும்போது விதிக்கப்படும் வரி, 12.5 விழுக்காட்டிலிருந்து, உள்ளீட்டு வரி வரவு இல்லாமல் 4 விழுக்காடாக குறைக்கப்படும்.

- கட்டுமானப் பணிகளுக்கு வாடகைக்கு விடப்படும் பொருட்களுக்கான வாடகை மீது விதிக்கப்படும் 12.5 விழுக்காடு வரி விகிதத்தைக் குறைத்து உள்ளீட்டு வரி வரவு இல்லாமல் 4 விழுக்காடாக வரி குறைக்கப்படும்.

- மின் உற்பத்தி இயந்திரங்கள் (Generators) மீது விதிக்கப்படும் வரி 4 விழுக்காடாகக் குறைக்கப் படும்.

- நட்சத்திர தகுதி பெறாத உணவகங்கள் (Hotels) விற்பனை செய்யும் வணிகச் சின்னமிடப்படாத பொருட்களுக்கு 2 விழுக்காடு வரி விதிக்கப் படுகிறது. அதே சமயம், அவர்களின் கொள்முதலுக்கு செலுத்தும் வரியை உள்ளீட்டு வரி வரவு வைத்துக் கொள்ளக்கூடாது என்ற நிபந்தனை உள்ளது. உணவகங்கள் வணிகச் சின்னமிடப்பட்ட பானங்கள், ஐஸ்கிரீம்கள் ஆகியவற்றையும் விற்பனை செய்கின்றன. இதனால், இவற்றின் கொள்முதலுக்கு 12.5 விழுக்காடு வரி செலுத்தி

விற்பனைக்கும் 12.5 விழுக்காடு வரி செலுத்தும் நிலை உள்ளது. இதைத் தவிர்க்க, அவர்கள் விற்பனை செய்யும் வணிகச் சின்னமிட்ட பொருட்கள் மீதான வரியும் 2 விழுக்காடாகக் குறைக்கப்படும். அதே சமயம் அப்பொருள்களின் கொள்முதலுக்கு உள்ளீட்டு வரிவரவு வைத்துக் கொள்ள இயலாது என நிபந்தனை விதிக்கப்படும். நிபந்தனையுடன் கூடிய வரிவிலக்குப் பொருட்களான சமையல் எண்ணெய், பருப்பு மற்றும் பயறு வகைகள், மஞ்சள், மிளகாய், தனியா ஆகிய பொருட்களை உணவகங்கள் கொள்முதல் செய்யும்போது, தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டத்தின் பிரிவு 12இன் கீழ் கொள்முதல் வரி செலுத்த வேண்டியுள்ளது. இதைத் தவிர்க்க, இப்பொருட்களுக்கு கொள்முதல் வரியிலிருந்து விலக்கு அளிக்கப் படும்.

- மதிப்புக் கூட்டு வரி விதிப்பை மேலும் எளிமைப்படுத்தவும், முறைப் படுத்தவும், தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் 2006 மற்றும் அதன் விதிகளில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். இது தொடர்பான விவரங்கள் வணிகவரித்துறை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப் படும்.

- 01.01.2007 முதல் மதிப்புக் கூட்டு வரி செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் முந்தைய ஆண்டுகளில் விதிக்கப்பட்ட வரி, பல காரணங்களினால் வணிகர்களால் செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளது. 2001-2002 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்திற்கான வரி நிலுவைகளைத் தீர்க்கும் வகையில், 'ஒரேமுறை தீர்வுத் திட்டம்' வரும் நிதியாண்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் விவரங்கள் வணிக வரி மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்படும்.

- தற்போது அறிவிக்கப்படும் வரிவிலக்கு மற்றும் வரிக்குறைப்பு சலுகைகள் 1.4.2008–லிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

## ஒட்டுமொத்த நிதிநிலை

162. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தின் நிதிநிலை பற்றிய மொத்தக் கணிப்புகளைத் தற்போது நான் அளிக்கின்றேன். 2008–2009 ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசின் மொத்த வருவாய் வரவுகள் ரூபாய் 51,505.62 கோடி எனவும், ஏற்படக்கூடிய வருவாய்ச் செலவினங்கள் ரூபாய் 51,421.57 கோடி எனவும் மதிப்பிடப்பட்டுள்ளன.

163. வரும் நிதியாண்டில், நிகரக் கடன்கள் மற்றும் முன்பணங்கள் உள்ளிட்ட அரசின் மூலதனச்செலவு ரூபாய் 9,876.35 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதனால் ரூபாய் 9,792.30 கோடி அளவிற்கு நிதிப்பற்றாக்குறை ஏற்படும். இது 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள நிதிப்பற்றாக்குறை குறியீட்டை விட, அதாவது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீதத்தை விட, குறைவாகவே உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்தில் கொள்ள வேண்டுகிறேன். பொதுக் கணக்கின் நிகரத்தோடு எடுத்துக் கொண்டால், ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ரூபாய் 2.19 கோடியாக இருக்கும். செலவினங்களில் சிக்கனத்தைக் கடைப்பிடித்தும் வரிவசூலை மேம்படுத்தியும் இந்தப் பற்றாக்குறை ஈடுகட்டப்படும்.

164. வரவு–செலவுத் திட்ட உரையின் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ள இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தில் (Medium Term Fiscal Plan – MTFP), மாநிலத்தின் எதிர்கால நிதிநிலை செயல்திட்டம்

கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இதனை வரவு–செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாகப் படிக்கப் பட்டதாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். இந்தத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிநிலை இலக்குகளை இந்த அரசு செம்மையாகப் பின்பற்றும்.

165. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி, தோழமைக் கட்சிகள், எந்தக் கட்சியையும் சாராதவர்கள் என்ற அனைத்துத் தரப்பினருக்காகவும் காய்தல், உவத்தல் இன்றி விருப்பு வெறுப்பற்ற தன்மையில் நடைபெறுவது தான் ஒரு நல்லரசு. அந்த நல்லரசை அளித்திட வேண்டுமென்ற தூய்மையான எண்ணத்துடன் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

166. தமிழகம் வளம் பல பெற்று நலம் பல எய்திடும் வண்ணம் முயற்சிகளை மேற்கொண்டு செயல்படும்போது, எதிர்கொள்ளும் இடையூறுகளை விலக்கிக் கொண்டு விடியலைத்தேட அரும்பாடுபட வேண்டியுள்ளது. சான்று கேட்பின், சரித்திர காலந்தொட்டு தமிழ்மண்ணை செழிக்கச் செய்திட நட்புறவு கொண்டிருந்த கர்நாடகத்தின் காவிரிப்பிணக்கு – பாலாறு – முல்லைப் பெரியாறு என இணக்கம் ஏற்படாத இடையூறுகள்! உரிமையுள்ள குடிதண்ணீரைக் கூட கொடுக்க முடியாதெனக் குறுக்கே நிற்கும் கொடுமை ! ஒரே இந்தியா – ஒரே நாடு – ஒரே தேசம் – இமயம் முதல் குமரி வரை இந்நாட்டுமக்கள் – இந்திய மக்கள் என்பதெல்லாம் ஏட்டில் எழுத்தாக மட்டுமே ஒளிவிடுகின்றனவே அல்லாமல்; ஒற்றுமை – ஒருமைப்பாடு – இறையாண்மை இவையனைத்தும் கேள்விக்குறிகளாகி; நமது தமிழகத்தின் தேவைகளும் கோரிக்கைகளும் கேலிப்பொருள்களாகி விடுகின்றன. இந்த நிலையில், முக்கி முனகி, மூச்சிறைக்க – முட்டுக்கட்டைகளைக் கடந்து, திட்டங்களைத் தீட்டி மெல்ல மெல்ல, ஆனால் உறுதியாக நிலையாக முன்னேறுவதற்குத் துணை நிற்க முன்வராமல்; மத்திய அரசும் பாராமுகமாக இல்லாமல் நமது உரிமைக்குப் பாதுகாப்பாக இருந்திட வேண்டும் என்கிற நமது வேண்டுகோளை ஒருபுறம் வலியுறுத்தியவாறு; மறுபுறம் வளம் பெருக்கித் தமிழகம் வாழும் வலிமை பெற அனைவரும் அணிவகுத்து நிற்போம்.

## தமிழ்ப் புத்தாண்டு

167. திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத் திங்கள் முதல் நாள் தான் தமிழ்ப் புத்தாண்டு தொடக்கம் என்பது ஒட்டுமொத்தமாக அனைத்துத் தமிழ் அறிஞர்களும் ஒப்புக் கொண்டுள்ள உண்மை என்பதால்; தைத் திங்கள் முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டு தொடக்கம் என அறிவித்து நடைமுறைப்படுத்திட இந்த அரசு முடிவெடுத்து, அதற்கான சட்டத்தை கடந்த 1.2.2008 அன்று சட்டப்பேரவையில் நிறைவேற்றியது. அதனையொட்டி பொங்கல் திருநாளைத் தமிழர் திருநாளாகக் கொண்டாடி வரும் தமிழ்நாட்டு மக்கள்; இனி – தமிழ்ப் புத்தாண்டு பிறக்கும் நாளாகவும் இணைத்து இந்நாளை இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில், வாழை, மா, பலா என முக்கனித் தருக்களை நாட்டி; வண்ண வண்ணக் கோலங்களிட்டு; வரிசை விளக்குகளால் ஒளியுமிழ் இல்லங்கள் புது எழில் காட்டிட; மழலையர், மாணவர், மங்கையர், மகிழ்ச்சியில் தோய்ந்து, புத்தாடை புனைந்து தமிழ் மானம், தன்மானம் போற்றிப் பாடியும் ஆடியும் சமத்துவ உணர்வு பரப்பியும்; தமிழ்ப் புத்தாண்டு இதுவெனத் துள்ளும் மகிழ்ச்சியால் அன்பை அள்ளிப் பொழிவர் எனும் அவ்வகை நிகழ்ச்சிகள் நினைவை விட்டு அகலா வண்ணம் நீக்கமற நிறைந்திடட்டும்! தமிழ்ப் புத்தாண்டு தினத்தை தமிழர்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் தாங்கள் வாழும் இடங்களில் எல்லாம் விழாவெடுத்துக் கொண்டாட வேண்டும் எனத் தமிழக அரசின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். இந்த நாளில், சென்னையில் கடந்த இரண்டாண்டுகளாக நடத்தப்பட்டு மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள சங்கமம் நிகழ்ச்சி போன்று, நமது தமிழ்க் கலாச்சாரத்தின் சிறப்புகளையும் பண்பாட்டின் மேன்மையையும் பறைசாற்றும்

பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகளை மாநிலமெங்கும் உள்ள மாநகரங்கள், நகரங்கள், கிராமங்கள், பட்டிதொட்டிகள் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் அவரவர் வசதிக்கேற்ப கொண்டாடி மகிழ வேண்டுமென முதல்வர் கலைஞர் தமது விழைவினைத் தெரிவித்துள்ளார்.



## பேரறிஞர் அண்ணா புகழ் மணக்கும் நூற்றாண்டு


168. எங்களையெல்லாம் ஆளாக்கிய – எங்கள் உயிராக – உயிர் மூச்சாக – இதயத் துடிப்பாக இருக்கின்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு; இந்த 2009 ஆம் ஆண்டாகும். அந்தப் பெருந்தகைக்கு நூற்றாண்டு விழாவினை எடுக்கும் வாய்ப்பு, ஆளுங்கட்சியாக நாம் இருக்கும் ஆண்டில் வாய்த்திருப்பதை நாம் பெற்ற பேறாகக் கருதுகிறோம். அண்ணாவின் நூற்றாண்டு விழாவினை இந்த உலகமே வியக்கும் வண்ணம் ஓராண்டு முழுவதும் கட்சி வேறுபாடின்றி தமிழக அரசின் சார்பில் கொண்டாடுவோம். அண்ணாவின் அருமை பெருமைகளையெல்லாம் அவனிக்கு எடுத்துக் கூறுவோம்.


169. ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டாண்டுகள் மட்டுமே வாழ்ந்த நிலையிலும் ஜனநாயகத்தின் மாண்பினை உலகத்திற்கு எடுத்துக் காட்டிடும் வகையில் ஆட்சி புரிந்த பெருமை அண்ணாவிற்கு உண்டு. தமிழகத்திற்கு தமிழ்நாடு என்று அண்ணா பெயர் சூட்டியது அந்த இரண்டு ஆண்டு காலத்திலேதான். பிறமொழி ஆதிக்கம் தமிழை அழித்துவிடக் கூடாது என்பதற்கு பாதுகாப்பாக தமிழகத்திற்கு தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகள் மட்டும்தான் தேவை என்ற அறிவிப்பைச் செய்ததும் அந்த இரண்டாண்டு காலத்திலேதான். சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளில் அக்கறை கொண்டு சுயமரியாதை திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்து தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றியதும் அந்த இரண்டாண்டு காலத்திலேதான். மாநில சுயாட்சிக் கொள்கையைத் திராவிட முன்னேற்றக் கழகம் எழுப்பிட அதற்கு முதலில் வித்தூன்றியதும் பேரறிஞர் அண்ணா அவர்கள் தான். அவருடைய பெருமையை நாம் பாடிட – தற்போதைய இளைஞர் சமுதாயம் அந்த மறக்க முடியாத மாமனிதரைப் பற்றி நன்றாக அறிந்திட, 2009 ஆம் ஆண்டு அண்ணாவின் நூற்றாண்டாக தமிழகமெங்கும் கொண்டாடப்படும் என்ற அறிவிப்பையும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் சார்பில் செய்திட விரும்புகிறேன்.

170. இந்த வரவு–செலவுத் திட்ட அறிக்கையைச் சிறப்புறத் தயாரிப்பதில் முழு ஈடுபாடு கொண்டு இடையறாது ஒத்துழைத்து அரும்பணியாற்றிய நிதித் துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., அவர்களுக்கும், அரசின் நிதித் துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளின் அதிகாரிகளுக்கும் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, 2008–2009 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட அறிக்கையை இப்பேரவை முன் வைக்கின்றேன்.

**வணக்கம்**

* * *





# சுமந்தவள் சுமந்தசோகம்

~ கலைஞர்

பனிமுட்டை அடை காக்கும்
பசும்புல்லின் தரைமீது
மணித் தேர் அசைவது போல்
மாதொருத்தி நடந்து வந்தாள்
கனித் தமிழ்ச் சொல் உதிர்க்கும் புலமை மிக்காள்
காக்கைப் பாடினி பொன்முடியார்க்குத் தமிழில் அவள் அக்காள்
அதியமான் நெடுமானஞ்சி – வேள்பாரி வள்ளல் நாடன்
சேரமான் மாவெண் கோவன்,
கானப்பேர் தந்த வழுதி – மற்றும்
சோழனாம் பெருநற்கிள்ளி
ஆகியோர் புகழைப்பாடித் தமிழுக்கு
அணி பல பூட்டி நின்ற

அறிவொளி ஔவை நல்லாள்!
காலைக் கதிரவன் போல் கை சிவக்கக் கொடை வழங்கும்
காவலர்கள் வாழ்ந்திருந்த தமிழ்நாடு!
ஓலை கொண்டொருவன் போர் என்று வந்துவிட்டால்
மாலை சூடுகின்ற வேளையென்றும் பாராமல்
தோளைத் தொத்துகின்ற பெண்கிளியைப் புறம் விடுத்து,
வாளைக் கூரேற்றி வான் நோக்கி நிமிர்கின்ற வீரமறவர்களின் தாய்வீடு

பாலை, குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதமென்று
நிலம் வகுத்து வாழ்கின்ற தமிழரிடை
சோலைப் பூவினம் போல் தமிழ்க் கவிதை மலரவைத்தாள்.
தாயகத்துக் கற்புநிறை பிறழாத
காதல் சொன்னாள் – களம் சென்றார் வீரம் சொன்னாள்.
களத்தில்,
சாதல் இன்னே வரட்டுமென்று சென்றுவிட்ட தலைமகனும்
சந்தனத்துக் கட்டை போல மணக்கட்டும் இலக்கியத்தில் எனக் கூறிப்

பாதம்முதல் உச்சிவரை குளிர்கின்ற தாய்க்குலத்தை
எண்ணியெண்ணிப் பெருமை கொண்டாள், தன்
பூவடிகள் புல்மீது அழுந்தியதால் பனித்துளிகள் அழிந்துவிடும்.
போரடியில் நெல்மணி போல் பகைவர்களின் சிரம் வீழும்
அமர்க்களத்தில்!

இதை நினைத்து,
நடக்கின்றாள் ஔவையம்மை!
நாமணக்கும் தமிழம்மை! அறிவம்மை! அழகம்மை!

காலூன்றிப் பனியொற்றி வருகின்ற தாயின் முன்
கோலூன்றிப் பிறிதொரு தாய் வந்து நின்றாள்.

"அடி! தும்பை மலர் முடிதாங்கி!
துவண்டு விட்ட காலிரண்டும் வாழைத் தண்டாய்க்
குளிர்ந்து வரும் நேரத்தில் நீ ஏன் வந்தாய்?
விற்புருவம் என்றுன் ஆளன் அழைத்திட்ட காலம்போய்
வில்லுருவம் முதுகில் பெற்ற இள நங்காய்
விழியிரண்டும் வேலென்றார் அன்று:
வழி இருண்டு போனதென்று கோல்கொண்டாய் இன்று!
தமிழ்நாட்டு முத்தெல்லாம் தீர்ந்ததென்று பல் கழற்றிப்
பிறநாட்டு வாணிபத்தைச் செய்தவளே!

எங்கெழுந்தாய் ? ஏன் பதைப்பு ?
என்ன வாட்டம் ?" எனக் கேட்டுக்
குறும்பு செய்தாள் ஔவையம்மை!

"வேலி போட முடியாது இளமைக்கென்று தெரிந்த பின்னும்
கேலி பேசும் உன் போக்கு புரியவில்லை"
என மறித்து அந்தத் தாய் பேசலானாள் :–

"புண்பட்ட என்னகத்தில் புலமைத் தாயே உந்தன் கேலி,
பண்பட்ட தமிழ் மருந்தாய்ப் பாய்வதை நான் உணருகின்றேன்.
கண்கெட்ட கிழவி எந்தன் கரம்தொட்டு வணங்கிச் சென்ற
காளையை நான் மறக்கவில்லை.
மண் முட்டி எழுந்து நிற்கும் மாங்கன்றின் தளிர்தான் மேனி.
பொன்கொட்டிக் கொடுத்தாலும் வளையாத மனவலிமை
புலிக்குட்டி விளையாடும் அவன் மடியில்!
அந்த மகன் ஆசைமகன் அணிவகுத்தான்,
சொந்த மண்ணின் நலங்காக்கப் பணிவகுத்தான்!"

முடிக்கவில்லை முதியவளும்:
பொறுக்கவில்லை ஔவைக்குக்
குறுக்கிட்டாள்.
"களம் சென்ற மகன் வீரம் புகுந்து கூறிக்
கண் கலங்காத் தாய் வீரம் காட்டுதலே தமிழர் மரபு!
முதியவளே! மறவர் குல வழக்கிற்குப்
புதியவளாய் இருக்கின்றாய்! – வியக்கின்றேன்" என்றாள்.
"முழுதும் கேள் பெருமாட்டி!
பழுதொன்றும் காணமாட்டாய் என் நிலையில்!
அழுதழுது என் விழிகள் வீங்கியதை மறுக்கவில்லை.
பொழுதெல்லாம் கவலையினால் புலம்புவது பொய்யல்ல!
ஏனென்று தெரிந்து கொள்வாய்
நானொன்றும் மறைக்கவில்லை!"

"சொல்" என்றாள் ஔவை
சொன்னாள் அவள்.
"கொற்றக் குடை சாயாத கொடித்தேர் மன்னர்
கற்றறிந்த பாவாணர் கடமைமிகு மாவீரர்
மற்றவர்க்கும் பெருந்தலைவர் அறிவாய் நன்று
அவர் படையில் இருக்கின்றோர் பல்லோர் வீரர்
ஆட்டுக்கிடா அணிவகுத்துச் செல்வது போல்

அரசன் பின் நடப்பதற்குத் தயங்கமாட்டார்.
ஆயிரம் பேர் மன்னர்க்குப் பின்னால் இருந்தும்
அவர் மட்டும் என் மகன்பால் அளவற்ற அன்புகொண்டார்.
போர்முனையில் ஓய்வெடுத்துக் கிடக்கும்போது
"தேறல்" என்னும் உற்சாகச் சாறுதனைத் திறல்மறவர்
அருந்துதற்குத் திரண்டு நிற்பார்.
அப்போது மன்னரவர் என்மகனை அருகழைத்து
அனைவரினும் அதிகபானம் அளித்து மகிழ்வார்.
என் வாட்டம் இப்போது கேட்பாயம்மா!
என்புகளைத் தெப்பமாக்கி நரி மிதக்கும் போர்க்களத்தில்
தலையுருட்டிப் பந்தாடும் பறவையினம்!
அத்தலையில் ஒரு தலையாய் என்மகன் தலையும்
இருந்தாலன்றோ இறைவனளித்த தேறலுக்கும் பெருமையுண்டு
மன்னன் அன்பை மிகையாய்ப் பெற்றான்
மண்டையில் தேறலும் அதிகம் பெற்றான்
மாண்டனன்போரில்; புகழ்
பூண்டனன் எனும் காட்சி
காண்டிடல் அரிதோ எனக் கலங்கினேன் அம்மா!

தவறா ?" என்றாள்.
அந்தத் தாயாக நான் இல்லையே என்று
அகமிக நொந்தாள் ஔவைப் பிராட்டி!

**"வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்**
**தன்னோர் அன்ன இளையர் இருப்பப்**
**பலர்மீது நீட்டிய மண்டையென் சிறுவனைக்**
**கால்கழி கட்டிலிற் கிடப்பித்**
**தூவெள் அறுவை போர்ப்பித் திலதே."**

(புறநானூறு – பாடல் : 286, பாடியவர் : ஔவையார்)

<u>பொருள் விளக்கம்:</u>

வெள்யாட்டுச் செச்சை = வெள்ளாட்டுக் கிடாய்

மண்டை = தேறல் எனும் மது

கால்கழி கட்டில் = காலில்லாத கட்டிலெனப்படும் பாடை.

தூவெள் அறுவை = (உடலை மூடுகின்ற) தூய வெள்ளைத் துணி

**– கலைஞரின் "சங்கத்தமிழ்"** நூலிலிருந்து



# தமிழகம் அமைதிப் பூங்காவாக இருப்பதற்கு மக்களுடைய ஒத்துழைப்பும் காவல்துறை நண்பர்களும்தான் காரணம்

மாண்புமிகு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
15–3–2008 அன்று சென்னை வண்டலூர் அருகிலுள்ள ஊனமாஞ்சேரியில் தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம் மற்றும் காவல்துறைத் தலைவர் வடக்கு மண்டல அலுவலக கட்டடத்தைத் திறந்துவைத்து ஆற்றிய உரை.

இந்த நல்ல மாலை நேரத்தில் தமிழ்நாடு காவலர்களுக்கான உயர் பயிற்சியகத்தைத் திறந்து வைக்கின்ற இனிய வாய்ப்பைப் பெற்றமைக்கு இந்த வாய்ப்பினை நான் பெறுவதற்கு வாய்ப்பளித்த காவல்துறை அதிகாரிகளுக்கும், நண்பர்களுக்கும் என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு காவல் துறையோடு எனக்கு அறுபது அல்லது எழுபது ஆண்டு கால அனுபவம் உண்டு. "உன்னுடைய சட்டமன்ற வாழ்விற்கே ஐம்பதாண்டு கால அனுபவம் தானே? எப்படி தமிழ்நாடு காவல் துறையோடு எழுபதாண்டு காலத்திற்கு மேலான அனுபவம்? என்று கேட்பீர்களேயானால், நான் பொது வாழ்விலே ஈடுபட்ட காலந்தொட்டு எனக்கும் காவல் துறைக்கும் நீக்கமற ஒரு தொடர்பு – ஒரு நட்பு – சில நேரங்களில் பகை– இவையெல்லாம் அடுக்கடுக்காக வந்ததுண்டு. நான் பகை வந்தால், அதை நகைமுகத்தோடு தான் எதிர்கொள்வேனே அல்லாமல், பகை வந்ததே என்று என்றைக்கும்



என் உள்ளம் புகைந்தது இல்லை. அதைப் போல காவல் துறையிலே உள்ள அதிகாரிகளிடத்தில், நண்பர்களிடத்தில், காவலர்களிடத்தில் எனக்கு ஏற்பட்ட தொடர்பு – நான் சட்டமன்றத்திலே எதிர்க்கட்சியிலே இருந்த அந்தக் காலத்திலேயே ஏற்பட்ட தொடர்பாகும். தொழிலாளர்களுடைய பிரச்சினைகளை, அரசு அலுவலாளர்களுடைய பிரச்சினைகளை எப்படி அனுதாபத்தோடு கவனிக்க வேண்டுமோ அப்படி அனுதாபத்தோடு கவனிக்கின்ற ஒரு மன நிலையிலே தான் என்னை நான் அந்தக் காலத்திலேயே பழக்கிக் கொண்டேன்.

அப்போது நான் சட்டமன்றத்திலே வீற்றிருந்த அந்தக் கால கட்டத்தில் சட்டமன்றத்திலே காங்கிரஸ் கட்சியின் தலைவர்களால், அமைச்சர்களால் – நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம் போன்றவர்களால் படிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையில் – ஐந்தாறு ஆண்டு காலம் தொடர்ச்சியாகப் பார்த்தால் – 100 கோடி ரூபாய்க்கு மேல் அந்த நிதி நிலை அறிக்கை மொத்த மதிப்பீடு இருந்ததில்லை. 57 அல்லது 58 என்று கருதுகிறேன். நான் 57ஆம் ஆண்டே சட்டமன்றத்திற்குச் சென்றவன். 58ஆம் ஆண்டு –வரவு–செலவுத் திட்டத்தைப் படிக்க எழுந்த நிதி அமைச்சர் சி.சுப்ரமணியம் அவர்கள் "இன்றைக்கு நான் "செஞ்சுரி" அடிக்கப் போகிறேன்" என்ற நிதி நிலை அறிக்கையைப் படிக்க ஆரம்பித்தார். தான் படிக்கப் போகின்ற பட்ஜெட் 100 கோடி ரூபாய்க்கான பட்ஜெட் என்பதை அவ்வளவு மகிழ்ச்சியோடு அன்றைக்கு அவர் சொல்ல வேண்டியிருந்தது.


**பணத்தின் மதிப்பு**

100 கோடி ரூபாய் பட்ஜெட்டை "செஞ்சுரி" அடிக்கப் போகிறேன் என்று அன்றைக்கு அவர் சொன்னதற்குக் காரணம், அப்போது இருந்த பணத்தின் மதிப்பு – இன்றைக்கு அந்தப் பணத்தின் மதிப்பு என்ன என்பதை நாம் எண்ணிப் பார்த்தால் புரியும். இன்றைக்கு நாம் சட்டமன்றத்திலே படிக்கப் போகின்ற பட்ஜெட் ஏறத்தாழ எத்தனை "செஞ்சுரி"கள் என்று எண்ண வேண்டிய அளவிற்கு இருக்கும். ஆயிரக்கணக்கிலே இருக்குமா? பல்லாயிரக்கணக்கிலே இருக்குமா? லட்சக்கணக்கிலே இருக்குமா? கோடிக்கணக்கிலே இருக்குமா? என்கின்ற அளவிற்கு – அந்த அளவிற்கு பணத்தின் மதிப்பு உயர்ந்திருக்கின்றது. அந்தக் காலத்தில் கிராமப் புறங்களில் நான் சுற்றியலைந்து வெகு தூரம் செல்ல விரும்பவில்லை. என்னுடைய இல்லத்திலேயே, என்னுடைய தகப்பனார் கிராமத்திலிருந்து பக்கத்தில் உள்ள ரயில்வே நிலையம் உள்ள நகரத்திற்குச் சென்று விட்டுத் திரும்பி வரும்போது – என்னுடைய தாயாரின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு, "அஞ்சுகம், செய்தி தெரியுமா, பவுன் விலை இருபது ரூபாய் ஆகிவிட்டது" என்று வேதனையோடு சொல்வார். "அப்படியா" என்று என் அம்மா ஆச்சரியத்தோடு கேட்பார்கள்.

பவுன் விலை இருபது ரூபாய் என்று ஆனது என் தந்தைக்குக் கோபத்தையும், என் அம்மாவிற்கு சோகத்தையும் வெளிப்படுத்துகின்ற செய்தியாக அன்றைக்கு இருந்தது. இன்றைக்குப் பவுன் விலை இருபது ரூபாய் இல்லை. ரொம்பக் குறைவு, பத்தாயிரம் ரூபாய் என்கின்ற அளவிற்கு உயர்ந்திருக்கின்ற காலக் கட்டத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதைச் சொல்வதற்கான காரணம், அன்றைக்கு இருந்த பணத்தின் மதிப்பு எந்த அளவில் என்பதற்காகத் தான்.

**காவலர்களின் கஷ்டங்கள்**

ஒரு போலீஸ்காரருக்கு அப்போது மாதச் சம்பளம் 80 ரூபாய் என்று இருந்தது. அதுவே அந்தக் காலத்தில் பெரிய சம்பளம். பெரிய வருமானம். இதை சின்ன வருமானம் என்று யாராவது கருதினால், பெண் பார்க்கப் போகும்போது கூட, பெண்வீட்டார் கேட்பார்கள் – "என்ன மாப்பிள்ளைக்கு எவ்வளவு வருமானம்?" என்று கேட்பார்கள். மாதம் ரூபாய் 80 ஊதியம் என்பார்கள். மேல் வரும்படி ஏதாவது கிடைக்குமா? என்று மீண்டும் கேட்பார்கள். "மேல்வரும்படி" என்பதற்கு என்ன பொருள் என்பதை நான் இப்போது கூற விரும்பவில்லை. "மேல்"(Male) வரும்படி, "பிமேல்"(Female) என்றெல்லாம் இல்லை, இரண்டு வரும்படியும் ஒரே வரும்படி தான். காரணம் அப்போது 80 ரூபாய் ஊதியத்தில் தங்கள் குடும்பத்தை நடத்த முடியாமல், காவல் துறை கஷ்டப்பட்டது எனக்கு நன்றாகத் தெரியும். ஒரு எதிர்க்கட்சியின் உறுப்பினர் என்ற முறையில், அதை நான் கவனிக்கத் தவறவில்லை. அது மாத்திரமல்ல, கதைகள் எழுதி, கட்டுரைகளைத் தீட்டி, கூட்டங்களிலே பேசி, காவலர்களுடைய கஷ்டங்களை நான் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். நான் காவலர்களால் கண்டிக்கப்பட்டதும் உண்டு, சிறைப் பிடிக்கப்பட்டதும் உண்டு. அது அவர்களுடைய கடமை. நான் சிறைப் பிடிக்கப்படுகின்ற அளவிற்கு – நான் நடந்து கொண்டது – என் கட்சி எனக்கிட்ட கட்டளை. இப்படி கட்சியின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக நான் சிறை செல்லவும், காவலர்களுடைய கடமையை நிறைவேற்றுவதற்காக அவர்கள் என்னைச் சிறைப் பிடிக்கவுமான ஒரு நிலைமை இருந்தாலுங்கூட, அப்போதும் அவர்கள் என்னை சிறையிலே வைத்துப் பூட்டி விட்டு, என்னிடத்திலே பேசும்போது தங்களுடைய குடும்பக் கஷ்டங்களை, தங்களுடைய சம்பளம் போதாமையை, தங்களுடைய வேதனைகளை எடுத்துச் சொல்லாமல் இருந்ததில்லை. அவைகள் எல்லாம் என்னுடைய மனதிலே ஊறி ஊறி ஊறி, நான் சட்டமன்றத்திலே இவைகளைப் பற்றிப் பேசிப் பேசி, அதற்குப் பிறகு உடனடியாக ஒரு விடிவு காலம் ஏற்படவில்லை என்றாலும்கூட, நான் 1967 ஆம் ஆண்டு அண்ணா அவர்களுடைய தலைமையிலே ஒரு அமைச்சராகப் பொறுப்பேற்று – நாம் ஒரு பேரிழப்புக்கு




ஆளாகி – அண்ணாவை இழந்து – அதன் பிறகு அந்த இடத்திலே நான் பொறுப்பேற்க வேண்டிய சூழ்நிலை உருவான பிறகு – என்னுடைய உள்ளத்திலே முதலில் பட்ட எண்ணம் நான் கண்ட காவலர்களுடைய கஷ்டங்கள் – அவர்கள் பெறுகின்ற சம்பளம் – இவைகள்தான் நான் அன்றைக்கு உணர்ந்தது, நினைத்துப் பார்த்தது.

**முதல் போலீஸ் கமிஷன்**

இதற்கு உடனடியாக ஒரு விடிவு காலத்தை உருவாக்க வேண்டுமென்று எண்ணியதின் காரணமாகத்தான் இந்தியாவிலேயே முதன் முதலாக போலீசாருடைய நிலைமைகளைத் தெரிந்து அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த, அவர்களுடைய கஷ்டங்களைப் போக்க, அவர்களுடைய தேவைகளை உணர்ந்து அதற்கேற்ப என்னென்ன வசதிகளைப் பெருக்க வேண்டுமோ, அவைகளைப் பெருக்க வேண்டுமென்பதற்காக – ஒரு போலீஸ் கமிஷனை நியமித்தது என்னுடைய தலைமையிலே இருந்த அரசு தான். முதல் போலீஸ் கமிஷனை திரு.ஆர்.ஏ.கோபாலசாமி அய்யங்கார் தலைமையிலே அமைத்து அவர் தந்த 100க்கு மேற்பட்ட பரிந்துரைகளைப் பெற்று, அவைகளை நிறைவேற்றுகின்ற வாய்ப்பையும் நான்தான் பெற்றிருந்தேன்.

80 ரூபாய் என்றிருந்த சம்பளம் முதன் முதலாக ஒரு போலீஸ்கார நண்பருக்கு 200 ரூபாய் 300 ரூபாய் என்று உயர்ந்தது என்றால் அந்தக் கமிஷனை நியமித்த பிறகு தான். அதன் பிறகு இரண்டாவது போலீஸ் கமிஷனை பி.சபாநாயகம் அவர்களின் தலைமையிலே நியமித்ததும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தான். அதிலும் 120 பரிந்துரைகள் வழங்கப்பட்டன. அந்தப் பரிந்துரைகளிலே முக்கால் பகுதியை நிறைவேற்றியதும் என்னுடைய தலைமையிலே அன்றைக்கு இருந்த தி.மு.கழக ஆட்சி தான். இந்த வகையில் அவர்களுடைய வாய்ப்புகளை, வசதிகளைப் பெருக்க நான் முனைந்ததின் அடிப்படையிலே இங்கே நாம் காணுகின்ற இந்தப் பயிற்சியகம் அமைந்திருக்கின்றது. இந்தப் பயிற்சியகத்தை உருவாக்க ஏறத்தாழ 50 கோடி ரூபாய் வரை – இந்தப் பகுதியிலே போலீஸ் பயிற்சிக்காக நாம் செலவழித்திருக்கிறோம் என்றால், அந்தப் பயிற்சி அவர்களுடைய உடல் வலிவு பெருக வேண்டும் என்பதற்காக மாத்திரமல்ல.

அவர்களுடைய தேக ஆரோக்கியம் நல்ல முறையிலே விளங்க வேண்டுமென்பதற்காக மாத்திரமல்ல. அவர்கள் பெறுகின்ற பயிற்சிகள், அவர்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காக அல்ல. அவர்கள் பெறுகின்ற பயிற்சிகள், அவர்கள் பெறுகின்ற வலிவு, அவர்கள் பெறுகின்ற பொலிவு அத்தனையும் நாட்டு மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்று அதிலே ஒரு தொடர்பு இருக்கின்ற காரணத்தினாலே தான் – 50 கோடி, 60 கோடி என்று தான் அரசு செலவழித்து இது போன்ற காரியங்களைச் செய்ய முன் வந்திருக்கின்றது. அதை உணர்ந்து நம்முடைய காவல்துறை நண்பர்கள் நிச்சயமாக நடக்கிறார்கள், நடந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது.

**உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக்கொள்கிற பயிற்சி**

போலீஸ் துறை என்றாலே இன்றைக்கு சில அரசியல் கட்சிகளால் உடனடியாக விமர்சிக்கப்படுகின்ற ஒரு துறையாக இருக்கின்றது. இது அந்த அரசியல் கட்சிகள் எடுத்த இன்றைய நிலையல்ல. வெள்ளைக் காரன் காலத்தில் நாம் அடிமையாக இருந்த போது எங்கேயோ பிறந்த வெள்ளையன், கடலுக்கு அப்பால் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் பிறந்த வெள்ளையன் – நம்மை ஆதிக்கம் செலுத்த, நம்முடைய நாட்டை, தேசத்தை அபகரித்துக் கொண்டு நம்மையெல்லாம் அடிமைகளாக்கி ஆளுகிற நேரத்தில் அவனுக்கு ஏஜெண்டுகளாக – அவனுக்கு அடிமைகளாக – அவனுக்கு எடுபிடிகளாக – அவன் இட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டியவர்களாக நம்முடைய நாட்டிலே இருக்கின்ற வாலிபர்கள், போலீஸ்காரர்களுடைய உடையில் பணியாற்ற வேண்டியிருக்கிறதே என்ற அந்த நிலை ஏற்பட்ட போது தான், நாம் பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தையும், நாம் ஆத்திரத்தோடு சொல்லுகின்ற ஒவ்வொரு சொல்லும் – அந்தப் போலீஸ்காரர் மீது வீசப்படுவதல்ல. ஆங்கிலேய

ஏகாதிபத்தியத்தின் மீது நமக்குள்ள கோபத்தை, இவர்கள் மூலமாகக் காட்டிக் கொண்ட நிகழ்ச்சி தான் அப்படி. அப்படி ஏற்பட்ட அந்த நிகழ்ச்சி வெள்ளைக்காரன் சென்ற பிறகும் விட்ட குறை, தொட்ட குறை என்பதைப் போல, அது இன்றைக்கும் நீடிக்கின்றது. அன்றைக்கு ஏற்பட்ட வெறுப்பு – வெள்ளைக்காரன் காலத்திலே நம்மை அடிமைகளாக நடத்துவதற்கு, இவர்கள் பயன்படுத்திக் கொள்ளப் பட்டார்கள், அப்படிப் பயன்படுத்திக் கொள்ளப்பட்ட காவலர்களைப் பார்த்தால், இன்றைக்கும் அந்தப் பழைய நினைவு, "ஏண்டிப் பாட்டி, மஞ்சள் குளித்தாய் என்று கேட்டால், பழைய நினைப்புடா பேராண்டி" என்று பாட்டி சொன்னதாக கிராமங்களிலே சொல்வார்களே, அதுபோல அந்தப் பழைய நினைப்பிலே இன்றைக்கும் போலீஸ்காரர் களைப் பார்த்தால் ஒரு கோபம் வருகிறது. இல்லை என்று சொல்லவில்லை.

ஆனால் அதே நிலை நீடிக்காமல் இருக்க, நாமும் பயிற்சி பெற வேண்டும். மக்களும் பயிற்சி பெற வேண்டும், போலீஸ் நண்பர்களும் அந்தப் பயிற்சியைப் பெற்றாக வேண்டும். இந்த மைதானத்திலே பெற்று வருகின்ற உடற்கூறு சம்மந்தமான பயிற்சிகள் மாத்திரமல்ல. உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்கிற உள்ளத்தை மென்மைப்படுத்திக் கொள்கிற அந்தப் பயிற்சியும் பெற்றாக வேண்டும். அந்தப் பயிற்சியைப் பெற்றால்தான் ஒரு காலத்திலே தமிழகத்திலே உங்கள் நண்பன் என்ற தலைப்பிலே போலீஸ்காரர்களைப் பற்றி எடுக்கப்பட்ட படம் அது தந்த விளக்க உண்மையாக ஆகும். அவர்களும் நம்முடைய நண்பர்கள் தான், நம்மவர்கள் தான் என்ற எண்ணம் உண்மையாக தெளிவாக வர முடியும். அதற்கு இரு சாராரும் பொது மக்களும் சரி, போலீஸ் துறை நண்பர்களும் சரி பயிற்சிப் பெற்றாக வேண்டும். அந்தப் பயிற்சியையும் இந்த மைதானத்திலே கற்பிக்கின்றவர்கள் அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். அந்தப் பயிற்சியும் பொதுமக்களை வாழ வைக்க இளைஞர்களைத் திருந்த வைக்க – அதைப் போலவே போலீஸ்காரர்களுடைய உள்ளத்திலே நல்ல எண்ணங்களை உருவாக்க அந்தப் பயிற்சியும் நிச்சயமாகப் பயன்பட்டாக வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட பயிற்சியோடு இந்த இடத்தில் ஐம்பது கோடி ரூபாய் செலவில் அரசாங்கத்தினுடைய முயற்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த அருமையான இடத்தைப் பார்க்கும்போது, எனக்கு மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது. ஏனென்றால் நம்முடைய மக்கள் இன்றையதினம் சமுதாயத்திலே அவர்களுடைய எண்ணிக்கை பெருகப் பெருக, குற்றங்களும் அவர்களை அறியாமலே பெருகி, அப்படிப் பெருகுகின்றப் காரணத்தால், அந்தக் குற்றங்களை இழைப்போர் எண்ணிக்கை பெருகி, அதன் காரணமாக ஒரு நாட்டில் தேவையற்ற தீவிரவாதம், தேவையற்ற பயங்கரவாதம் இவைகள் எல்லாம் தலையெடுக்கின்ற நிலைமைகளைப் பார்க்கிறோம்.

உலகத்தை நாம் பார்க்கிற நேரத்தில் இந்தியா எவ்வளவோ மேல். பக்கத்து நாடுகளைப் பார்க்கின்ற நேரத்தில் நம்முடைய பாரதம் எவ்வளவோ மேல் பாரதத்திற்குள்ளேயே அருகருகே இருக்கின்ற மாநிலங்களைப் பார்க்கின்ற நேரத்தில் நம்முடைய தமிழ்நாடு அவைகளையெல்லாம் விட எவ்வளவோ மடங்கு மேல். அப்படிப்பட்ட இந்த மேலான நிலையை தமிழகத்திலே இந்தச் சூழ் நிலையிலே கூட, உலகம் இன்றைக்குப் பல உபத்திரவங்களையெல்லாம் காணுகின்ற இந்தக் காலத்திலே கூட பல தீமைகளைப் பக்கத்திலே உள்ள தேசங்கள் சந்திக்கின்ற காலத்திலே கூட, தமிழகம் இன்றைக்கு அமைதிப் பூங்காவாக இருக்கிறது என்றால் அதற்கு இங்கேயுள்ள மக்களுடைய ஒத்துழைப்பும், அந்த மக்களிடத்திலே உங்கள் நண்பனாகப் பழகுகின்ற நம்முடைய அன்பிற்குரிய காவல்துறை நண்பர்களும்தான் அதற்குக் காரணம் என்பதை எண்ணும்போது – நான் ஏதோ காவல் துறையைப் புகழ்ந்து விட்டேன் என்று சாதாரண மக்களும் எண்ணிக் கொள்ளக்கூடாது.

காவல் துறை புகழப்பட வேண்டிய ஒன்றா அல்லவா என்பதற்குப் பட்டிமன்றம் தேவையில்லை. நாம் ஒவ்வொரு முறையும், ஒரு வீட்டிலே களவு போய் விட்டால், பத்திரிகைகளிலே செய்தி வருகின்ற நேரத்தில் களவு போனதற்காகக் கண்டிக்கிறோம், கவலைப்படுகிறோம், போலீஸ் என்ன செய்கிறது என்று ஆத்திரப்படுகிறோம். ஆனால் நம்முடைய சுபாவம் மறுநாள் அந்தக் களவாடிய திருடர்கள் பிடிபட்டார்கள், ஐந்து பேர் கைது, ஆறு பேர் கைது, அவர்கள் எல்லாம் சிறையிலே அடைக்கப்பட்டார்கள் என்று செய்தி வரும்போது, நாம் அதைப் பார்த்து பரவாயில்லை போலீஸ் என்று என்றைக்கும் சொன்னது கிடையாது.

**நாட்டு நன்மைக்காகப் பயன்படவேண்டும்**

ஏனென்றால் சத்தியம் செய்து கொண்டிருக்கிறோம், போலீசைப் பாராட்டுவதே இல்லை என்று சிலர் சத்தியம் செய்து கொண்டிருக்கிறோம். அந்தச் சத்தியத்தை நாம் மீட்டுக் கொண்டு, கொஞ்சம் அவர்களையும் பாராட்டுவோம், போனால் போகிறது என்று நல்லது செய்பவர்களைப் பாராட்ட வேண்டும், அல்லது செய்பவர்களைக் கண்டிக்க வேண்டும். இந்த இரண்டும் நியாயப்பூர்வமாக நம்முடைய உள்ளத்திலே இருந்தால் தான் – நாம் கடைப்பிடித்தால் தான் நம்முடைய நாட்டில் குற்றங்கள் மேலும் மேலும் உற்சாகத்தோடு கண்டுபிடிக்கப்படும்.

ஒரு போலீஸ் இருக்கின்ற காரணத்தாலேயே அந்த ஊரிலே தவறே நடக்காது என்று எண்ணிக் கொள்ள முடியாது எங்கும் தவறு நடைபெறும். அவ்வளவு பெரிய பாரதத்திலே தர்மரைப் போன்ற மன்னர்களே இல்லை என்றார்களே, தர்மர் வாழ்ந்த காலத்திலே தவறு நடக்கவில்லையா ? ஏன் ராமன் வாழ்ந்த காலத்திலே தவறு




நடக்கவில்லையா? ராமபிரான் ஜீவகாருண்ய சீலர், காருண்ய வள்ளல் என்றெல்லாம் கம்பர் வர்ணித்தாரே, அவர் காலத்திலே இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெற வில்லையா? நடந்திருக்கிறது. எப்போதும் நடந்திருக்கிறது. ஆனால் ராமன் இருந்த காலத்திலே தான் ராவணனும் இருந்தான் என்று ராமாயணம் சொல்லுகிறது. இப்போது மாத்திரம் பெண்கள் கடத்தப்படவில்லை, அன்றைக்கே அவ்வளவு பெரிய சீதையே கடத்தப்பட்டாள் என்று நாம் படிக்கவில்லையா, அதற்காக அன்றைக்கு இருந்த காவல் துறையை யாரும் கிண்டல் செய்யவில்லை, கேலி செய்யவில்லை, கண்டிக்கவில்லை. அதைப்போல இன்றைக்கு அவரவர்கள் கடமையை அவர்கள் செய்ய நாம் குறுக்கே நிற்காமல், அவர்களுக்கு நாம் துணையாக இருந்து அவர்களுக்கு தொல்லை கொடுக்காமல் அவர்களோடு சேர்ந்து, நம்முடைய தோழமையை வளர்த்துக் கொண்டு, அந்தத் தோழமை நம்முடைய நன்மைக்காகப் பயன்படட்டும் என்று இல்லாமல், மக்கள் நன்மைக்காக சமுதாய நன்மைக்காக, நாட்டு நன்மைக்காகப் பயன்பட வேண்டும் என்கின்ற அந்தப் பயிற்சியைப் பெற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உயர் பயிற்சி அது தான். இங்கே நீங்கள் எடுத்துக் கொள்ளப்போகின்ற பயிற்சி, உடற்பயிற்சி என்றாலுங்கூட அல்லது உங்கள் ஆசிரியர்கள் சொல்லித் தருகின்ற அறிவுப் பயிற்சி என்றாலும்கூட, அதையெல்லாம் விட நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய பயிற்சி எப்படி மக்களிடத்திலே நாம் பழக வேண்டும் என்கிற அந்தப் பண்பாட்டுப் பயிற்சி – அந்தப் பயிற்சியைத் தான் நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த இடத்திற்கு – இந்தக் கட்டடத்திற்கு என்ன பெயர் வைக்கலாம் என்ற நம்முடைய காவல் துறை தலைவர் திரு.ராஜேந்திரன், ஐ.பி.எஸ் அவர்கள் என்னிடத்திலே கேட்ட போது, நான் இந்தப் பெயரை சொன்னதற்குக் காரணமே, உயர் பயிற்சி என்பது அது உடல் பயிற்சியை விட உயர்வானது, அந்த உயர் பயிற்சி தான் பண்பாட்டுப் பயிற்சி என்று மனதிலே எண்ணிக் கொண்டு உயர்பயிற்சியகம் என்று பெயரை வையுங்கள் என்று நான் அவரிடம் சொன்னேன்.

இந்த விழாவில் நம்முடைய நண்பர் மூர்த்தி அவர்கள் பேசும்போது நான் சேர, சோழ, பாண்டியர்களைப் போல – அக்பரைப் போல, பாபரைப் போல ஆட்சியை நடத்துவதாக நம்முடைய ஆட்சியைப் பற்றிப் பாராட்டிச் சொன்னார்கள். அந்தப் பரந்த உள்ளத்திற்கு உண்மையிலேயே அவருக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அக்பர், பாபர், அதைப் போல சேரர், சோழர் – இவர்களுடைய வழி தான் நமக்கு வழிகாட்டிய வழிகள். அவர்களை மிஞ்சி நான் ஒன்றும் செய்து விடவில்லை ஏதோ செய்கிறோம் என்றால் அவர்கள் செய்ததைப் பார்த்து நாம் செய்கிறோம். ஆகவே நம்முடைய மூதாதையர்கள் எப்படி இந்த மக்களைப் பரிபாலித்தார்களோ, எப்படி இந்த நாட்டை ஆண்டார்களோ, அதைப் போல ஒற்றுமையாக மக்கள் இருக்கிறோம். நல்ல சமுதாயத்தை நாம் காணவும் எதிர்காலத்திலே அப்படிப்பட்ட நல்ல எண்ணங்களை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு காவல் துறை நண்பர்கள் பெறுகின்ற பயிற்சி மக்களுக்குப் பயன்படட்டும், எதிர்கால சமுதாயத்திற்குப் பயன்படட்டும் நம்முடைய வழித் தோன்றல்களுக்குப் பயன்படட்டும் என்று கூறி வாழ்த்துகளை வழங்கி விடைபெறுகிறேன்.

❖ ❖ ❖



# மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மழைச் சேத விவர அறிக்கையை பேரவையில் தாக்கல் செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பல்வேறு நிவாரண உதவிகளை அறிவித்தார்.

சட்டப்பேரவையில் 26.03.2008 அன்று சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே, மழைச் சேதம் குறித்த சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானமாக 28 பேர் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைக்க வேண்டுமென்று தங்களிடத்திலே கோரிக்கை வைத்திருந்தாலும் நேரத்தின் அருமை கருதி கட்சிக்கு ஒருவர் என்ற அடிப்படையில் எட்டு பேர் – உறுப்பினர்கள் திரு.செல்வப் பெருந்தகை, திரு.மு.கண்ணப்பன், திரு.விஜய காந்த், திரு.இராஜசேகரன், திரு.சி.கோவிந்தசாமி, திரு.கோ.க.மணி, திரு.வேல்துரை, திரு.ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் இங்கு உரையாற்றி தங்களுடைய கருத்துக் களை, அரசுக்கு பல அறிவுரைகளை, ஆலோசனைகளை, அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கக்கூடிய பணிகளுக்கு மேலும் வலு சேர்க்கின்ற வகையில் பல கருத்துக்களை யெல்லாம் இங்கே உறுப்பினர்கள் வைத்திருக்கிறார்கள்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கின்ற சில குறைபாடுகளைக் கூட உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். எனவே, இந்தக் குறைபாடுகளை முறையாகக் களைவதற்கான முயற்சிகளில் இந்த அரசு நிச்சயமாக ஈடுபடும் என நான் துவக்கத்திலேயே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இங்கு உறுப்பினர்கள் எடுத்து வைத்திருக்கக் கூடிய அந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் அரசின் சார்பில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரையோடு, ஆலோசனையோடு, ஒப்புதலோடு இந்த அறிக்கையை இந்த அவையிலே நான் தாக்கல் செய்ய விரும்புகிறேன்.

தமிழகத்தில் கடந்த **10.3.2008** முதல் தொடர்ந்து பரவலாக மழைபெய்து வருகிறது. அதிலும் குறிப்பாக தென்மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பலத்த மழை பெய்துள்ளது. தமிழகத்தில் மார்ச் முதல் மே மாதம் வரை கோடைக்காலம் ஆகும். இக்காலத்தில் பொதுவாக மழை அதிகம் பெய்வதில்லை. தமிழகத்திற்கு மார்ச் மாதத்தில் சராசரியாகப் பெய்ய வேண்டிய மழை அளவு **19.9 மி.மீ ஆகும். இந்த ஆண்டு 10.3.2008 முதல் 23.3.2008** வரை **158.03 மி.மீ மழை பெய்துள்ளது. இது சராசரி மழை அளவைக் காட்டிலும் 8 மடங்கு அதிகம்.**

திருநெல்வேலி மாவட்டத்தில் 358.00 மி.மீ; இராமநாதபுரம் மாவட்டத்தில் 315.39 மி.மீ; நாகப்பட்டினம் மாவட்டத்தில் 295.23 மி.மீ; தூத்துக்குடி மாவட்டத்தில் 253.86 மி.மீ; விருதுநகர் மாவட்டத்தில் 250.11 மி.மீ; சிவகங்கை மாவட்டத்தில் 246.51 மி.மீ;கன்னியாகுமரி மாவட்டத்தில் 244.45 மி.மீ; நீலகிரி மாவட்டத்தில் 225.55 மி.மீ;தேனி மாவட்டத்தில் 223.45 மி.மீ; கடலூர் மாவட்டத்தில் 220.90 மி.மீ மழை பெய்துள்ளது.

ஏனைய மாவட்டங்களில் கணிசமான மழை பெய்துள்ளது. இதில் அதிகபட்சமாக கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோயிலில், 12.3.2008 அன்று காலை பதிவான மழையின் அளவு 236.00 மி.மீ; நாகப்பட்டினம் மாவட்டம் ஆனைக்காரன் சத்திரத்தில் 13.3.2008 அன்று காலை பதிவான மழை அளவு 226.00 மி.மீ; இராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ். மங்கலத்தில் 21.3.2008 அன்று காலை பதிவான மழை அளவு 210.00 மி.மீ ஆகும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகளின்படி; இம்மழையின் காரணமாக மாநிலம் முழுவதும்;

3,097 வருவாய் கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

77 வருவாய் கிராமங்கள் தண்ணீரால் சூழப்பட்டன.

இம்மழையால் பாதிக்கப்பட்ட 10,278 பேர் 41 மையங்களில் தங்க வைக்கப்பட்டு 38,038 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

24.3.2008 வரை மொத்தம் 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த கால்நடைகளின் எண்ணிக்கை 804 ஆகும்.

மாவட்டங்களில் மொத்தம் 5,782 குடிசைகள் மழையால் சேதமடைந்துள்ளன. இவற்றில் 2,106 குடிசைகள் முழுமையாகவும் 3,676 குடிசைகள் பகுதியாகவும் சேத மடைந்துள்ளன.

பல்வேறு மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து இதுவரை வந்துள்ள தகவல்படி, மாநிலம் முழுவதும் முதற்கட்ட மதிப்பீட்டின்படி 47,257 எக்டேர் நிலப்பரப்பில் நெற்பயிர்களும், 2,79,143 எக்டேர் நிலப்பரப்பில் தானியம் மற்றும் பருப்பு வகை பயிர்களும், 62,882 எக்டேர் நிலப்பரப்பில் தோட்டக்கலை பயிர்களும், 41,068 எக்டேர் நிலப்பரப்பில் இதர பயிர்களும் ஆக மொத்தம் 4,30,350 எக்டேர் அதாவது 10,62,965 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் 9,863 கி.மீ நீளத்திற்கு சாலைகளும், 945 சிறுபாலங்கள் மற்றும் பாலங்களும், 747 குளங்கள் மற்றும் வாய்க்கால்களும் இம்மழையால் சேதமடைந்துள்ளன.

20ஆம் தேதி நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, மீண்டும் 24ஆம் தேதி இந்த அவை கூடும் என்ற அறிவிப்போடு தான் பேரவை நிகழ்ச்சிகள் முடிவுற்றன. ஆனால் தமிழகத்தில் பல பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து கொண்டே உள்ளது என்ற செய்தி வந்ததை அடுத்து, 21ஆம் தேதி காலையிலேயே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலாளரையும், மூத்த அதிகாரிகளையும் அழைத்து உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர்களையெல்லாம் தொடர்பு கொண்டு வெள்ள நிவாரணப் பணிகளிலே விரைந்து ஈடுபட வேண்டுமென்று அறிவுறுத்துமாறு கூறினார்கள். மறுநாள் 22ஆம் தேதி காலையில் முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து தலைநகரிலே உள்ள அமைச்சர்களுக்கும், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கும் தலைமைச் செயலகத்திற்கு உடனடியாக வருமாறு அழைப்பு. 10.30 மணி கூட்டத்திற்கு நான் 10 மணிக்கு வந்தேன். ஆனால் வாசலிலேயே முதலமைச்சர் 9.30 மணிக்கெல்லாம் வந்துவிட்டார் என்று சொல்லப்பட்டது. போர்க்கால நடவடிக்கை என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவ்வாறு தான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கூட்டம் முடிந்தவுடன் மின் துறை அமைச்சரையும், என்னையும், பொதுப்பணித் துறை அமைச்சரையும் ஒவ்வொரு பகுதிக்கும் விரைந்திடுமாறு முதல்வர் கூறினார். 23ஆம் தேதி காலையில் பொருளாளர் இல்லத்தில் திருமணம் என்றோம். பரவாயில்லை, நாங்கள் பார்த்துக் கொள்கிறோம், நீ புறப்படு என்று என்னை 22ஆம் தேதியன்றே தென் மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்தார்கள். பொருளாளர் இல்லத் திருமண விழா முடிந்தது தான் தாமதம், மதிய உணவுகூட அருந்தவில்லை. விருந்தினர்களை சாப்பிட்டு விட்டுச் செல்லுமாறு ஒலிபெருக்கியில் கூறி விட்டு மின் துறை அமைச்சரும், பொதுப்பணித் துறை அமைச்சரும் கார் மூலமாக வெவ்வேறு வெள்ளப் பகுதிகளுக்கு உடனடியாக விரைந்தனர்.

22.3.2008 அன்று சென்னையிலிருந்து புறப்பட்டு விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் வெள்ளப் பகுதிகளைப் பார்த்து விட்டு 26.3.2008 அன்று மாலை தான் அமைச்சரவை கூட்டத்திலே கலந்து கொள்வதற்காக திரும்பினேன்.

இந்த அளவிற்கு பணியாற்றுகிறோம். பாதிக்கப்பட்ட மக்கள் இந்த அரசிடம் நிரம்ப எதிர்பார்க்கிறார்கள்.

அவர்களின் துயரத்தில் இந்த அரசு நிச்சயமாகப் பங்கு கொள்ளும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார்கள். முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 22.3.2008, 24.3.2008 மற்றும் 25.3.2008 ஆகிய நாட்களில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் நடத்திய ஆய்வுக் கூட்டத்தில், இம்மழை மற்றும் அதன் பாதிப்புகள் குறித்த விவரங்களை அறிந்து மழையினால் ஏற்பட்ட சேதங்களுக்கு உடனடி நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுரை வழங்கி நிவாரணப் பணிகளுக்காக ரூ.100 கோடி வழங்கி உத்தரவிட்டுள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அனைத்து அரசு அலுவலர்களும், இம்மழையால் ஏற்பட்டுள்ள பாதிப்பினை சரி செய்ய முனைப்புடன் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

முதலமைச்சர் கலைஞர் அவர்களின் உத்தரவின்படி, இம்மழையின் காரணமாக உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு தலா ரூ.1இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

முழுமையாக மற்றும் பகுதியாக சேதமடைந்த குடிசைகளுக்கு, குடிசை ஒன்றுக்கு ரொக்கமாக ரூ.2,000 வீதம் நிவாரணமும், 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், 1 வேட்டி மற்றும் 1 புடவை ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. இவை தவிர, குடிசைகள் முழுமையாக பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ.1,000 பாத்திரங்களுக்காகவும், மேலும் ரூ.1,000 உடைகளுக்காகவும் ஆக இரண்டாயிரம் ரூபாய் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

பேரிடர் நிவாரண நிதியின் கீழ் (Calamity Relief Fund) மைய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி பாசன வசதி கொண்ட நிலங்களில் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஒரு எக்டேருக்கு ரூ.4,000 வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகை போதாது என்ற குறையை நான் சென்ற இடங்களில் எல்லாம் விவசாயிகள் என்னிடம் எடுத்துக் கூறினார்கள். மத்திய அரசு நிர்ணயித்த தொகை எக்டேருக்கு ரூ. 4,000 தான் என்றிருந்தபோதிலும், விவசாயிகளின் துயரத்தில் பங்குகொள்ளும் இந்த அரசு இப்போதும், இப்பெருமழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ.7,500 அதாவது ஏக்கர் ஒன்றுக்கு ரூ.3,000 வழங்க முடிவெடுத்துள்ளது. இதற்கான கூடுதல் செலவினத்தை மாநில அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.


இந்த உதவி வழங்குவதிலே கூட, தற்போதுள்ள அரசாணைப்படி அதிகபட்சமாக இரண்டு எக்டேர் என்ற அளவிற்குத் தான் நிவாரண உதவி வழங்கப்படும் என்ற விதியை மாற்றி, பாதிக்கப்பட்ட நிலம் எத்தனை எக்டேராக இருந்தாலும், அத்தனை எக்டேர் நிலத்திற்கும் நெற்பயிர் பாதிப்புக்கு எக்டேர் ஒன்றுக்கு 7,500 ரூபாய் வீதம் நிவாரண உதவி அளித்திடவும் முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

நெற்பயிர் தவிர மற்ற பயிர்களைப் பொறுத்தவரை, மழையை நம்பியிருக்கும் பகுதிகளில் வேளாண்மைப் பயிர்கள் மற்றும் தோட்டப் பயிர்களின் இழப்பு 50 சதவிகிதத்திற்கு மேல் இருக்குமேயானால், எக்டேர் ஒன்றுக்கு 2,000 ரூபாய் வீதம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

பாசன வசதி உள்ள பகுதிகளில் நெல் தவிர மற்ற பயிர்கள் பாதிக்கப்பட்டிருந்தால், எக்டேர் ஒன்றுக்கு 4,000 ரூபாய் வீதம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

அதைப் போலவே perennial crops என்று கூறப்படும் மா, புளி போன்ற நிரந்தர பயிர்கள் பாதிக்கப்பட்டால் எக்டேர் ஒன்றுக்கு 6,000 ரூபாய் வீதம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

மேலும் தற்போது நடைமுறையில் உள்ள மத்திய அரசு நெறிமுறைகளின்படி உயிரிழந்த கால்நடைகளுக்காக பசு, காளை மற்றும் எருமை மாடுகளுக்கு தலா ரூ.10,000 மும், கன்றுக்கு தலா ரூ.5,000மும், ஆடு மற்றும் செம்மறி ஆடுகளுக்கு தலா ரூ.1,000மும் நிவாரணம் வழங்கப் படுகிறது. இதில் அதிகபட்சமாக குடும்பம் ஒன்றுக்கு ஒரு கறவை மாடு அல்லது நான்கு சிறிய கறவை இனங்களுக்கு அல்லது பாரம் சுமக்கும் விலங்குகளில் (Draught Animal) ஒரு பெரிய இனம் அல்லது இரண்டு சிறிய இனங்களுக்கு நிவாரணம் தற்போது வழங்கப்படுகிறது. இத்தனை ஆண்டு காலமாக இதுபோன்ற வெள்ளப் பாதிப்புகளின் போது இந்த முறையைப் பின்பற்றித் தான் உதவி நிதி வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது தமிழக அரசு எண்ணிக்கை வரம்பினை அறவே நீக்கி, இறந்து போன அனைத்து பசு, காளை மற்றும் எருமை இனங்களுக்கு தலா ரூ.10,000 மும், இறந்து போன அனைத்து கன்றுகளுக்கும் தலா ரூ.5,000மும், இறந்து போன அனைத்து ஆடு மற்றும் செம்மறி ஆடுகளுக்கு தலா ரூ.1,000மும் வழங்க முடிவெடுத்துள்ளது. இதனால் ஏற்படும் கூடுதல் செலவினங்களை தமிழக அரசு தன் நிதியிலிருந்து ஏற்றுக்கொள்ளும் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். ★







# உங்களுடைய வெற்றி;
# நீங்கள் கண்ட வெற்றி - நீங்கள் கண்ட பயன்

சென்னையில் வடக்கு உஸ்மான் சாலை - மகாலிங்கபுரம் சாலையை இணைத்து புதிதாகக் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தை 30.3.2008 அன்று திறந்து வைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை

இரண்டு பெயர்கள் கொண்ட சாலைகள் – இந்தப் பகுதியை இணைக்கின்ற பாலம் கட்டப்பட்டு அதனுடைய திறப்பு விழா நிகழ்ச்சியை இன்று நாம் நடத்திக் கொண்டிருக்கின்றோம். இது பாலங்களின் இணைப்பு மாத்திரமல்ல – உஸ்மான் சாலை, மகாலிங்கபுரம் சாலை



என்ற பெயர்களால் இரண்டு சமயங்களின் இணைப்பாகவும் இன்றைக்கு விளங்குகின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த இணைப்பு தான் நாட்டிலே வரவேண்டுமென்று முற்போக்கு எண்ணம் கொண்ட கட்சிகள் அனைத்தும் விரும்புகின்றன. அந்த எண்ணம் படைத்த பெரியவர்கள், இளைஞர்கள் அனைவரும் விழைகின்றார்கள் – அந்தச் சமயங்கள் பாலங்களால் இணைக்கப்பட வேண்டுமென்று. அந்தப் பாலங்கள் தான் ''மேம்பாலம்'' எனப்படும். அப்படிப்பட்ட பாலங்கள் அமையாவிட்டால், அது மேம்பாலம் அல்ல – மேம்பாலம் என்பது மேலான பாலம், மேன்மையான பாலம், மேம்படுதல் என்றால் மேன்மை அடைதல் என்று பொருள். எப்பொழுது பாலங்களுக்கு மேன்மை கிடைக்கின்றது, சிறப்புக் கிடைக்கின்றது, பெருமை கிடைக்கின்றது? ஒன்றுபட முடியாத இரு சக்திகளை ஒன்றுபடுத்தி, பாலமாக அமைத்தால் அதுதான் மேம்பாலம். அந்த மேம்பாலம் தமிழகத்திலே மாத்திரமல்ல, இந்தியத் திருநாடு முழுவதும் அமைந்திட வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தை இந்தப் பாலம் திறப்பு விழாவிலே தெரிவித்துக் கொண்டு என்னைப் போல் நீங்களும் அந்த விருப்பத்தைப் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

### ஆற்றுகின்ற பணியின் ஒரு துளி

நம்முடைய அமைச்சர் தம்பி ஸ்டாலின் அவர்கள் மாநகராட்சியின் வாயிலாகப் புரிந்துள்ள சாதனைகளையெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார். தம்பி டி.ஆர். பாலு அவர்கள் இந்தியத் திருநாட்டில் அமைத்து வருகின்ற சாலைகளைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார், தொடுத்துச் சொன்னார். இவைகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகிய நாம் ஆற்றிய பணிகள், ஆற்ற வேண்டிய பணிகள், ஆற்றிக் கொண்டிருக்கின்ற பணிகள் – எதிர்காலத்திலே ஆற்றப் போகின்ற பணிகள் – அத்தகைய பணிகளுக்கு நம்மை இன்றைக்கு அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம் என்றால், அது நமக்குச் சார்புடைய பணி அல்ல, மக்களுடைய பணி, மக்களுக்காக நாம் ஆற்றுகின்ற பணி. இங்கே கட்டப்படுகின்ற பாலம் யாருக்காக ? நாம் மாத்திரமே நடந்து செல்வதற்காகவா ? அல்லது வாகனங்களிலே ஏறிச்செல்வதற்காகவா ? அல்ல: நம்மை எந்த மக்கள் தேர்ந்தெடுத்து பொறுப்புக்கு அனுப்பினார்களோ, அந்த மக்களுக்காக அவர்கள் எளிதாகப் பயணம் செய்ய – அவர்களுடைய பயணங்கள் கடுமையானதாக இல்லாமல் இருக்க – நாம் ஆற்றுகின்ற பணியின் ஒரு துளி தான் இங்கே கட்டப்பட்டு, இன்று திறக்கப்பட்டுள்ள இந்த மேம்பாலம் என்று சொன்னால் அது மிகையாகாது.

மேயர் அவர்களும், முன்னாள் மேயராகவும், இந்நாள் தமிழக அமைச்சர்களில் ஒருவராகவும் விளங்குகின்ற தம்பி ஸ்டாலின், தான் மேயராக இருந்த காலத்திலே உருவாக்கிய ஒன்பது பாலங்கள் – அந்தப் பாலங்கள் கட்டுவதற்காகப் போடப்பட்ட மதிப்பீடு – கட்டி முடிக்கப்பட்ட பிறகு பார்த்த கணக்கில் மிச்சப்பட்ட பணம் – ஏறத்தாழ முப்பது கோடி ரூபாய் (அதைக் கூட 30 இலட்சம் என்று வாய் தவறி ஆர்வத்தின் காரணமாகச் சொன்னார்) – நான் சரியாகக் கணக்கு வைத்திருக்கிறேன். அப்படி வீணாகப் பணத்தைச் செலவழிக்காமல், சிக்கனமாகச் செலவழித்து – செலவழிக்கப்படுகின்ற பணம் நல்ல காரியத்திற்கு நல்ல நிலையோடு ஒழுங்கான கணக்கோடு செலவழிக்கப்பட்டு, அப்படி உருவான பாலங்கள் தான் பத்து என்று திட்டமிட்டு முடிவுற்ற ஒன்பது பாலங்கள். அந்த 9 பாலங்களைக் கட்டியதின் விளைவு என்ன என்பதை தம்பி ஸ்டாலின் இங்கே கோடிட்டுக் காட்டினார். கோடிட்டுத் தான் காட்ட முடியும். அந்தப் பாலங்கள் கட்டியதால் என் மீது விழுந்த இரத்தக் கோடுகள் எத்தனை என்பதை உங்களில் பலர் கேள்விப்பட்டிருப்பீர்கள், பார்த்திருக்கமாட்டீர்கள். அத்தகைய இரத்தக் கோடுகளை நானும், தம்பி பாலுவும், தம்பி ஸ்டாலினும், தம்பி மாறனும் அந்த நாளில் ஏற்றுக் கொண்டு, பரவாயில்லை, மக்கள் நேரடியாகத் தர வேண்டிய பரிசை மக்களுக்காக ஆட்சி நடத்துகிறோம் என்று சொல்கிற சிலர் தந்திருக்கிறார்கள் என்று நன்றி தெரிவித்தோமே தவிர, இன்றைக்கும் நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு அவர்களைப் பழிவாங்க வேண்டுமென்ற எண்ணம் இல்லாமல், அவர்களுக்குப் பரிசளித்துக் கொண்டிருக்கிறோமே அல்லாமல், இது தான் அண்ணா வழி என்பதை சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறோமே அல்லாமல் வேறல்ல.

### அதிகம் பயன்தரக்கூடிய பாலம்

தி.மு. கழக அரசு கடந்த இரண்டாண்டு காலத்திற்கு மேலாக – இப்போது ஐந்தாவது முறையாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த இரண்டாண்டு காலத்திலே ஆற்றியிருக்கின்ற பணிகள் – அளித்த வாக்குறுதிகள் – அவைகள் நிறைவேற்றப்பட்ட பாங்கு, இதையெல்லாம் நான் சொல்லாமலே நீங்கள் அறிவீர்கள். என்னென்ன பணிகளை ஆற்றுவோம் என்று சொல்லி தேர்தல் அறிக்கையை வெளியிட்ட போது, இந்தியாவினுடைய பொருளாதார மேதை என்று சொல்லப்படுகிறவர்களில் ஒருவரான நண்பர் ப. சிதம்பரம் அவர்கள் இது தான் இந்தத் தேர்தலுக்குக் கதாநாயகன் – தி.மு.க. தேர்தல் அறிக்கை – என்று அன்றைக்குச் சொன்னார். இப்போது இரண்டாண்டுகளில், அந்தத் தேர்தல் அறிக்கையிலே என்னென்ன அறிவித்தோமோ, அவைகளையெல்லாம் வாய்மையோடு நிறைவேற்றி மக்கள் புன்னகையோடு அவைகளை வரவேற்று – நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில் – அதே சிதம்பரம் அவர்கள் டெல்லியிலே, ஏன் அவருடைய சொந்த ஊரான காரைக்குடியிலே ஒரு விழாவிலே பேசும்போது, தமிழ்நாட்டு வரவு செலவுத் திட்டம், மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டக் கூடிய திட்டம் என்று சொன்னார். ஏதோ அன்றைக்கு தேர்தலுக்காக இது தான் கதாநாயகன் என்று சொன்னார் என்று யாரும் கருதக்கூடாது, தேர்தல் முடிந்து இரண்டாண்டிற்குப் பிறகு கூட, அவைகளையெல்லாம் நிறைவேற்றி வருகின்ற ஆட்சி, தி.மு. கழக ஆட்சி என்பதை நெஞ்சு நிமிர்ந்து பெருமையோடு சொல்லிக் கொண்டிருக்கிறார் என்றால், இது தனிப்பட்ட ஒரு கருணாநிதியினுடைய – தனிப்பட்ட ஒரு தி.மு.க. உறுப்பினருடைய திறமை அல்ல. உங்களுடைய எதிர்பார்ப்பு, உங்களுடைய வலிமை, உங்களுடைய நம்பிக்கை – இவைகளுக்குக் கிடைத்த வெற்றிதான் இது என்று சொன்னால் – இதைச் சுருக்கமாக அப்படியே சொல்ல வேண்டுமேயானால்

"உங்களுடைய வெற்றி'' – நீங்கள் கண்ட வெற்றி – நீங்கள் கண்ட பயன் இது என்று சொன்னால் அதை யாரும் மறுத்திட இயலாது. அந்த வெற்றிகளிலே ஒன்றாகத் தான் இங்கே இன்றைக்கு இந்தப் பாலத்தைத் திறந்து வைத்திருக்கிறோம். இது ஒன்றும் நான் ஏற்கெனவே கட்டிய முசிறி – குளித்தலை பாலத்தைப் போல அவ்வளவு நீண்ட நெடிய பாலம் அல்ல. திருமானூரிலே காவேரியிலே கட்டிய பாலத்தைப் போல அவ்வளவு பெரிய பாலம் அல்ல. ஆனால் அதை விட அதிகம் பயன் தரக் கூடிய பாலமாக இந்தப் பாலம் அமைந்திருக்கிறது.

என்னுடைய வாழ்க்கையிலேயே ஒரு அனுபவம் உண்டு – இந்தப் பாலத்தைப் பார்க்கும்போது அது நினைவுக்கு வருகிறது. ஸ்டாலின் குழந்தையாக இருந்த போது, நாங்கள் இங்கே ஜக்கரியா காலனி என்ற பகுதியிலே என்னுடைய குடும்பத்தோடு குடியிருந்தோம். அப்போது ஒரு நாள் ஸ்டாலினுக்குப் பசியோ என்னவோ தெரியவில்லை – ஊக்கை எடுத்து விழுங்கி விட்டான். வயிற்றுக்குள் சென்ற ஊக்கு தலைகீழாகச் செல்லாமல் நேரடியாகச் சென்று எந்த இடத்திலே அது குத்தி நிற்குமோ என்ற அச்சத்தை எங்களுக்கெல்லாம் ஏற்படுத்தி, உடனடியாக டாக்டருக்கு போன் செய்து, உடனே குழந்தையைத் தூக்கிக் கொண்டு வாருங்கள் என்றார்கள். நாங்கள் இந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு டாக்டர் வீட்டிற்குப் புறப்பட்டோம். அப்போது இங்கே பல பேருக்குத் தெரியாது. நானும் கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களும், மற்றவர்களும் இந்தவழியாக ஏ.வி.எம். ஸ்டுடியோவிற்கு வரும்போதெல்லாம் எங்களைத் தடுத்து நிறுத்துகின்ற ஒரு ரயில்வே கேட் உண்டு. அந்தக் கேட்டைத் தாண்டித் தான் கோடம்பாக்கம் செல்ல வேண்டும். அந்தக் கேட் பூட்டப்பட்டு விட்டால் மீண்டும் அரை மணி நேரம் ஆகும் திறப்பதற்கு. அது வரையில் அந்தப் பக்கம் வந்தவர்கள் அப்படியே அங்கே நிற்க வேண்டும் – இந்தப் பக்கம் வந்தவர்களும் இங்கேயே நிற்க வேண்டும். நாங்கள் ஸ்டாலினைத் தூக்கிக் கொண்டு – வயிற்றிலே உள்ள ஊக்கை எடுப்பதற்காக அறுவை சிகிச்சை செய்து எடுப்பதா அல்லது மருந்து கொடுத்து எடுப்பதா, எப்படி எடுப்பது என்ற கிலேசத்தோடு வந்து கொண்டிருக்கும்போது, தொண்டை வரையிலே சென்ற ஊக்கு, இங்கே ரயில்வே கேட் மூடிக் கிடந்த காரணத்தால், நாங்கள் உடனடியாக இந்த ரயில்வே லைனைத் தாண்ட முடியாமல் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்ட காரணத்தால், தொண்டையிலே இருந்த ஊக்கு வயிற்றுக்குள்ளேயே போய் விட்டது.

என்ன செய்வதென்று தெரியாமல், வீட்டார் விழித்தோம். மிகுந்த வேதனைக்காளானோம். அதற்குப் பிறகு கேட் திறந்தது. இந்த அரை மணி நேர தாமதத்தால் தொண்டையிலிருந்து சுலபமாக வெளியே எடுக்கப்பட வேண்டிய ஊக்கு வயிற்றுக்குள்ளும் போய் விட்டது. ஆனால் வருகிற ஆபத்துக்கள் எனக்கானாலும் அல்லது தி.மு.க. விலே உள்ள எந்தத் தோழருக்கானாலும், ஸ்டாலினைப் போன்ற தி.மு.கழகத்தின் தொண்டனுக்கு ஆளானாலும் யாருக்கு ஆபத்து என்றாலும் சுபலமாகப் போய் விடும் என்பதற்கு அடையாளமாக மறுநாள் சாப்பிட்ட வாழைப் பழத்தோடு, ஊக்கும் வெளிவந்து விட்டது. அதனால் ஸ்டாலினும் தப்பித்துக் கொண்டான். வாழைப்பழ வைத்தியத்திலேயே அவன் வாழ பழம் என்ற அந்தப் பெயரை, அந்தப் பழம் பெற்றது.

இதைச் சொல்வதற்குக் காரணம் – அவ்வளவு நெருக்கடியான இடம் – போக்குவரத்து நெரிசல் – போக்குவரத்துத் தடை – இடையூறு. அந்த இடையூறைக் கடந்து செல்ல முடியாமல் மக்கள் அங்குமிங்கும் தவித்த காலக் கட்டம். அப்படி இருந்த நிலை மாறி இன்று ஜக்கரியா காலனி ஆனாலும் சரி, தியாகராயநகர் ஆனாலும் சரி, உஸ்மான் சாலை ஆனாலும் சரி, மகாலிங்கபுரம் சாலை ஆனாலும் சரி எல்லாம் ஒன்றையொன்று கலக்கின்ற வகையிலே – ஒன்றையொன்று சந்திக்கின்ற வகையிலே இன்றைக்கு இப்படிப்பட்ட ஒரு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதென்றால் நாம் கடந்த காலத்தை எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறதல்லவா?

**நமக்குள்ள கடமை**

என்ன செய்வது? என்னுடைய பழக்கம், கடந்த காலத்தை எண்ணிப் பார்ப்பது. பல பேர் கடந்த காலத்தை எண்ணிப் பார்ப்பதில்லை. எண்ணிப் பார்க்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு வருவதில்லை. அவர்கள் என்ன ஜக்கரியா காலனியிலா தங்க வேண்டியிருந்தது? நான் அல்லவா ஜக்கரியா காலனியிலே தங்கியிருந்தேன். எனவே அந்தக் காலத்திலே இருந்த கஷ்டங்கள் இன்றைக்கு நீங்கின என்றால், அதற்குக் காரணம் எது சொன்னாலும் அந்தக் காரணங்களிலே ஒன்றாக இந்தப் பாலமும் விளங்குகிறது என்பதை யாரும் மறுத்திட முடியாது. அத்தகைய ஒரு பாலத்தை இங்கே உருவாக்கியிருக்கின்ற மாநகராட்சி மன்றத்தையும், மேயரையும், அதற்கு உறுதுணையாக இருந்த இந்த அரசின் சுறுசுறுப்பான அமைச்சர் தம்பி ஸ்டாலினையும் நான் பாராட்ட, வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்கு ஒரு வார்த்தை – ஒரு வேண்டுகோள் – பாலத்தை நல்ல முறையிலே பயன்படுத்துங்கள் – பரவாயில்லை, பாலம் நன்றாக இருக்கிறது, மேலே மண்டபம் போல் விளங்குகிறது,

இங்கே கடை வைக்கலாம் என்று ஆரம்பித்து விடாதீர்கள். இதிலே போஸ்டர் ஒட்டலாம், இங்கே குடி கூட – குடி என்றால் குடும்பம் கூட நடத்தலாம் என்று ஆரம்பித்து விடாதீர்கள். அதற்கெல்லாம் இடம் கிடைக்கும். ஒவ்வொரு விழாவிலும் நான் பார்த்திருக்கிறேன். முரசொலி அலுவலகத்திற்கு முன்னால் உள்ள பாலத்தில் எத்தனை கடைகள்? எத்தனை குடும்பங்கள்? எத்தனை பேர் அங்கே வாழ்கிறார்கள் என்பதையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். அப்படியெல்லாம் செய்தால், நீங்கள் உங்களுடைய பொருளை, உங்களுடைய உடைமையை நீங்களே வீணாக்கிக் கொள்கிறீர்கள் என்று அதற்குப் பொருள். நமக்குள்ள கடமையை மறந்து விடக்கூடாது.

**ஒரு நாய்க்கு உள்ள அறிவு**

நேற்றுப் பாருங்கள் – டி.வி.யிலே காட்டினார்கள். கடற்கரையிலே ஒரு நாய் – அதற்கு ஜூலி என்று பெயரெல்லாம் வைத்திருக்கிறார்கள். அந்த நாய் என்ன செய்கிறது? கடலோரம் செல்கின்ற குழந்தைகள், கடல் அலையின் பக்கம் எந்தக் குழந்தை நின்றாலும், அந்த நாய் ஓடிச் சென்று அந்தக் குழந்தைகளில் சட்டையைப் பிடித்திழுத்து, தண்ணீருக்குள் சென்றால் விழுந்து அமுங்கி விடுவாய் என்ற எச்சரிக்கையை ஊமை மொழியிலே சொல்லி, அந்தக் குழந்தைகளை அழைத்துக் கொண்டு வந்து கரையிலே விட்டு விட்டுத் தான் போகிறது. ஒன்றல்ல, இரண்டல்ல, பத்துப் பதினைந்து குழந்தைகளை அது காப்பாற்றுகின்ற – அந்தப் பணியை அந்த நாய் செய்த போது நான் எண்ணிக் கொண்டேன். ஒரு நாய்க்கு உள்ள அறிவு நம்முடைய மனிதர்களுக்கு வரவில்லையே என்று நினைத்துக் கொண்டேன். அது வர வேண்டுமா? வேண்டாமா? வர வேண்டும். நாமும் மற்ற மனிதர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டும். இருக்கின்ற சுற்றுச்சூழல் அபாயங்கள் என்ன என்பதை மற்றவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அவர்களையெல்லாம் காப்பாற்றுகின்ற அந்தப் பண்பை, பண்பாட்டை, அந்த அன்பை, அந்தக் கருணைச் செயலை நாம் செய்தாக வேண்டும். நாம் மக்கள் பகுதியிலே இருப்பவர்கள் தான். நாம் மக்களிலே ஒரு பிரிவு தான். மக்களுக்காக நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டியவர்கள் தான். அதை மறந்து விடக்கூடாது. அப்போது தான் எல்லோரும் சேர்ந்தால் தான் என்னதான் மேயர் பணியாற்றினாலும், என்னதான் செயலாளர்கள் பணியாற்றினாலும், என்னதான் அமைச்சர் பெருமக்கள் பணியாற்றினாலும், என்னதான் காவல் துறையினர் பணியாற்றினாலும், என்னதான் நானே கூடப் பணியாற்றினாலும் நீங்கள் எல்லாம் ஒத்துழைக்கா விட்டால், அந்த ஒத்துழைப்பு கிடைக்காவிட்டால் பணி முழுமையாகாது. அந்தப் பணியை முழுமையாக ஆக்க வேண்டுமேயானால், இதையே நாம் செய்ய வேண்டும். நமக்கென்ன கவலை என்று இராமல் எல்லோருக்கும் கவலை உண்டு, எல்லோருக்கும் இதிலே பொறுப்பு உண்டு – ஒரு நாய் தன்னுடைய பொறுப்பை உணர்ந்து செயல்படும்போது, மனிதர்கள் நம்முடைய பொறுப்பை உணர வேண்டாமா என்று தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று உங்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று – இங்கே இந்தப் பாலம் கட்டிய இந்த நிலையைப் பார்க்கின்றேன். இதை கர்நாடகா அனுமதிக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் சென்னையிலே கட்டுகின்ற பாலத்தை கட்டாதே என்று சொல்லுகின்ற அந்தக் குணத்தை கர்நாடகா பெற்றிருக்கும் என்றே கருதுகின்றேன். கர்நாடகத்திலே இருக்கின்ற ஒரு "பிரகஸ்பதி" – ஒரு கட்சியின் தலைவர் – ஜனதா கட்சியின் தலைவர் – அவர் தேர்தலிலே நிற்க வாக்குகளைச் சேகரிக்க வேண்டுமென் பதற்காக ஒகேனக்கல் திட்டத்தை அங்கே கட்டக் கூடாது – ஒகேனக்கல் தங்களுக்குச் சொந்தம் என்று சொல்கிறார். அதற்கு தம்பி துரைமுருகனை விட்டே நான் பதில் சொல்ல முடியும். இருந்தாலும் நானே பதில் சொல்கிறேன் என்றால், தமிழ்நாட்டு மக்களுடைய சார்பாக ஆறு கோடி மக்களின் சார்பாக மட்டுமல்ல, இந்தியாவின் இறையாண்மை, கேள்விக் குறியாக ஆகியிருக்கிறதே, இப்படி ஆகலாமா என்று கேட்பவர்களின் சார்பாக நான் இந்தக் கேள்வியை கர்நாடக மாநிலத்திலே உள்ளவர்களுக்கு அல்ல – இந்தியாவை வழி நடத்துகின்ற அரசிடம் நான் கேட்க விரும்புகிறேன்.

**இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்றுங்கள்**

கடந்த நான்கைந்து நாட்களாக தமிழகத்தின் தலைவர்கள் – ஒவ்வொரு கட்சிகளின் தலைவர்களும் கர்நாடகத்தினுடைய இந்த வேடிக்கைக் கூற்றை எதிர்த்து அறிக்கைகள் விடுகிறார்கள், ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறார்கள், அணிவகுத்துச் செல்கிறார்கள். அவர்களை யெல்லாம் நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன், அவர்களின் தமிழ் உணர்வை நான் போற்றுகிறேன், புகழ்கிறேன். அதே நேரத்திலே நான் கர்நாடகத்திலே உள்ள வர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். எதை நீங்கள் தமிழகத்தார் உரிமையோடு செய்ய இது வரை வழி விட்டீர்கள்? காவேரியிலே இடைஞ்சல், அதைப் போலவே இன்றைக்கு ஒகேனக்கல் குடி தண்ணீர் – ஏற்கெனவே இதற்கான ஒப்பந்தம் எல்லாம்

போடப்பட்டு, கர்நாடக மாநிலத்தின் ஒப்புதலைப் பெற்று, மத்திய சர்க்காரும் சம்மதம் கொடுத்து, நிறைவேற்றப்படுகின்ற திட்டம் ஒகேனக்கல் குடிநீர் திட்டம். எங்களுக்கு குடகிலே இருந்து வருகின்ற தண்ணீர் தான் இல்லை என்றால், குடிநீருக்காக பயன் தருகின்ற ஒகேனக்கல் தண்ணீரும் கிடையாதென்று சொன்னால் என்ன ஆவது?

இன்று மாலையிலே பத்திரிகைகளில் எல்லாம் கொட்டையெழுத்துச் செய்திகள். தமிழ்நாட்டு பஸ்களையெல்லாம் உடைப்போம், உள்ளே விடமாட்டோம், ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்றினால் தமிழ்நாட்டு பஸ்களை எல்லாம் உடைப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். பஸ்களை அல்ல, எங்கள் எலும்புகளை உடைத்தாலும் சரி, நாங்கள் அதற்காக கவலைப்பட போவதில்லை, நிச்சயமாக ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம் என்பதை மாத்திரம் நான் இது தான் அதைச் சொல்லக்கூடிய சரியான சூழ்நிலை, வாய்ப்பு என்ற முறையிலே எடுத்துச் சொல்லி, இந்தப் பாலம் கர்நாடகத்திலே உள்ள காங்கிரஸ் கட்சி அல்லாத – கர்நாடகத்திலே உள்ள அ.தி.மு.க. அல்லாத – கர்நாடகத்திலே உள்ள கம்யூனிஸ்ட் கட்சி அல்லாத – மற்றக் கட்சிகளைக் கேட்கிறேன். அந்தக் கட்சிகள் எல்லாம் – தேர்தலிலே நிற்கின்ற ஜனதா கட்சியாக இருந்தாலும் அல்லது அதற்குத் துணைபோகின்ற கட்சிகளாக இருந்தாலும், அந்தக் கட்சிகள் எல்லாம் சிந்தித்துப் பார்க்கட்டும்.

இதை வைத்து தேர்தலை நடத்துவதென்றால் ஒரு தேசத்திலே ஒரு பகுதியை அழித்துவிட்டு, ஒரு பகுதி மக்களை பட்டினி போட்டுவிட்டு, அவர்களை தண்ணீரற்றவர்களாக ஆக்கிவிட்டு, அவர்களை தாகத்தால் தவிக்க விட்டு விட்டு அவர்களுடைய திட்டங்களையெல்லாம் சீர்குலைத்து விட்டு நீங்கள் வாழ முடியும் என்று கருதினால், நீங்கள் வாழலாம். ஆனால் இந்தியாவின் ஒற்றுமை வாழாது, இந்தியாவின் பலம் வாழாது. இந்தியாவின் இறையாண்மை வாழாது. அதற்கு வழி வகுக்காதீர்கள் – கர்நாடகத்திலே உள்ள அவசரக்காரர்களே – நான் என்னைப் பொறுத்த வரையிலே பல முறை இப்படிப்பட்ட பிரச்சினைகள் நம்முடைய மாநிலத்திற்கும், பக்கத்து மாநிலத்திற்கும் வந்தபோதெல்லாம் பொறுமை காத்திருக்கிறேன். கேரளாவிற்கும் நமக்கும் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வந்தது உண்டு.


அப்போதெல்லாம் இரு மாநில ஒற்றுமை, அங்கு வாழ்வோரும் நாம் தான் – இங்கு வாழும் அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் சகோதரர்கள் தான் –

**“இந்தியாவின் ஒற்றுமையின் பெயரால் கேட்கிறேன், ஒருமைப்பாட்டின் பெயரால் கேட்கிறேன், இறையாண்மையின் பெயரால் கேட்கிறேன். வெறும் இந்தத் தண்ணீருக்காக மாத்திரமல்ல, கண்ணீர் விட்டுக் கேட்கிறேன் – இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள், இந்தியாவை பலகீனப்படுத்தாதீர்கள்”**

கன்னடமும், களி தெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும் என்ற இந்த மொழிகளுக்குச் சொந்தக்காரர்கள் எல்லாம் சகோதரர்கள் தான். நமக்குள்ளே சகோதரச் சண்டை வேண்டாம் என்று கருதுகிறவன் நான். யாரோ சில சமூக விரோதிகள் இதைப் பெரிதாக ஆக்கி, இதைத் தீப்பற்றச் செய்து விடுவார்கள், அதற்கு இடம் தரக் கூடாது என்று தான் பொறுமையாக இருந்து வருகிறேன். என்னுடைய பொறுமைக்கும் எல்லை உண்டு. அந்த எல்லையை – மத்திய அரசு உணரும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எனவே மத்திய அரசு உடனடியாக தலையிட்டு, இன்றைக்கு அங்கே சிறு துளியாக இருக்கின்ற இந்தப் பகை உணர்வு வளராமல் பார்த்துக் கொள்ளவேண்டும். சிறு பொறி பெரும் தீயாக மாறாமல், பார்த்துக் கொள்ள வேண்டும். இதையெல்லாம் இந்தியாவின் ஒற்றுமையின் பெயரால் கேட்கிறேன், ஒருமைப்பாட்டின் பெயரால் கேட்கிறேன், இறையாண்மையின் பெயரால் கேட்கிறேன். வெறும் இந்தத் தண்ணீருக்காக மாத்திரமல்ல, கண்ணீர் விட்டுக் கேட்கிறேன் – இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள், இந்தியாவை பலகீனப்படுத்தாதீர்கள் என்று வேண்டுகோள் விடுத்து இந்த அளவோடு இந்த விழாவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

# பெருமழையால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண நிதி வழங்கிட ரூ.175 கோடி ஒதுக்கீடு

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை!



தமிழகத்தில் கடந்த மார்ச் மாதம் பெய்த பெரும் மழைக்கு விவசாயப் பயிர்கள், நெற்கதிர்கள், வாழை, தென்னை உள்பட பல்வேறு சேதங்கள் ஏற்பட்டன. உயிரிழப்புகளும் ஏற்பட்டன. இதைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உடனடி நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண உதவிகளும் உயிரிழந்தோர்க்கு நிதியுதவியும் வழங்கிட ஆணையிட்டார்.

இந்நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கிட ரூ.175 கோடி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்.

2008ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் பெய்த எதிர்பாராத பெருமழை காரணமாக விவசாயப் பயிர்கள் சேதமும், உயிரிழப்பும் ஏற்பட்டுள்ளன. இம்மழையினால் ஏறக்குறைய 47 ஆயிரம் எக்டேர் நெற்பயிர் மற்றும் இதர பயிர்களும் சேதமடைந்ததுடன்; 24 பேர் உயிரிழந்தனர். 800க்கும் மேற்பட்ட கால்நடைகளின் உயிரிழப்பும் ஏற்பட்டுள்ளது. இப்பெருமழையினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த மதிப்பீடுகள் அடங்கிய அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதற்கிடையே பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 100 கோடி ரூபாய் வழங்கி அரசு 25.3.2008 அன்று ஆணையிட்டுள்ளது. மேலும் இப்பெருமழையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவிடும் பொருட்டு சேதமடைந்த நெற்பயிருக்கு ஒரு எக்டேருக்கு ரூ.4000/– என்று தற்பொழுது வழங்கப்படும் நிவாரணத் தொகையினை ரூ.7,500/– என உயர்த்தி வழங்கவும், 2 எக்டேர் அளவிற்கு தான் வழங்க வேண்டும் என தற்பொழுதுள்ள வரம்பினை தளர்த்தி பாதிக்கப்பட்ட நிலம் எத்தனை எக்டேராக இருந்தாலும் அனைத்து நிலத்திற்கும், அனைத்துப் பயிர்களுக்கும் நிவாரண உதவி அளித்திடவும் அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் கால்நடைகள் இழப்பிற்கு நிவாரணம் வழங்க தற்பொழுது நடைமுறையில் உள்ள எண்ணிக்கை குறித்த உச்சவரம்பினை தளர்த்தி இறந்து போன அனைத்து கால்நடைகளுக்கும் நிவாரணம் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

தமிழக அரசின் கோரிக்கை அடிப்படையில், பாதிப்படைந்த பகுதிகளை பார்வையிட்டு, உரிய உதவி வழங்குவதற்குப் பரிந்துரை செய்வதற்காக நான்கு உறுப்பினர்கள் கொண்ட குழுவினை மத்திய அரசு அனுப்பி 6.4.2008 முதல் 9.4.2008 வரை பாதிப்படைந்த பகுதிகளை ஆய்வு செய்தது.

பாதிப்படைந்த விவசாயிகள், கால்நடைகளை இழந்து தவித்திடும் குடும்பங்கள் மற்றும் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்குவதற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட 100 கோடி ரூபாயுடன், கூடுதலாக 75 கோடி ரூபாய் ஆக மொத்தம் 175 கோடி ரூபாய் நிவாரண உதவியாக வழங்கிட முடிவு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 4.4.2008 அன்று ஆணையிட்டுள்ளார்.

# இந்தியாவிலேயே முதல்முறையாக அரவாணிகளுக்கும் உரிய உரிமைகள் வழங்கியது கலைஞர் அரசு

‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில நாளேடு பாராட்டு

மூன்றாவது பாலினம் என்று அழைக்கப் படும் அரவாணிகளுக்கு தமிழ்நாட்டில்தான் உரிய உரிமைகள் கிடைக்கின்றன என்றும், நாட்டிலேயே முதல்முறையாக அவர்களது பால் – ‘T’ என்று குறிப்பிட்டு குடிமைப் பொருள் வழங்கல் அட்டைகள் (Ration Cards) வழங்கியும், இதர உரிமைகளையும் அளித்து அங்கீகரித்துள்ளது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களது அரசுதான் என்றும் ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில நாளேடு பாராட்டியுள்ளது.

அந்த ஏட்டின் ஞாயிற்றுக்கிழமை வெளியீடான ‘சன்டே டைம்ஸ்’ 2008 மார்ச் 16ஆம் தேதி இதழில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் கட்டுரையின் தமிழாக்கம் வருமாறு:–

சமீபகாலம் வரை தமிழ்நாட்டின் சேலம் நகரைச் சேர்ந்த 25 வயதான பூஜா என்பவருக்கு அரசு ஆவணங்களில் அவர் வாழ்வதை நிரூபிக்க எந்த அத்தாட்சியும் இல்லாமல் இருந்தார். காரணம் அரவாணியாகிய அவர், விண்ணப்பங்கள் அனைத்திலும் ‘பால்’ என்ற பத்தியில் ஆண்/பெண் என்று இரண்டு வகைகளே குறிப்பிடப்பட்டிருப்பதால் தன்னை ஆண் என்றோ, பெண் என்றோ அடையாளப்படுத்திக் கொள்ள மறுத்து வந்ததுதான். ஆனால் தற்போது மாநில அரசு அவரை ஒரு தனிநபராக அங்கீகரித்து, அவருக்கு குடிமைப் பொருள் வழங்கல் அட்டை வழங்கியுள்ளது. அதில் ஆண்/பெண் என்பதற்கு உள்ள M/F என்பதற்குப் பதிலாக ‘பால்’ என்ற பத்தியில் அரவாணி (Transgender) என்பதை குறிக்கும் வகையில் ‘T’ என்ற எழுத்து குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் எடுத்துள்ள இந்த நடவடிக்கை இந்தியாவிலேயே முதல்முறையாக இந்தப் பிரிவினர் அரசால் அங்கீகரிக்கப்பட்டதாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் மட்டும்தான் பூஜா போன்றவர்கள் கடந்த மார்ச் 13ஆம் தேதி முதல் குடிமைப் பொருள் வழங்கல் அட்டைகளைப் பெறத் தொடங்கியுள்ளனர். இதனால் தற்போது தங்களை அரவாணிகள் என்று அடையாளப் படுத்திக் கொண்டிருக்கும் இச்சமூகத்தைச் சேர்ந்த 40 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களுக்கு குடிமைப் பொருள் வழங்கல் அட்டைகள் கிடைக்கும்.

இதன் மூலமாக இச்சமுதாயத்தினரின் மாற்றுப் பாலினம் என்ற தகுதிக்கு அங்கீகாரம் கிடைத்து அவர்கள் தங்களை ஆண்கள், பெண்கள் என்று கட்டாயத்தின் பேரில் அடையாளப்படுத்திக் கொள்ளாமல் அரசின் நல்வாழ்வுத் திட்டங்களின் பயன்களைப் பெறமுடியும்.

“இது சமுதாயத்தில் ஒதுக்கி வைக்கப்பட்ட இவர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டும் நடவடிக்கை ஆகும். அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களை நாம் ஒதுக்கித் தள்ளி விட முடியாது” என்று தமிழ்நாடு சமூகநலத் துறை அமைச்சரும், மகப்பேறு மருத்துவருமான டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா கூறினார். “மிகவும் எளிதாகச் செய்யக்கூடிய குடிமைப் பொருள் வழங்கல் அட்டை வழங்குவதுடன் நாங்கள் ஆரம்பித்துள்ளோம். கடவுச்சீட்டு (Passport), வாக்காளர் அடையாள அட்டை போன்ற இதர ஆவணங்களுக்கு மத்திய அரசின் கொள்கை முடிவு தேவைப்படுகிறது” என்றும் அவர் தெரிவித்தார்.

அரவாணிகள் கல்வி நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் போன்றவற்றில் அனுமதி பெறவும், விண்ணப்பிக்கும் போது பால் என்ற பத்தியில் T என்று குறிப்பிடவும் இந்த நடவடிக்கை வழி வகுக்கிறது. ஏற்கெனவே தமிழக அரசு கடந்த 2006ஆம் ஆண்டு டிசம்பர் 21–ஆம் தேதியன்று அரவாணிகள் மருத்துவக் கலந்தாய்வுக்குப் பின் இலவசமான பால்மாற்று அறுவை சிகிச்சையை (Sex reconstruction surgery) செய்து கொள்ள ஆணை வழங்கியுள்ளது.

இது நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கை என்றும் இந்தத் திட்டங்களுக்கு பெரும் வரவேற்பு இருப்பதாகவும் 'மக்கள் மேம்பாட்டு முன்முயற்சி' என்ற அரவாணிகளின் உரிமைகளுக்காகப் பாடுபட்டு வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனம் கூறுகிறது. சேலம் நகரில் மட்டும் அரவாணிகளிடமிருந்து குடிமைப் பொருள் வழங்கல் அட்டைகளுக்காக இருபதுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. "முதலில் வந்த 18 விண்ணப்பங்களுக்கு ஒரு நாளைக்குள் குடிமைப் பொருள் வழங்கல் அட்டைகள் விநியோகிக்கப் பட்டதை அறிந்து அவர்களும் விண்ணப் பித்துள்ளனர்" என்று அந்த தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த ஷீலா வின்சென்ட் என்பவர் கூறினார்.

குடிமைப் பொருள் வழங்கல் அட்டையை வாங்கிய பின் பூஜா கூறியது வருமாறு:-

"இந்தப் பச்சை அட்டை எனக்கு திடீரென்று நானும் இந்த சமுதாயத்தில் ஒரு அங்கம் என்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளது. இப்போது நான் எந்தவிதமான அசவுகரியமான கேள்விகளையும் சந்திக்காமல் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கலாம், வங்கியில் கணக்குத் திறக்கலாம்."

குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் அரவாணிகள் வாழும் வேலூர், நாமக்கல் போன்ற மாவட்டங்களில் இந்தப் புதிய ஏற்பாட்டுடன் குடிமைப் பொருள் வழங்கல் அட்டைகள் விநியோகம் ஆரம்பித்துவிட்டது என்று நுகர் பொருள் விநியோக ஆணையர் திரு. கே.ராஜாராம் கூறினார்.

இத்தகைய முன்முயற்சிகள் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக எடுக்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்கு உதவுவதற்காக அரவாணிகள் நல வாரியம் கூட மாநில அரசால் உருவாக்கப்பட்டுள்ளது.

சென்ற பிப்ரவரி 22ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்த சிறு, குறு தொழில்களுக்கான கொள்கையில் அரவாணிகள் தொழில் முனைவோராக உள்ள சிறு, குறு தொழில் நிறுவனங்களுக்கு கூடுதலாக ஐந்து சதவீதம் முதலீடு மானியம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ★


TNSC BANK

# 100 ஆண்டுகளைக் கடந்து மக்கள் சேவையில்

**TNSC வங்கி**

**தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,**

233, என்.எஸ்.சி.போஸ் ரோடு, த.பெ.எண்.226,
சென்னை - 600 001.
தொலைபேசி : 2534 0301, 2534 0304
தொலைநகல் : 044-2534 0508
மின்னஞ்சல் : tnscbank@vsnl.com

- தமிழ்நாட்டில் உள்ள அட்டவணையிடப்பட்ட ஒரே கூட்டுறவு வங்கி
- சென்னை நகரில் 46 கிளைகள்
- வைப்பீடுகளுக்கு அதிக வட்டி
- அனைத்துக் கிளைகளிலும் கணினி மூலம் துரித சேவை
- 5 கிளைகளில் ஏ.டி.எம். வசதி
- குறைந்த வட்டியில் நகைக்கடன்
- கூடுதல் சேவை நேரம்

வெளியீட்டு ஆணை எண் 1864/வரைகலை/விளம்பரம் 2007, நாள் : 11.10.2007

இணையதளம் : www.tnscbank.com

# பரிசோதனைக்காக ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வரும் கர்ப்பிணிப் பெண்களுக்கு இலவச மதிய உணவு

கர்ப்பிணிப் பெண்களின் உடல்நலம் பேணும் மற்றொரு திட்டமாக பரிசோதனைக்காக ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வரும் கர்ப்பிணிப் பெண்கள் அனைவருக்கும் இலவச மதிய உணவு வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

சோதனை முறையில் வேலூர் மாவட்டத்திலுள்ள சில ஆரம்ப சுகாதார நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் முறை குறித்து உள்ளூர் சுகாதார அலுவலர்களுக்கு ஆணைகள் அனுப்பப்பட்டு விட்டன.

தற்போது கர்ப்பிணிப் பெண்களுக்கு பிரசவத்திற்கு முன்பு மூன்று மாதமும், பிரசவத்திற்குப் பின்பு மூன்று மாதமும் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. ஸ்கேனிங் மற்றும் பல்வேறு விதமான பரிசோதனைகள் செய்யப்பட வேண்டியுள்ளதால் 'பரிசோதனை'க்காக வரும் ஒரு பெண் நான்கு மணி நேரம் சுகாதார நிலையத்தில், இருக்க வேண்டியுள்ளது."காலையில் பரிசோதனைக்காக வரும் ஒரு கர்ப்பிணிப் பெண் வெறும் வயிற்றுடன் வீடு திரும்பக்கூடாது. ஆகவே இந்தத் திட்டத்தைத் தொடங்க நாங்கள் முடிவு செய்துள்ளோம்"

இதற்கான உணவு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்திலேயே சமைக்கப்படும். இத்திட்டத்திற்கான செலவு அந்தந்த நோயாளிகள் நல்வாழ்வுச் சங்கங்களின் நிதியிலிருந்து செய்யப்படும். பொதுமக்களிடமிருந்து நன்கொடைகளை பெறவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இலவச மதிய உணவுத் திட்டத்தை பொதுமக்கள் பாராட்டுவார்கள். அவர்கள் விருப்பப்படியான ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நன்கொடைகள் வழங்க வரவேற்கப்படுகிறார்கள்" என்று மக்கள் நல்வாழ்வுத்துறை இயக்குநர் டாக்டர் பி.பத்மநாபன் அவர்கள் கூறினார்.

ஏற்கெனவே சில ஆரம்ப சுகாதார நிலையங்கள் இத்திட்டத்தை நிறைவேற்ற சமையல் பாத்திரங்களை வாங்கிவிட்டன. இதை நடைமுறைப்படுத்துவதற்கு மகளிர் சுயஉதவிக் குழுக்களின் உறுப்பினர்களது உதவிகளைப் பெறும்படி சுகாதார அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் குழந்தைகளை பிரசவித்த தாய்மார்களுக்கு அங்கு தங்கியுள்ள நாட்களிலும் இலவச உணவு வழங்கப்படும். ★



சென்னை பூங்காநகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மக்களுக்கு மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார். வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியன், துணை மேயர் திருமதி. ஆர். சத்தியபாமா மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடன் உள்ளனர்.

# சென்னை மாநகரில் மூன்றாவது கட்டமாக

# 50,246 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படவுள்ளன.

## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தகவல்



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆயிரம் விளக்கு, பெரம்பூர் சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெற்ற இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் விழாவில் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கிப் பேசுகையில், "தலைவர் கலைஞர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத வீட்டிற்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் என்று அறிவித்து, அதன்படி தலைவர் கலைஞர் அவர்கள்


**எஸ். செல்வராஜ்,**
மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாநகராட்சி


2006ஆம் ஆண்டு அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாளன்று, காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அருகில் உள்ள கரசங்கால் கிராமத்தில், தந்தை பெரியார் நினைவு சமத்துவபுர பயனாளிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை இலவசமாக வழங்கி தொடங்கி வைத்தார்கள். முதற்கட்டமாக ரூ. 9 கோடி செலவில் தமிழகம் முழுவதும் 30 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

இதில் சென்னை மாநகரில் மட்டும் 3,472 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டன. இரண்டாவது கட்டமாக 15.2.2007 அன்று திருவள்ளூர் மாவட்டம் பம்மதுகுளம் கிராமத்தில் தலைவர் கலைஞர் அவர்களால் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் 10,000 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டன. இரண்டாவது கட்டமாக தமிழகத்தில் 25 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டன. சென்னையில் உள்ள 14 சட்டமன்றத் தொகுதிகளிலும் இரண்டு கட்டமாக பொதுமக்கள் பயனடையும் வகையில் 1,13,426 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

மூன்றாவது கட்டமாக 750 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மேலும் 30 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்வதற்காக தமிழக சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. ஆனால், ஒப்பந்தங்களின் மூலம் சேமிப்புத் தொகையாக ரூ.163 கோடி கிடைத்தது. இந்த உபரித் தொகையின் மூலம் மேலும் கூடுதலாக 4,25,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்குவதற்கு முதல்வர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டு தற்போது 34,25,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படுகிறது. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் முதல்வர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் நேரடியாக ஒப்பந்தங்கள் தேர்வு செய்யப்பட்டது. அப்போது பங்கேற்ற தொலைக்காட்சிப் பெட்டிகள் தயாரிக்கும் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் தாங்கள் இதுபோல் எந்த இடத்திலும் முதல்வர் அவர்களே உட்கார்ந்து ஒப்பந்ததாரர்களைத் தேர்வு செய்யும் முறைக் கண்டதில்லை எனப் பாராட்டினார்கள்.

மூன்றாவது கட்டமாக சென்னை மாநகரைப் பொருத்தவரை 14 சட்டமன்றத் தொகுதிகளிலும், 50,246 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட உள்ளன. அதன்படி, சேப்பாக்கம் தொகுதியில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் சேப்பாக்கம், திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கியுள்ளார்கள். அதன் தொடர்ச்சியாக இன்றைய விழாவில் ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியில் 3,200 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும், பெரம்பூர் தொகுதியில் 3,750 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் வழங்கப்படுகிறது.

அதுமட்டுமல்லாமல், சென்னை மாநகரில் உள்ள இதர சட்டமன்றத் தொகுதிகளான ஆர்.கே.நகர் தொகுதியில் 4,175, துறைமுகம் தொகுதியில் 2,562, பூங்கா நகர் தொகுதியில் 1,681, இராயபுரம் தொகுதியில் 2,580, புரசைவாக்கம் தொகுதியில் 4,380, அண்ணாநகர் தொகுதியில் 4,000 எழும்பூர் தொகுதியில் 1,904, தியாகராயநகர் தொகுதியில் 4,500, சைதாப்பேட்டை தொகுதியில் 3,203 மற்றும் மைலாப்பூர் தொகுதியில் 5,120 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இந்த மாதத்திற்குள் மத்திய, மாநில அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர் ஆகியோரால் வழங்கப்பட உள்ளது. சென்னை மாநகரத்தில் மட்டுமல்லாமல், தமிழகத்தின் பல பகுதிகளில், பல நகரங்களில், பல கிராமங்களில் இந்த இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதற்கு அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த உயர்நிலைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் இக்குழு செயல்படுகிறது. 11 முறை தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் குறித்து உயர்நிலைக் கூட்டம் நடைபெற்றுள்ளது. இந்தக் குழுவில் உள்ளாட்சித் துறை அமைச்சர் என்ற முறையில் நானும், காங்கிரஸ் கட்சி சார்பில் திரு. சுதர்சனம் அவர்களும், பா.ம.க. சார்பில் திரு.கோ.க.மணியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பில் திரு.கோவிந்தசாமியும், இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் திரு.சிவபுண்ணியமும், விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் திரு. செல்வப்பெருந்தகையும், புரட்சி பாரதம் சார்பில் திரு.ஜெகன்மூர்த்தியும் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர். ஆனால் பிரதான எதிர்கட்சியான அ.தி.மு.க. இடம் பெறவில்லை. அதே போல் தே.மு.தி.க. சார்பில் யாரும் உறுப்பினர்களாக இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அக்கட்சிகளுக்கு கடிதம் எழுதி உறுப்பினர்களாக சேருமாறு கோரினார்கள். அதற்கு ஜெயலலிதா அவர்களும், விஜயகாந்த் அவர்களும் இந்தத் திட்டத்தை எதிர்ப்பதாகவும் தாங்கள் உறுப்பினர்களாக இடம் பெற விரும்பவில்லை எனவும் தெரிவித்துள்ளார்கள். அவர்கள் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதை எதிர்த்துள்ளார்கள் என்பதை பொதுமக்கள் அறிந்துகொள்ள வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்பிரமணியன், ஆணையாளர் திரு.ராஜேஷ் லக்கானி, கூடுதல் ஆணையர் திருமதி காகர்ல உஷா, சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. மகேந்திரன், துணை மேயர் திருமதி ஆர்.சத்திய பாமா, மன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு.நா.இராமலிங்கம், எதிர்க் கட்சித் தலைவர் திரு.சைதை ப.ரவி, மண்டலக் குழுத் தலைவர்கள் திரு.மா.பா. அன்புதுரை, ம.கன்னியப்பன், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) திருமதி. ஜே. ஜானகி, மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

★



சென்னை – தமிழரசு அச்சகத்தில் வடிவமைக்கப்பட்டு ...

# கோ-ஆப்டெக்ஸின் கோலாகலம்
# பருத்தி பட்டின் கோடி அழகு



**கோ-ஆப்டெக்ஸ்**
வழங்குகிறது
**20%**
அரசுத் தள்ளுபடி

குளிர்ச்சியான கோ-ஆப்டெக்ஸ் வண்ணங்களால் உங்கள் வாழ்வை இன்பமயமாக்குங்கள்.

கோ-ஆப்டெக்ஸின் கண்கவர் பட்டு, பருத்தி, ஆடைகளுக்கான துணிவகைகள் 20% அரசுத் தள்ளுபடியுடன்.

வாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!

**புதிய வருகை**

"அழகு மயில்" பட்டுப் புடவைகள் "மருதம்" கலப்பிழை பட்டுப் புடவைகள் "கோலங்கள்" கலப்பிழை பட்டுப் புடவைகள்
"மாந்துளிர்" பருத்திப் புடவைகள் "மலையரசி" பருத்திப் புடவைகள் "நாச்சியார்" பருத்திப் புடவைகள் "திருவரங்கம்" பருத்திப் புடவைகள்
"மல்லிகை" பருத்திப் புடவைகள் "கிரி" பருத்திப் புடவைகள் "அரோமா" நறுமண சட்டைகள்

தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

வெ.ஆ.எண்.219/வரைகலை/விளம்பரம்/2008 நாள் : 6.2.2008

R.N.I. No:21446/70-Regn.No.TN/ARD/49/06-08
TN/PMG(CCR) WPP-518/06-08



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் தலைமையில், 22-3-2008 அன்று, சென்னை தலைமைச் செயலகத்தில், மழை, வெள்ளம் குறித்த அவசரக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு பேரவைத்தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன், மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. என். சுரேஷ்ராஜன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. கே. பி. பி. சாமி, தலைமைச் செயலாளர் திரு. எல். கே. திரிபாதி, இ. ஆ. ப., வருவாய் நிருவாக ஆணையாளர் மற்றும் சிறப்பு ஆணையாளர் திரு. சக்திகாந்த தாஸ், இ. ஆ. ப., மற்றும் பொதுத்துறை, நெடுஞ்சாலைத்துறை, வருவாய்த்துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

தமிழரசு